புதியமுறை
எளியவுரை

# தண்டியலங்காரம்



தமிழண்ணல்

# தண்டியலங்காரம்

புதிய முறை எளியவுரை

தமிழண்ணல்

செல்லப்பா பதிப்பகம்

மயூரா வளாகம்

48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி : அலுவலகம் : 2345971 வீடு : 2560517

செல்லப்பா முதற் பதிப்பு : சூலை, 2012

உரிமை : உரையாசிரியர்க்கு

விலை ரூ. **70.00**

## நூலைப்பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தண்டியலங்காரம் |
| உரை ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | சூலை, 2012 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 'டெமி' - அளவு |
| மொத்தப்பக்கம் | : | 152 |
| நூலின் விலை | : | ரூ. **70.00** |
| அச்சிட்டோர் | : | கணபதி பிராசஸ், சென்னை-5. |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஐ கேட்சர், மதுரை |

**CHELLAPPA PATHIPPAGAM**
Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: chellappapathippagam@hotmail.com

## நூன்முகம்

தண்டியலங்காரம் தமிழ்நூல் அடிப்படை மரபும் வடமொழி மரபும் கலந்து, எழுதப்பெற்றுளது.

இதில் வரும் வடமொழி அணிப் பெயர்கள் எளிதில் விளங்காதவை. மேலும் உள் வகைகளாக விவரிப்பன ஒருசில மட்டுமே சிறப்பாகப் புலப்படுபவை. பிற உள் வகைகளை ஒருமுறை படித்து, விடுதல் போதுமென்று சுருக்கமாகத் தரப்பெற்றுளது. மேலும் ஓரணி, பிற அணிகளோடு கலந்து வருவனவாகக் கூறியிருப்பனவும் அத்துணைப் பாகுபாடு அறியக் கூடியன அல்ல. இவை ஆய்வாளர்க்கு வேண்டுமேல் பயன்படலாம்.

பொருளணிகளே முக்கியமானவை. நெறி எனப்படும் பொதுவணியியற் பகுதிகளும் சிலவே தமிழ் மரபிற்கு ஒத்தவை. சொல்லணியியலில் சித்திர கவிகள் புதிய முறையில் அணுகத்தக்கன. இதில் மடக்கணிகள் கடினப்படுத்தப் பட்டுள்ளன. இவை இலக்கிய இன்பம் தருவதை விடப் புலவனின் சாதுரியத்தை விளக்கப் பயன்படுவன. தமிழில் வரும் மடக்கணிகள் அழகும் சுவையும் இனிமையும் உடையன.

எனவே இந்நூலில் தேவையுள்ளவை மிக விரிவாகவும் ஒரு முறைக்கு இருமுறையும் விளக்கப்பட்டுள்ளன. ஏனையவை சுருக்கமாக உரை நடையில் தரப்பட்டுள்ளன. எதனையும் விடவில்லை.

புதிய முறையில் தமிழ்நூல் அணி இலக்கணம்படைக்கும் காலம் வரும். அதுவரை இந்நூல் பயன்படும்.

தண்டி தமிழ்நூல் கற்றவர் என்பதும் பழைய உரையாசிரியர் தமிழ்வல்லுநர், தமிழார்வலர் என்பதும் மகிழ்ச்சி தருவனவாகும். வடமொழி வல்லாண்மைக் காலத்தில் எழுதப்பட்டதால், காலத்திற்குக் கட்டுப்பட்டு எழுதப்பெற்ற நூல் இது. இந்நூலில் வரும் எடுத்துக்காட்டு வெண்பாக்கள் தனிச்சிறப்புடையவை. பாலிற் கலந்துள்ள நீரைப் பிரித்தறிய வல்ல தமிழ் இலக்கியம் பயிலும் இளையோர், 'வந்தது கொண்டு வாராதன முடிப்பர்' என்ற நம்பிக்கை ஒளி தோன்றுகிறது. அதற்கு இந்நூல் வழிகாட்டும்.

*ஏரகம்*
*சதாசிவநகர்*
*மதுரை 625020*

தமிழண்ணல்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மாணவர்களுக்கு அணியிலக்கண அறிமுகம் | 5 |
| 2. | சிறப்புப் பாயிரம் | 7 |
| 3. | பொதுவணியியல் - இயல் கருத்து நிரல் | 9 |
| 4. | பொதுவணியியல் | 13 |
| 5. | பொருளணியியல் - இயல் கருத்து நிரல் | 30 |
| 6. | பொருளணியியல் | 38 |
| 7. | சொல்லணியியல் | 127 |
| 8. | வழுக்களும் வழுவமைதிகளும் | 139 |
| 9. | மலைவுகள் | 145 |
| 10. | நூற்பா முதற்குறிப்பு அகரநிரல் | 151 |

# மாணவர்களுக்கு
# அணி இலக்கண அறிமுகம்

## 1. தமிழில் அணி இலக்கண நூல்கள் யாவை ?

தமிழில் எழுத்து சொல் பொருள் என மூவகையாகவே இலக்கணம் பிரிக்கப்பெற்றிருந்தது. பொருள் என்பதிலேயே யாப்பும் அணியும் கூறப்பட்டன. தொல்காப்பியமே இதற்குச் சான்று, பின்பு யாப்பும் அணியும் தனிப் பிரிவாக எழுதப்பட்டன. இதனால் ஐந்திலக்கணம் எனும் பெயர் தோன்றியது.

வீர சோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் என்பன போலும் ஐந்திலக்கண நூல்கள், யாப்பையும் அணியையும் தனியே பிரித்து இலக்கணம் வகுத்தன. பின்னர் யாப்பிலக்கணத்திற்குத் தனிச்சிறு நூல்களும் அணியிலக்கணத்திற்குத் தனிச்சிறு நூல்களும் பாடநூல்கள் போல, சமண முனிவர் களாலும் பிறராலும் நிரம்ப எழுதப்பட்டன. அவற்றுள் சிலவே கிடைக்கின்றன. அணியிலக்கணத் திற்குத் தண்டியலங்காரம், மாறனலங்காரம் அணியிலக்கணம் போல்வன தோன்றின. தென்னாட்டு அப் பைய தீட்சிதரின் குவலயானந்தம், சித்திர மீமாம்சை போல்வன தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றன.

## 2. தமிழில் அணி இலக்கணம் இடம் பெறாதது ஏன் ?

சங்கப் பாடல்களில் அணி நலன்கள் குவிந்து கிடக்கின்றன. இந் நூலாசிரியரின் 'சங்க இலக்கிய ஒப்பீட்டு, நூல்களைப் படித்து அறியலாம். தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணி எனக் கொண்டு, தனியியல் வகுத்தார். மெய்ப்பாடு, உள்ளுறை, இறைச்சி, வண்ணம், வனப்பு, நோக்கு, முன்னம், முரண்தொடை, அங்கதம், வாழ்த்துவகை, பொருள்கோள், அகத்திணைக் கூற்றுக்கள், புறத்திணைத் துறைகள், காலம், களம், நாடக வழக்கு என அவர் கூறிச் செல்வன யாவும் அணி வகைகளே. ஆனால் அவற்றை பாடலின் பொருளைச் சிறப்பிக்கும் அதன் உடற் கூறுகள் போலவும் நடை வேறுபாடுகள் போலவும், வெளிப்படுத்தும் புலப் பாட்டுத்திறன்கள் போலவும் கொண்டாரேயன்றி, தொல்காப்பியர் பிரித்து அணிகளாக நோக்க விரும்பவில்லை, அவர் கோட்பாடு அது.

இன்றைய நிலைக்கு ஏற்ப, சங்கப்பாடல்கள், தொல்காப்பியம், உரையாசிரியர்கள் ஆகிய இம் மூன்று அடிப்படையில், தமிழுக்கேயுரிய ஓர் அணியிலக்கண நூல் எழுத இயலும்.

## 3. தண்டி ஆசிரியர் யார் ? அவர் எழுதிய இந்நூலின் திறன் யாது ?

தண்டியும் அப்பைய தீட்சிதரும் தென்னாட்டவரே. அவர்களின் நூல்களில் தமிழ் இலக்கியத் தாக்கமும் உண்டு எனலாம். தண்டி வட மொழியிலும் தமிழிலும் தம் நூலை எழுதினார் என்பர். பலர் தமிழ்த் தண்டியாசிரியர் வேறு ஒருவர் என்பர்.

வடமொழியில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பாமகரின் காவியாலங்காரமும், தண்டியின் காவியா தரிசமும் தோன்றின. வட மொழித் தண்டி 32 அணிகளையேகூறியிருக்கவும் கி.பி. 16 ஆம் நூற்றாண்டினரும் தென்னாட்டவருமான அப்பைய தீட்சிதர் 125 அலங்காரங்களைக் குறிப்பிடுகின்றார்.

தமிழில் எழுதிய தண்டியாசிரியர் வடமொழிப் புலமையோடு தமிழ்ப் புலமையும் கொண்டவர் என்று தோற்றுகிறது. இந்நூலினை யாத்த அவரே, உதாரணச் செய்யுட்களாகிய வெண்பாக்களையும் பாடியுள்ளார். இவர் கம்பரின் மகனாகிய அம்பிகாபதியின் மகன் என்று இந்நூற் சிறப்புப் பாயிரம் கூறுகிறது. இவர் சோழ நாட்டவர். இந்நூலை இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அரங்கேற்றியுள்ளார். இந்நூல் எடுத்துக் காட்டு வெண்பாக்களில் 45 இடத்தில் சோழன் பற்றிய பொதுப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஆறு பாடல்களில் 'அனபாயன்' என்ற அவனதுபட்டப்பெயரும் அவன் கலிங்க நாட்டை வென்றதும் கூறப்பட்டுள்ளன. அனபாயன் எனும் பட்டப்பெயருடைய இரண்டாம் குலோத்துங்கனது காலமாகிய கி.பி 12 ஆம்நூற்றாண்டே இவரது காலமும் ஆகும் என்பது முது பெரும்புலவர் மு. சண்முகம் பிள்ளை கருத்தாகும்,

இதில் வடமொழித்தாக்கம் மிகுதி. காரணம் இடைக்காலத்தே எதனையும் 'சமற்கிருதமயமாக்கும்' போதை மிக்கிருந்ததே. சுப்பிரமணிய தேசிகர் என்பார் எழுதிய பழைய உரையே இந்நூலை விளங்கவைத்தது. அவர் சிறந்த தமிழ்ப் புலமை மிக்க தமிழார்வலராகக் காணப்படுகிறார் இன்று தோன்றும் உரைகளுக்கெல்லாம் அவர் உரையே வழிகாட்டியாக அமைந்தது.

## சிறப்புப்பாயிரம்

வடதிசை இருந்து தென்மலைக்கு ஏகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப்பியநெறி பல்காப் பியத்தும்
அணிபெறும் இலக்கணம் அரிதினில் தெரிந்து
வடநூல் வழிமுறை மரபினின் வழாஅது
ஈரிரண்டு எல்லையின் இகவா மும்மைப்
பாரத இலக்கணம் பண்டிதர் தழீஇத்
திருந்திய மணிமுடிச் செம்பியன் அவையத்து
அரும்பொருள் யாப்பின் அமைவுற வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடகம் நவிற்றும்
வடநூல் உணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பிகாபதி
மேவரும் தவத்தினில் பயந்த
தாவரும் சீர்த்தித் தண்டிஎன் பவனே

வடதிசையிலிருந்து தென்திசை வந்தவர் அகத்தியர். இந்தியா முழுவதும் தமிழகமாக இருந்த காலம் அது. அவரிடம் தமிழ் கற்றவர் பன்னிருவரில் தொல்காப்பியரும் ஒருவர். அவரது தொல்காப்பிய நெறி, பல இலக்கியங்களிலும் காணப்படுவதைக் கற்றறிந்து, வடநூல் மரபு வழியையும் கலந்து இந்நூல் எழுதப் பெற்றுளது. ஈரிரண்டு எல்லை - நான்கு எல்லைக்குட் பட்ட பாரத இலக்கணம் - இவ்வாறு வடமொழி, தென்மொழி கலந்த இவ் இலக்கணம் பாரத இலக்கணம் எனப்பட்டது. செம்பியன் - சோழன். அனபாயன் எனும் சிறப்புப் பட்டம் பெற்ற இரண்டாம் குலோத்துங்கன். அவனது அவையத்தில் இது அரங்கேற்றப் பெற்றது. அம்பிகாபதி மகன் என்பதால் கம்பருக்குப் பேரன் என்பர். 'வடநூல் உணர்ந்த தமிழ் நூற் புலவன்', தண்டி எனும் பெயருடைய இவ்வாசிரியன்.

இந்நூலுக்குப் பொருத்தமாகக் காணப்படும், இச்சிறப்புப் பாயிரத்தை எழுதியவர் யார், எக்காலத்தவர் எனத் தெரியவில்லை.

# தண்டியலங்காரம்

## 1. பொதுவணியியல்

### இயல் கருத்து நிரல்

**கலைமகள் வணக்கம்**

0. கலைமகளின் இணையடிகளை மனத்தால் வணங்கி, இலக்கியத்திற்குரிய அணியிலக்கணத்தைச் சொல்லப் புகுகின்றேன்.

**செய்யுள் வகை**

1.0. செய்யுள் அல்லது இலக்கியம் முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள், தொகைநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் என நான்கு வகைப்படும்.

1.1. முத்தகச் செய்யுள் தனியே நின்று ஒரு பொருள் தந்து முடியும்.

1.2. குளகச் செய்யுள் பல பாடல்கள் வந்து ஒரு வினை முடிவு கொள்ளும்.

1.3. தொகை நிலைச் செய்யுள் ஒருவர் அல்லது பலர் பாடிய பல பாடல்களின் தொகுப்பாகும். அது பொருள், இடம் (திணை அல்லது நிலம்), காலம் (பருவம்), தொழில் (ஒழுக்கம் - உரிப் பொருள்) ஆகியவற்றால் பெயர் பெறும். மேலும் பாட்டாலும் எண்ணிக்கை அளவாலும் பெயர் பெறுவனவாம். ஒருவர் பாடிய தொகை திருக்குறள். பலர் பாடிய தொகை அகநானூறு. புறப் பொருள் பற்றிய தொகை புறநானூறு. இடத்தால் தொகுத்தது கள வழி நாற்பது, கலிங்கத்துப்பரணி. காலம் - பருவத்தால் தொகுத்தது கார் நாற்பது. தொழில் - உரிப்பொருளாம் ஒழுக்கத்தால் தொகுத்தது ஐந்திணை ஐம்பது. பாட்டால் தொகுத்தது - கலித்தொகை, பரிபாடல், அளவால் தொகுத்தது - குறுந்தொகை, நெடுந் தொகை.

1.4. தொடர்நிலைச் செய்யுள் பொருள் தொடர்நிலைச்செய்யுள் என்றும் சொல் தொடர்நிலைச் செய்யுள் என்றும் இருவகைப்படும்.

மூன்றாவதாக சொற்பொருள் தொடர்நிலைச் செய்யுளும் கொள்ளவேண்டும். என்பர் உரையாசிரியர். கம்பராமாயணம் - பொருள் தொடர்நிலைச் செய்யுள். அந்தாதி, கலம்பகம் - சொல் தொடர் நிலைச் செய்யுள் வகையாகும்.

**பொருள் தொடர்நிலைச் செய்யுள் வகை:-**

1.5. பொருள் தொடர்நிலைச் செய்யுள் பெருங்காப்பியம், காப்பியம் எனும் இருவகைப்படும்.

1.5.1. **பெருங்காப்பியம்:** இது வாழ்த்து, வணக்கம் உரைக்கப் போகும் பொருளில் தெடாங்கும். அறம் பொருள் இன்பம் வீடு பயப்பதாகும். தன்னிகரில்லாத தலைவன், தலைவியை உடையதாகும். மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசுடர் எனப் பல வருணனைகள் இடம் பெறும் திருமணம், முடிசூட்டல், பொழிலாட்டு, புனல் விளை யாட்டு, மக்கட்பேறு, புலவி, கலவி (கூடுதல்) என இத்தகைய நிகழ்வுகள் பாடப்பெறும். மந்திர ஆலோசனை, தூது, படை யெடுப்பு, போர், வெற்றி என்பன நிரல்படப்புனையப்படும். சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் (படலம்) போலும் உட்பகுப்புக் கள் இருக்கும். எண் சுவையும் மெய்ப்பாடும் பெற்று, கற்றவர் புனைந்துபாடும் பெற்றியதே, பெருங்காப்பியம். (பெரியபுராணம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலியன).

1.5.1.1. மேலே கூறிய பெருங்காப்பிய உறுப்புக்களில் ஒருசில குறை யினும், அதனால் வேறுபாடெதுவுமில்லை.

**காப்பியம்**

1.5.2. காப்பியம் என்பது சிறிய அளவினது; சிற்றிலக்கிய வகை சார்ந்தது. ஒரே வகைப் பாடலாலும் அல்லது பல வகைச் செய்யுள் களாலும் வரும்; இடையிடையே உரைநடையும் பாட்டுமாய் விரவியும் வரும். (சிற்றிலக்கிய வகை: பிள்ளைத் தமிழ், பரணி போல்வன. உரை விரவி வருவன தகடூர் யாத்திரை, பெருந் தேவனார் பாரதம் என்பர். சிலப்பதிகாரம் உரையும் பாட்டும் விரவிய பெருங்காப்பியம்). ஐஞ்சிறு காப்பியங்களும் உள.

1.6. ஒரு செய்யுளின் அந்தம் (இறுதி), அடுத்த செய்யுளின் ஆதியாக வரும் அந்தாதி சொற்றொடர்நிலைச் செய்யுளெனப்படும்.

## செய்யுள் நெறி

2.0 விரித்துப் பாடும் செய்யுளாம் இலக்கியத்திற்கு வைதருப்ப நெறி, கௌட நெறி என இரண்டு வகை நெறிகள் உள. (இவை விதர்ப்பநாட்டார் போற்றிய வைதருப்பம், கௌடநாட்டார் போற்றிய கௌடம், பாஞ்சால நாட்டார் போற்றிய பாஞ்சாலி என வடமொழி இலக்கியங்களிற் காணப்படுவன. அவற்றில் இரண்டை இங்கே கூறுகிறார். இவற்றிற்குக் கூறப்படும் பத்துக் குணங்களை அறிந்தால் போதும்.)

## வைதருப்பநெறி

2.1. செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனும் பத்துக் குணங்களையும் உயிராகவுடையது வைதருப்ப நெறி.

## கௌட நெறி

2.2. கௌட நெறி என்பது மேலே கூறிய பத்துக் குணங்களுடனும் கூடாது நடக்கும் கொள்கையுடையது என்பர். 'பத்தொடும்'– எனும் முற்றும்மையை, எச்சவும்மையாக்கிச் சில ஒற்றுமைப் பட்டு வரவும்கூடுமென்பர்.

### செய்யுள் நெறி
### பத்துக்குணங்கள்

| 2.3. | வைதருப்ப நெறி | கௌட நெறி |
|---|---|---|
| 1. | செறிவு – நெகிழ்வான ஓசையின்மை | கடினமான ஓசையுடைமை |
| 2. | தெளிவு – பொருள் எளிதில் புலப் படுதல் | அரிதுணர் புலப்பாடு |
| 3. | சமநிலை – பல இன எழுத்தும் விரவத் தொடுப்பது | வல்லின வகையே வேண்டுவர் |
| 4. | இன்பம் – சொல்லும் பொருளும் சுவை படல் | சுவையை மிகைபட வேண்டுவர் |
| 5. | ஒழுகிசை – வெறுப்புண்டாக்கும் இன்னாத ஓசை இல்லாது தொடுப்பது | இவர்க்கும் இது உடன்பாடு |

| | | |
|---|---|---|
| 6. | உதாரம் - குறிப்பிற் பொருள் தரப்பாடுவது | இதுவும் இருவர்க்கும் உடன்பாடு |
| 7. | உய்த்தலில் பொருண்மை - கருதிய பொருளைத்தர, உரிய சொற்கள் அனைத்தையும் உடையவை - எளிமை மிக்கவை. உய்த்துக்கொண்டு ஆராய்ந்து அறிய வேண்டாத பொருளுடைமை | உய்த்துணருமாறு படைக்கப்படுவன |
| 8. | காந்தம் - உலக இயல்பைக் கடவாது புகழ்வது காந்தம் | உலக இயல்பைக் கடந்து புகழ்வது |
| 9. | வலி - தொகைத் தொடர்கள் மிகுதியாக வரும். | மிகக் கூடுதலாகத் தொகைத் தொடர்கள் வர விரும்புவர் |
| 10. | சமாதி - உரிய பொருளுக்குரிய வினை முதலானவற்றை விடுத்து, ஒப்புமையுடைய வற்றைச் சேர்த்துச் சொல்வது இது. ஒப்புமை பற்றி, அடைகளை ஏற்றிச் சொல்வதுண்டு. (கதிரவன் இருளைப் பருகினான் எனல் - பருகுதல் வினை ஒப்புமையால் இங்கு வந்தது. 'கன்னிஎயில்' என்று மதிலைத் குறிப்பதும் இதுவே.) | இதிலும் கௌடர்க்கு உடன்பாடு |

மேலே கூறியவற்றைக் குணவலங்காரம், குணவணிகள் என்றும் கூறுவர்.

## புறனடை

3. செய்யுளுக்குப் (இலக்கியத்திற்கு) பொருந்திய அணிகள் அனைத்தையும் முழுவதும் உணர்த்துதல் அரிதாகும். எனவே இங்கு காட்டிய நெறியைக் கடைப்பிடித்து, எதிர்காலத்தில் வருவனவற்றையும் இங்கு கூறாதவற்றையும் கூட்டி உணர்தல் கற்றறிந்த பெரியோர் கடமையாகும்.

# பொதுவணியியல்

## கலைமகள் வணக்கம்

1. சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி
சிந்தைவைத்து இயம்புவல் செய்யுட்கு அணியே

மொழியின் பெருமைக்கு உரிமையுடைய கலை மகளின் மென்மைமிகு இணையடிகளை, மனத்தில் வைத்து வணங்கி, செய்யுட்கு - இலக்கியத்திற்கு உரிய அணி இலக்கணத்தைக் கூறத் தொடங்குகின்றேன்.

## நூல்

## 1. செய்யுள் வகை

2. செய்யுள் என்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகைதொடர் நிலைஎன
எத்திறத் தனவும் ஈரிரண் டாகும்

செய்யுள் என்பன, எவ்வகைப் பட்ட பாவாக இருந்தாலும், முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள், தொகைநிலைச் செய்யுள், தொடர் நிலைச் செய்யுள் என நான்கு வகைப்படும்.

முத்தகம், குளகம் என்பன வடசொற்கள். தொகை, தொடர் நிலை இரண்டும் தமிழ்ச் சொற்கள்.

### முத்தகச் செய்யுள்

3. அவற்றுள்,
முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்

முன்னே சொன்ன நான்கனுள் முத்தகச் செய்யுள் தனியே ஒரே ஒரு பாடலாக மட்டும் நின்று, ஒரு பொருள் தந்து, முடிந்து விடும்.

என்னேய், சில மடவார் எய்தற்கு எளியவோ?
பொன்னே! அனபாயன் பொன்னெடுந்தோள் - முன்னே
தனவேஎன்று ஆளும் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு.

பொன்போன்றவளே! முன்பே தன்னுடையதே என்று வெற்றித் திருமகள், மூங்கில் வளர்ந்த மலையனைய, அனபாயச் சோழனின் தோள்களைத் தழுவிக் கொண்டனள். எனவே என் போன்ற எளிய மகளிர்க்கு அத்தோள்களைத் தழுவுதல் எளிதாகுமோ?

என் ஏய் - என் போன்ற. புனவேய் - காட்டு மூங்கில். பொருப்பு - மலை. இங்ஙனம் இந்நூலிலுள்ள 415 எடுத்துக்காட்டு வெண்பாக்களில், 45 பாக்களில் சோழமன்னன் பெயருளது. அவற்றுள் ஆறில் ‘அனபாயன்’ எனும் பட்டப்பெயருடன் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## குளகச் செய்யுள்

**4. குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்**

குளகம் என்பது ஒன்றற்கு மேற்பட்ட பல பாடல்களில் கருத்துத் தொடர்ந்து ஒரு வினைச்சொல் அல்லது முடிக்கும் சொல் கொண்டு முடிவது.

இராம கதையில், கைகேயி மனத்தைக் கெடுத்து, இராமனைக் காட்டிற்கு அனுப்ப, கூனி தந்திரமாகப் பேசுகிறாள். அதைக் கேட்ட கைகேயி, மறுமொழி கூறுமிடம் இது:

**வெவ்விடம் அனையவள் விளம்ப வேற்கணாள்**
**தெவ்வடு சிலைக்கைஎன் சிறுவர் செவ்வியர்**
**அவ்வவர் துறைதொறும் அறம்திறம்பலர்**
**எவ்விடர் எனக்குவந்து அடுப்பது ஈண்டு எனா**

**பராவ அரும் புதல்வரைப் பயக்க யாவரும்**
**உராவ அருந்துயரை விட்டு உறுதி காண்பரால்**
**விராவ அரும் புவிக்குஎலாம் வேதமே அன**
**இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ என்றாள்**

விடமே போன்ற மந்தரை எனும் கூனி சொன்னதைக் கேட்ட, வேற்கண்ணாளாகிய கைகேயி, என் மக்கள் நல்லவர்கள்; அறம் திறம் பாதவர்கள்; எனக்கு என்ன துன்பம் வரமுடியும் என்று சொல்லி, மேலும் நல்ல புதல்வரைப் பெற்றவர்களுக்கு நல் உறுதியே வாய்க்கும். அப்படியிருக்க இராமனைப் பயந்த எனக்குத் துன்பம் உண்டோ என்றாள். வேற்கணாள் (முதல்பாட்டு), என்றாள் (இரண்டாம் பாட்டு). இவ்வாறு தொடர்வது குளகச்செய்யுள் எனப்படும்.

## தொகைநிலைச் செய்யுள்

5. தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருள் இடம் காலம் தொழில் என நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டிய வாகும்.

தொகைநிலைச் செய்யுள் யாது என விளங்கக் கூறினால், ஒருவர் மட்டுமே பாடிய தொகைநூல், பலர் பாடிய தொகைநூல் என இருவகைப்படும். அது பொருள் இடம் காலம் தொழில் எனும் நான்கினாலும் பாடலின் பெயராலும் பாடலின் அளவாலும் தொகுக்கப் பெறுவனவாகும்.

ஒருவர் பாடிய தொகை நூல் - 1330 குறட்பாக்களை யுடைய திருக்குறள். பலர் பாடிய பாடல்கள் கொண்ட தொகை நூல் - அக நானூறு, புறநானூறு போல்வன. கலம்பகம் - பல உறுப்புக்களின் தொகையாகும். பிள்ளைத்தமிழ் - பத்துப்பருவம் பற்றிய தொகை யாகும். இவை யாவும் ஒருவரே பாடுவன.

**அடுத்துக் கூறப்பட்ட தொகை நூல்கள்:**

பொருளால் தொகுக்கப்பட்டன - அகநானூறு அகப்பாடல்களைத் தொகுத்தது. புறப் பொருள்வெண்பாமாலை - புறப்பொருள் பற்றி ஒருவரே பாடியது.

இடத்தால் தொகுக்கப்பட்டன - களவழி நாற்பது, கலிங்கத்துப்பரணி

காலத்தால் தொகுக்கப்பட்டது - கார் நாற்பது

தொழிலால் (செயலால்) தொகுக்கப் பட்டவை - ஐந்து உரிப் பொருளாம் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் பற்றிப் பாடப் பெற்ற ஐந்திணை ஐம்பது; ஐந்திணை எழுபது முதலியன. ஏரெழுபதும் தொழில் பற்றியதே. பாடலால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப் பட்டவை - பரிபாடல், கலித்தொகை.

அளவால்தொகுக்கப்பட்டவை: குறுந்தொகை, நெடுந் தொகை, பன்னிருபடலம், நாலாயிரம் முதலியன.

## தொடர்நிலைச் செய்யுள்

**6. பொருளினும் சொல்லினும் இருவகை தொடர்நிலை**

பொருளால் தொடர்வது பொருள்தொடர்நிலைச் செய்யுள். இது காப்பிய வகையில் அடங்கும். சொல்லினால் தொடர்வது சொற்றொடர்நிலைச் செய்யுள். இது சிற்றிலக்கிய வகையில் அடங்கும். சொல்லாலும் பொருளாலும் தொடர்வனவும் உள என்பது இதனால் பெறப்படும். அவையும் சிற்றிலக்கியங்களில் அடங்கும்.

**பொருள்தொடர்நிலைச் செய்யுள்:** கம்பராமாயணம், சிந்தா மணி, பெரிய புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன.

**சொல் தொடர்நிலைச் செய்யுள் :** அந்தாதி, சதகம், கலம் பகம் முதலியன. திருவாசகம் - திருச்சதகம் சொல்லும் பொருளும் தொடர்ந்த செய்யுளாகும்.

## பொருள்தொடர்நிலைச் செய்யுளின் வகை

**7. பெருங்காப் பியமே காப்பியம் என்று ஆங்கு**
**இரண்டாய் இயலும் பொருள்தொடர் நிலையே**

பொருள் தொடர்நிலைச் செய்யுள் பெருங்காப்பியம், காப்பியம் என இரண்டு வகைப்படும்.

காப்பியம் என்பது பொதுப்பெயர். நாடகம் போல்வனவும் சிறிய அளவாய்க் கதை தழுவியனவும் சிறு காப்பியம் எனப்படும்.

கம்பராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போல்வன பெருங்காப்பியம் எனப்படும். இவையும் காப்பியம் என்ற பொதுப் பெயரில் அடங்குமேனும் சிறப்புக்கருதி இது இரண்டெனப்பட்டது.

## பெருங்காப்பியம்

## இலக்கணம்

**8. அவற்றுள்,**
**பெருங்காப் பியநிலை பேசுங் காலை**
**வாழ்த்து, வணக்கம், வருபொருள் இவற்றின் ஒன்று**
**ஏற்புடைத் தாகி முன்வரவு இயன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்**
**தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்**

மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம்என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல் என்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவுஇகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

பெருங்காப்பியத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருள் - இவற்றின் ஒன்று ஏற்புடையதாக முன்னே வரும். கடவுள் வாழ்த்து அல்லது இறைவணக்கம் ஏதேனும் ஒன்று வரும். பெரிய புராணத்தில் 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என வருகிறது. இந்நூலில் 'சிந்தை வைத்து இயம்புவல் செய்யுட்கு அணியே' என்பது வருபொருளுரைத் தல். தமிழ் நூல்களின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தும் வணக்கமும் ஒன்றாகவே கருதப்படும். எடுத்த காரியம் இனிது முடிதற் பொருட்டு இக் கடவுள் வாழ்த்து வணக்கம் பாடப்படுகிறது. ''ஆசை பற்றி அறை யலுற்றேன் இக் - காசில் கொற்றத்து இராமன் கதையரோ'' என்பது கம்பனின் 'வரு பொருளுரைத்தல்'.

'நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி' - என்பது அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றைப் பாடும் நெறியுடைய தாதல் வேண்டும்.

'தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாய்' - என்பது காப்பியத் தலைவனை, உலகிற் சிறந்த ஒப்பற்றவனாகவே படைக்க வேண்டும் என்பதாம். இன்றைய நாடகம், திரைப்படம் வரை கதைத் தலைவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாகவே படைக்கப் பெறுதல் காண்கின்றோம்.

பெருங்காப்பியத்தில் பல வருணனைகள் இடம்பெற வேண்டும். மலை, கடல், நாடு, நகர்; கார், கூதிர் முதலிய பருவங்கள், ஞாயிறு முழுமதிஎனும் இரு சுடர்களின் தோற்றமும் மறைவும் எனப் பல வருணனைகள் இடம் பெற வேண்டும்.

மேலும் பல நல்ல நிகழ்ச்சிகள் நடந்ததாக வர வேண்டும். அவையாவன: திருமண நிகழ்ச்சிகள், திருமுடி சூட்டுதல், பொழில் விளையாடல், புனல் (நீர் நிலைகளில்) விளையாடல் என்பன இடம் பெறுதல் வேண்டும். இனிமை கனியும் கழிபேருவகை தரும் சிறுவரைப் பெறுதல் பற்றியும் காதலர் புலவியில் ஊடுவது பற்றியும் கலவியில் கூடி களித்தல் பற்றியும் ஆகிய இத்தகையன வற்றைப் புனையும் நன்னடையுடையதாகல் வேண்டும்.

மேலும் அரசனின் மந்திர ஆலோசனை, தூது விடுதல், படை யெடுத்துச் செல்லுதல், போரிடுதல், வெற்றி வாகை சூடுதல் எல்லாம் நாடகத்தில் 'சந்தி' என்பது போலத் தொடர்புபட, ஒன்றன் பின் ஒன்றாகப் பாடப்பட வேண்டும்.

உட்பகுப்புக்கள் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் தன்மையில் அமைய வேண்டும். ஒன்றினொன்று நெருங்கிக் கலந்த எண் வகைச் சுவையும் பாவம் எனப்படும் மனவுணர்வு நிலைகளும் அமைந்து, படிப்பவர் விரும்புமாறு, நன்கு கற்றவர்கள் படைப்பதே காப் பியத்தின் தன்மைகளாகும். தேம்பிழி மதுக்களி - தேனைப்பிழிந்த மது வுண்டது போன்ற களிப்பு. செலவு - படை யெடுத்துப் போதல். இகல்- மனமாறுபாடு, இங்கு போர்நிகழ்ச்சி, சந்தி - தொடர்புபட ஒன்றன்பின் ஒன்றாக அமைவது, இது நாடக உறுப்பு; காப்பியத்தும் வரவேண்டும். சருக்கம், இலம்பகம், பரிச் சேதம் - உட்பிரிவுகள்.பெரியபுராணம், வில்லிபாரதத்தில் வரும் பெரும் பிரிவுகள் சருக்கம் எனப்படும். சீவக சிந்தாமணி இலம்பகம் எனப் பகுக்கப்படும். பரிச்சேதப் பிரிவு தமிழில் இல்லை.

## பெருங்காப்பிய இலக்கணத்திற்கு ஒரு புறனடை

**9. கூறிய உறுப்பிற் சிலகுறைந்து இயலினும்**
**வேறுபாடு இன்றென விளம்பினர் புலவர்**

முன்னே விரிவாகக் கூறிய பெருங்காப்பிய உறுப்புக்களில் ஒரு சில குறைந்து வரினும், பெருங்காப்பியம் எனும் சிறப்பினின்றும் வேறுபாடில்லை எனப் புலவோர் கூறியுள்ளனர்.

சில வருணனைகளோ, பாடல் எண்ணிக்கையோ, பிறவோ குறைந்து வரினும் பெருங்காப்பியம் எனும் சிறப்புக் குறைவு படாது.

## காப்பியம் என்பதன் இலக்கணம்

**10. அறம் முதல் நான்கினும் குறைபாடுடையது**
**காப்பியம் என்று கருதப் படுமே**

பெரும்காப்பியம் அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு பயனையும் தரவேண்டும். இந் நான்கினும் குறைபாடு உடையது காப்பியம் எனப்படும். சிற்றிலக்கியமாகிய உலா, மடல், பரணி, ஆற்றுப் படை, கலம்பகம் எல்லாம் இதிலடங்கும் என்பர். இதனால் இங்கு காப்பியம் எனும் சொல், பொதுவானது என அறியலாம். ஓரங்க நாடகம், குறுநாவல் என்பன போன்ற சிறு கதை தழுவியவை எல்லாம் இதிலடங்கும்.

## காப்பியங்களின் யாப்பு வடிவம்

**11. அவைதாம்,**
**ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்**
**உரையும் பாடையும் விரவியும் வருமே**

பெருங்காப்பியம், காப்பியமெனப் படும் இலக்கிய மனைத்தும் ஒருவகைப் பாடல்களாலும் பலவகைப் பாடல் களாலும் உரையும் பாட்டும் கலந்தும், பிற பாடைச் (மொழிச்) சொற்கள் தமிழ்வடிவப் படுத்தப்பட்டுக் கலந்தும் வரும்.

நளவெண்பா, குறள் (வெண்பா) வெண்பா எனும் ஒரு திறப் பாட்டின. சங்க இலக்கியம் நேரிசை ஆசிரியத்தாலான அக நானூறு, புறநானூறு போல்வனவும் கலித்தொகையும் போல்வன ஒரே வகைப் பாடல்களால் ஆயினவே. பலவகைப் பாவாலானவை கலம்பகம், மும் மணிக் கோவை, நான்மணி மாலை போல்வன. உரையும் பாட்டும் கலந் தவை பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை முதலியன. சிலப்பதி காரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றே கூறப்படும்.

(இந் நூற்பாவில் இரண்டாம் அடி ‘ உரையும் பாட்டும் விரவியும் வருமே’ என்றுதான் இருக்கவேண்டும். பாடையும் என்பது தவறான பாடமே. இங்கு அச்சொற்கு வேலையில்லை. பிற பாடைச் சொற்கலப்புப் பற்றிப் பேசும் இடம் இதுவன்று.)

## சொற்றொடர்நிலை என்பதன் விளக்கம்

**12. செய்யுள் அந்தாதி சொற்றொடர் நிலையே**

அந்தம் + ஆதி. ஒரு செய்யுளின் இறுதிச் சொல்லோ, சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த செய்யுளின் முதலாக வருமாறு தொடுப்பது அந்தம் (முடிவு), ஆதியாகுமாறு தொடுப்பது சொற்றொடர் நிலை ஆகும்.

அபிராமி அந்தாதி, கந்தர் அந்தாதி போல தமிழில் இஃது ஓர் இலக்கிய வகையாகும். திருவாசகம் - திருச்சதகம் அந்தாதித் தொடை நலம் பொருந்தியது. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ் வார் எனப்படும் மூவரும் பாடியவை முதல் மூன்று திருவந் தாதிகளே. பன்னிரு திருமுறையில் காலத்தால் முற்பட்ட காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி பாடியுள்ளார். தமிழில் இவ்வகையின காலத்தால் முற்பட்டவையும் கணக்கற்றவையு மாகும். அற்புதத் திருவந்தாதி:

**பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்**
**மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே**
**எஞ்ஞான்று தீர்ப்பது இடர்**

**இடர் களையா ரேனும் எமக்குஇரங்கா ரேனும்**
**படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்**
**என்புஅறாக் கோலத்து எரியாகும் எம்மானார்க்கு**
**அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு.**

## செய்யுள் நெறி

இது வடமொழி 'இரீதிக்' கோட்பாடு என்பதன் தமிழாக்கம். சிறிதளவு தெரிந்து கொண்டாற் போதும். தமிழில் வண்ணம், வனப்பு எனத் தொல்காப்பியர் கூறியவற்றுடன் இது ஓரளவு ஒப்புமை யுடையது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டில், வாமனர் என்பார் இரீதிக் கோட்பாட்டை, பரத முனிவர் கூறிய பத்துக் குணங்களின் அடிப் படையில் உருவாக்கினார். தமிழில் தண்டியலங்காரம் இதை நெறி எனவும் வீரசோழியம் 'ஆவி' எனவும் மொழிபெயர்த்தன. நெறி பத்துக் குணங்களையுடையது. இந்த இரீதியாம் 'நெறி' யே, பாட்டின் உயிர் என்று வாமனர் வாதிட்டார். தண்டியலங்கார உரையாசிரியர், இவை ஒப்புமை பற்றித் தமிழுக்கும் கொள்ளப்பட்டன' என்று கூறுகிறார்.

13. மெய்பெறு மரபின் விரித்தசெய்யுட்கு
வைதருப்பம்மே கௌடமென்று ஆங்கு
எய்திய நெறிதாம் இருவகைப் படுமே

பொருள் பெறும்படி பாடும் செய்யுளுக்கு , உரிய நெறிகள் வைதருப்பம், கௌடம் என இருவகைப்படும்.

**நெறி** என்பது சொல்லாட்சி, எழுத்தமைப்பு, பாநடை, யாப்பு வடிவம், பொருள் தரும் முறை, சுவைதரும் பண்பு போல்வன வற்றால் அமைவதாகும். விதர்ப்ப நாட்டுக் கவிஞர் போற்றியது வைதருப்ப நெறி, கௌடநாட்டுக் கவிஞர் பின்பற்றியது கௌட நெறி. இவை இரண்டும் ஒன்றற்கொன்று பெரிதும் முரண்பட்ட வையும் சிறிதளவு ஒற்றுமைப் பட்டவையும் ஆகும். ஒப்புமை பற்றியே கொள்வதால், இவை ஓரளவே பொருந்தி வருகின்றன.

## வைதருப்ப நெறி

14. செறிவே தெளிவே சமனிலை இன்பம்
ஒழுகிசை உதாரம் உயத்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி என்று ஆங்கு
ஆய்ந்த ஈரைங் குணனும் உயிரா
வாய்ந்த என்ப வைதருப் பம்மே

வைதருப்ப நெறி என்பது பத்துக் குணங்களை உயிராக வுடையது. வாமனர்தான் வடமொழியில் 'கவிதைக்கு உயிர் தருவன இக் குணங்களே' என்றவர். பொதுவாகக் கவிதைக்கு உயிர் (ஆன்மா) உண்டென உரைத்தவர் அவரே என்பர். அதனை உட் கொண்டு ஈரைங்குணனும் - பத்துக்குணமும் உயிராக என்று இந்நூல் குறிப்பிடு கிறது. ''இக் குணங்களில்லாதது கை கால் முதலிய உறுப்புக்களிருந்தும், பதுமை (பொம்மை) உயிரின்மையால் மனிதன் எனச் சொல்லத் தகாதது போலச் செய்யுளென்று கொள்ளப்படா தென்றறிக.'' என்பது தண்டியலங்கார சாரம் என்பர். வட நாட்டிலுள்ள விதர்ப்ப நாட்டுக் கவிஞர்களின் கோட்பாடாகிய இது வைதருப்பம் எனப்படும்.

## கௌட நெறி

15. கௌடம் என்பது கருதிய பத்தொடும்
கூடாது இயலும் கொள்கைத்து என்ப

வடநாட்டிலுள்ள கௌட நாட்டுக் கவிஞரிடையே காணப் பட்டது இது. இது முற்கூறிய பத்துக் குணங்களொடும் சேராது, அதற்கு மாறாக நடக்கும் இயல்புடையது என்பர். பத்தொடும் - எனும் முற்றும்மை எச்சவும்மையாகவும் பொருள் தரும். பத்தொடும் பொருந்தாதென்றால், சிலவற்றோடு பொருந்தவும் கூடும் என்பது பெறப்படும்.

## 1. செறிவு

16. செறிவெனப் படுவது நெகிழிசை இன்மை

நெகிழ்வான மெல்லிய ஓசையின்றிப் பாடுவது செறிவு. வல்லின எழுத்தும் நெடிலும் வருவது எனலாம்.

**கற்க கசடறக் கற்பவை; கற்றபின்**
**நிற்க அதற்குத் தக (குறள் 391)**

வல்லோசை விரவிய இது 'செறிவு' எனும் குணமுடையது.

**பரியினும் ஆகாவாம் பாலல்ல, உய்த்துச்**
**சொரியினும் போகா தம (குறள் 376)**

நல் ஊழ் இல்லையேல் எவ்வளவு விரும்பினும் கை கூடாது. நல்லூழ் வாய்ப்பின் கொண்டுபோய்க் கொட்டினாலும் தமக்குரியன கைவிட்டுப் போகா. இடையெழுத்து மிக்கு மெல்லோசை உடைய இது **கௌட நெறிப்** பாற்படும்.

## 2. தெளிவு

17. தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே

கவிஞன் கருதிய பொருள் மிகவும் தெளிவாகப் புலப் படுவது இக்குணம். இதை வடநூலார் 'பிரசாதம்' என்றனர்.

**பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா**
**பிற்பகல் தாமே வரும். (319)**

இதில் அரியது எதுவுமின்றி, எளிதாய் மனங்கொளத் தக்க பொருள் புலப்பாடு உளது.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று (297)**

இது கௌட நெறிப் பாற்படும். சொற்பொருட் பின்வரும் நிலையணி வந்துள்ள இது பிற அறம் செய்யாமை நன்றெனக்

கூறினும், அது பொய்யாமையின் சிறப்பை மிகுவிக்கவே எனும் குறிப்பும் தருதலால், அரிதுணர் பொருளுடையது.

## 3. சமனிலை

18. **விரவத் தொடுப்பது சமனிலை யாகும்**

வன்மை மென்மை இடைமை என்னும் மூன்றும் கலந்து வரத் தொடுப்பது சமனிலையாகும்.

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின் (96)**

இது மூவின மெய் எழுத்துக்களால் சமனிலைப்பட்ட ஓசை பெற்றுளது. இதற்கு எதிராக 'வற்கென' (மிக வலிதாகத்) தொடுப்பது கௌடர்க்குரிய குணமாகும்.

**முத்திக்கொரு பத்தித் திருநகை**
**அத்திக்கிறை சத்திச் சரவண**
**முத்திக்கொரு வித்துக் குருபர - என ஓதும் (திருப்புகழ்)**

இவ்வாறு வேண்டுவர் கௌட நெறியார்.

## 4. இன்பம்

19. **சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம்**

சொல்லாலும் சுவைபடவும் பொருளாலும் சுவைபடவும் தொடுப்பது இனிமைதரும். இன்பம் எனும் குணமாம். இதனை வடநூலார் 'மாதுரியம்' என்பர்.

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ, கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு (1081)**

மோனை எதுகை வந்து, பொருளாலும் இன்பம் தருவது இது.

**அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்**
**திருமா வளவன் தெவ்வர்க்கு ஒக்கிய**
**வேலினும் வெய்ய கானம்அவன்**
**கோலினும் தண்ணிய தடமென் தோளே**
**(பட்டினப்பாலை)**

அரிமா - சிங்கம். அணங்கு - வருத்துதல். துப்பு - வலிமை. தெவ்வர் - பகைவர். கானம் - பாலைவழி. கோல் - திருமாவளவனது செங்கோலாட்சி.

இங்ஙனம் சொல்லாலும் பொருளாலும் இன்பம் தரும் பாடல்கள் மிகுதி. கௌடர் சுவையை மிகுதிப்பட வேண்டுவர்.

## 5. ஒழுகிசை

**20. ஒழுகிசை என்பது வெறுத்திசை இன்மை**

வெறுக்கத்தக்க இன்னாத இசையில்லாதது ஒழுகிசை எனும் குணமாகும். மென்மையுடைமை இது. வடநூலார் 'சுகுமாரதை' என்பர். செவிக்கு இனிதாய் அமையும் மெல்லிசை.

**மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை**
**முன்னம் படைத்த முதல்வனைப் - பின்னரும்**
**ஆதிரையான் ஆதிரையான் என்றென்று அலமருமால்**
**ஊர்திரைநீர் வேலி உலகு (முத்தொள்ளாயிரம்)**

சிவனுக்குத் திருவாதிரை நாள்மீன் உரியதென்பர். அவனோ இந்த நாள்மீன், மதி, சூரியன், (கனலி) என எல்லா வற்றையும் முதலிற் படைத்த முன்னவன். அவனுக்குப் பிறந்த நாள் கூறுகிறது, இந்த அலை பாயும் கடலை வேலியாகவுடைய உலகு. (திரை - அலை) ஆதிரையான் ஆதிரைய்யான் என்று அலமருகின்ற (உணர்வு அலை மோதுகின்ற) உலகு என்னும் இப் பாடலைப் பாடிக்கொண்டே இருக்கலாம்; செவிக்கு இனிதாகலின் கேட்டுக்கொண்டே இருக்கலாம். இதுவும் இரு நெறியார்க்கும் உடன்பாடே.

## 6. உதாரம்

**21. உதாரம் என்பது ஓதிய செய்யுளின்**
**குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல்**

உதாரம் என்பது செய்யுளுள் சொற்படு பொருளின்றி, அதன் குறிப்பினால் வேறு ஒரு பொருள் நெறிப்படத் தோன்றுவது. புலமையால் அறியும் நயம் இது.

**இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள (223)**

'யான் வறியவன்' என்பது துன்பம் தரும் சொல். (எவ்வம் - துன்பம்) தானும் அச்சொல்லைச் சொல்லாதபடி வாழ்ந்து, செல்வ முடைய வனாகப் பிறர்க்கு ஈந்து வாழ்வதென்பது குலத்திற் பிறந்த சிறந்த மக்களிடையே மட்டும்தான் காணப்படும்.

இதனையே குறிப்பினால் வேறு பொருள்படவும் சொல்லலாம். இலன் என்னும் எவ்வத்தைத் (துன்பத்தை) தன்னிடம் சொல்லு முன்பே குறிப்பறிந்து கொடுத்தல் எனப் பொருள் கொள்ளலாம். இலன் என்னும் எவ்வத்தை அவன் பிறன் ஒருவனிடமும் சென்று கேட்காத படி, நிரம்பக் கொடுத்தல் என்றும் கொள்ளலாம். அவன் இல்லையென்று சொன்னதையே தானும் சொல்லாது அதாவது கரவாது ஈதல் என்றும் கூறலாம்.

இதுவும் இரு நெறியார்க்கும் ஒக்கும்

## 7. உய்த்தலில் பொருண்மை

**22.** **கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்கு**
**உரியசொல் லுடையது உய்த்தலில் பொருண்மை**

புலவன் கருதிய சொற்களையும் உடையது, உய்த்தலில் பொருண்மையாகும். உய்த்தல் இல் - பிற சொற்களை வருவித்துச் சேர்த்தல் தேவைப்படாதது இது.

**ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்**
**காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்**
**பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல**
**வரும்செல்லும் பேரும்என் நெஞ்சு (முத்தொள்ளாயிரம்)**

கோதை - சேரமன்னன். அழகிய மணிகள் பதித்த அணிகலன் களையும் விளங்கும் மாலையையும் அணிந்த சேரவேந்தனைக் காணக் கதவுவரை சென்று, பிறகு நாணத்தால் கதவை அடைத்தேன். என் நெஞ்சமோ செல்வர் வீட்டில் வறியவர் இரப்பதற்குப் போவது போல் போகும்; நாணித் திரும்பும்; பிறகு மீண்டும் போகும். இது முழுவதும் பொருள் தருமாறு; சொற்களால் நிறைவுற்றது.

**கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

கற்றவர் வாலறிவனைத் தொழுது தாமும் தூய அறிவு பெற வேண்டும் 'தொழவேண்டும்' என்று முடிக்கவேண்டியுளது. இது உய்த்துணர்தல் ஆகும். உய்த்துணர வைப்பது கௌட நெறி.

## 8. காந்தம்

**23. உலகொழுக்கு இறவாது உயர்புகழ் காந்தம்**

காந்தமாவது ஒன்றனை / ஒருவரைப் புகழுங்காலத்து, உலக நடை. கடவாது, அளவோடு உயர்த்துப் புகழ்வது. காந்தம் - மனத்தை மகிழ்விப்பது, புகழ்.

**பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்!**
**மல்லல் நெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்!**
**வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்**
**வில்லெழுதி வாழ்வர் விசும்பு**
**(முத்தொள்ளாயிரம்)**

மன்னர்களே! சேரனுக்குரிய திறையைத் தந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்! உங்கள் மதில்களில் விற் சின்னத்தை எழுதுங்கள்! வானோரும் வானத்தில் வில்லெழுதி (வானவில்), அவனுக்கு அடங்கி அமைதியாய் வாழ்கின்றனர்.

இது அளவாகப் புகழ்தலால் காந்தம். கௌடநெறி அளவிறந்து புகழ வேண்டுமென்று கூறும்.

கம்பராமாயணத்தில் அயோத்திநகர வருணனை ஒன்று; வெண் முகில்கள் கடல்மீது ஓடி அதன் நீரைப் பருகும். அது போல அயோத்தி நகர மாளிகைகளின் உச்சியில் ஆடுகின்ற கொடிகள் மிக உயரச் சென்று, வானுலக ஆகாய கங்கையை அடைந்து. அதன் நீரை வற்றும்படி நக்கிக் குடிக்கும்.

**நானா விதமா நளிமாதிர வீதி ஓடி**
**மீனாறு வேலைப் புனல் வெண்முகில் உண்ணுமாபோல்**
**ஆனாத மாடத்திடை ஆடு கொடிகள் மீப்போய்**
**வானாறு நண்ணி, புனல் வற்றிட நக்கும் மன்னோ**
**(கம்ப, பால, 163)**

மாதிரம் - திசைகள். வேலை - கடல். மீப்போய் - மேலே போய். வான்ஆறு - ஆகாய கங்கை.

இது அளவுகடந்து புகழ்வது, கௌடர் இதை வேண்டுவர்.

## 9. வலி

**24. வலிஎனப் படுவது தொகைமிக வருதல்**

வலி என்பது தொகைச் சொல் தொடர்கள் மிகுதியாக வரத் தொடுப்பது. வடநூலார் இதை 'ஓசம்' என்பர்

**முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்**
**வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு (1113)**

வேய்த்தோள் - மூங்கில் போலும் தோள். அத்தோளையுடைய அவளுக்கு; முறிமேனி - மேனி நிறம் மாந்தளிர் போல் இருக்கும்; முறுவல் முத்தம் - புன்னகை முத்து வரிசை போலிருக்கும்; வெறிநாற்றம் - நறு மணம் மிகுதியாக இருக்கும்; வேல் உண்கண் - மைதீட்டிய கண் வேல்போல இருக்கும்.

முறிமேனி - முறிபோலும் மேனி (முறி - தளிர்). முத்துப் போலும் முறுவல். வெறியாகிய நாற்றம்; வேல் போலும் கண்; உண்கண் - மையுண்ட அதாவது மை தீட்டிய கண்; வேய் போலும் தோள். இவ் வாறு வருவன 'வலி' எனப்படும்.

கௌட நெறியார் இதனிலும் கூடுதலாக வேண்டும் என்பர். அதவாது பெரிய பாடல் முழுவதும் தொகைநிலைத் தொடர்கள் வரவேண்டும் என்பர்., அவ்வளவே வேறுபாடு.

## 10 சமாதி

**25. உரியபொருள் இன்றி ஒப்புடைப் பொருள்மேல்**
**தரும்வினை புணர்ப்பது சமாதி ஆகும்.**

சொல்லவந்த தலைமையான பொருளுக்குரிய வினையை மாற்றி, அதனுடன் ஒப்புமையுடைய பொருளுக்குரிய வினையைத் தந்து முடிப்பது சமாதி எனும் குணமாகும். வினையை மட்டு மன்றி, பெயரையும் அவ்வாறு உரைக்கப்படும் என்பர். சமாதி - வடசொல். மற்றொன்றின் மேல் ஏற்றி உரைக்கப்படுவது.

**அகலிரு விசும்பில் பாயிருள் பருகிப்**
**பகல்கான்று எழுதரும் பல்கதிர்ப் பருதி**

விசும்பில் - ஆகாயத்தில். பாய் இருள் பருகி - பரவும் இருளைக் குடித்து, பகல் கான்று - பகலைக் கக்கி - வெளிப்படுத்தி.

பரிதி - சூரியன். சூரியன் இருளைக் குடித்து, பகலை வெளியே விடும் என்பது ஒன்றற்குரிய வினையை மற்றதற்குக் கூறுவதாகும்.

**விழித்த குவளைக் கழிப்போது வாக்கிய**
**கள்ளுண்டு களித்த வண்டினம்**

குவளை விழிப்பதாகக் கூறுவது; கழி - சிறியநீர்நிலை. போது மலர். வாக்கிய - ஊற்றிய. கள் - மகரந்தத்தேன். மலர் மகரந்தத் தேனாகிய கள்ளை ஊற்றுவது என்பதும் அதை வண்டு குடிப்பது என்பதும் வினைச்சொல்லை பிறிதொன்றின்மேல் ஏற்றியுரைப்பதே.

எயில் - கோட்டைமதில். 'கன்னியெயில்' என்று அதனைச் சிறப்பிப்பர். ஞாழல் - புலிநகக்கொன்றை மரம். குமரி ஞாழல் - புதிய மலர்கள். இவை பெயருடன் இணைந்து வந்தன.

இதுவும் இரண்டு நெறியார்க்கும் ஒக்கும்.

## பொதுவணியியலுக்குப் புறனடை

**26.** **ஏற்ற செய்யுட்கு இயன்ற அணியெலாம்**
**முற்ற உணர்த்தும் பெற்றியது அருமையின்**
**காட்டிய நடைநெறி கடைப்பிடித்து இவற்றொடு**
**கூட்டி உணர்தல் ஆன்றோர் கடனே**

சிறப்புப் பொருந்திய செய்யுளுக்கு அமைந்த அணிகள் அனைத்தையும் முழுவதும் உணர்த்துதல் அரிய செயலாகும். அதனால் காட்டப்பட்ட இவ் விளக்க நெறியையே வழிகாட்டியாகக் கொண்டு, இவ்வணிகளோடு மேற்கொண்டு வருவனவற்றையும் கூட்டி உணர்தல் முற்றக் கற்ற ஆன்றோர் கடமையாகும்.

இது நூல் முழுமைக்கும் புறனடை போலவும் தோற்றுகிறது. தொல்காப்பியர் கருதுவது போல உவமை, உருவகம் என வருவன எல்லாம், ஒரு பாடலின் பொருள் புலப்பாட்டிற்கும் அதனை அழகு படுத்திப் படிப்பார்க்கு இன்பமும் மகிழ்ச்சியும் உண்டாக்கு தற்கும் அமைவனவே. இவ்வகையில் அவை அப்பாடலின் உறுப் பென்றே கொள்ளப்படும். எனவே உலகத்துக் கவிதைகள் - இலக்கியம் எனப் படும் அனைத்திற்குமாக ஆராயப்புகின் 'அணி வகைகள்' கணக்கில் அடங்கா. இங்கு தரப்படுவன சில முன் மாதிரிகள் எனவே கொள்ளல் வேண்டும்.

பொருள் எளிதில் விளங்கும் கடுமையற்ற நடைப் பண்புகள் வைதருப்பமென்றும், பொருள் அழுத்தமும் சொல் வன்மையுமுள்ள கடினநடைப் பண்புகள் கௌடமென்றும் கருதப்படுமென்றும் சுருங்கச் சொல்லலாம். இவை வடநாட்டார் நெறிகள் (இரீதிக் கோட்பாடு என்பர்). தமிழில் ஏற்ற அளவு மட்டுமே கொள்ளல் வேண்டும்.

எந் நடையேயாயினும் தெளிவுடைமை, ஓசையுடைமை, ஆழமுடைமை மூன்றும் எவ்விதக் கவிதைக்கும் இன்றியமையாதன என்பதே இருமொழி வல்லார்க்கும் உடன்பாடு.

தமிழில் தொல்காப்பியர் வண்ணம்; வனப்பு என்று கூறிய இரண்டிலும் இதன் சாயலைக் காணலாம்.

பாட்டிற்குக் 'குணங்கள்' உண்டு, என்றவர் பரத முனிவர்.

அவற்றை நெறி (இரீதி) எனும் கோட்பாடாக்கி, வட்டார நெறிகளை விளக்கியவர் வாமனர்.

மேலும் வாமனர் இந் 'நெறியே' பாடலின் 'உயிர்' என்றார். முதன் முதல் பாட்டுக்கு 'உயிர்' உண்டு என விளக்கியவர் பாமகரே. பிறகு எல்லோரும் தத்தம் கொள்கையே பாட்டுக்கு 'உயிர்' என்றனர். வீரசோழியம் இதற்கு 'ஆவி' எனப் பெயரிட்டதும் இதனாலேயாம்.

# 2. பொருளணியியல்

## இயல் கருத்து நிரல்

### 0.0. கலைமகள் வணக்கம்

கலைமகள் என்னை ஆளும் தன்மையினாள். எவ்வுயிர்க்கும் அன்னை அவள். அவளது அடித்தளிர்கள் மலரில் பட்டாலே வாடுமாம். அவை என் வலிய கல்மனத்தே வந்து தங்குமோ? தங்கவேண்டும் என வேண்டுவது கவிஞரின் மனக்குறிப்பு.

### பொருளணிகள்

0. பொருளணிகள் தன்மை, உவமை, உருவகம், தீவகம் முதலாக வாழ்த்து, சங்கீரணம், பாவிகம் ஈறாக 35 ஆகும். இவற்றுட் சில சொல்லை அடிப்படையாகக் கொண்டன. எனினும் அவையும் சேர்த்து, அனைத்து அணிகளும் பொருளை வெளிப்படுத்து வனவே. அதனால் இது 'பொருளணியியல்' எனப்பட்டது.

### 1. தன்மையணி

ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அழகுபடக் கூறுவது.

### 2. உவமையணி

ஒப்புடை இருபொருள்களைச் செப்புவது உவமை, ஒன்றை விளக்க அதனோடொத்த பிறிதொன்று கூறப்படும். பொதுத் தன்மையும் உவம உருபும் இடையில் வரும். பண்பு, தொழில், பயன் பற்றிய பொதுமையடிப்படையில் உவமை கூறப்படும். மேலும் இது அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பமும் பயக்கும்.

### 3. உருவகவணி

உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் (உவமேயம் என்பதையும்) வேறுபடுத்திக் கூறாமல், ஒன்றாகவே கூறிவிடுவது உருவகம். தளிர்போலும் அடி, அடித்தளிர் ஆகிவிடுவது இது.

### 4. தீவகவணி

விளக்கு ஓரிடத்தில் நின்று, பலவிடத்தும் சென்று ஒளி தருவது போல, ஒரு செய்யுளில் ஒரு சொல் ஓரிடத்தில் நின்று முன்னும் பின்னும் நடுவிலும் சென்று பொருள் தருவது தீவகம்.

### 5. பின்வருநிலையணி

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னரும் பலஇடத்தும் திரும்ப வருமாயின் அது பின்வருநிலையணி எனப் படும். இது சொற்பின்வருநிலையணி, பொருள் பின்வருநிலையணி சொற் பொருள் பின்வருநிலையணி என மூன்று வகையாகவும் ஒன்றி னொன்று கலந்தும் வரும்.

### 6. முன்ன விலக்கணி

ஒன்றனைக் குறிப்பினால் விலக்குவது இது. இது இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனும் முக்காலங்களோடும் கூடி வரும். முன்னம் - முகக் குறிப்பு, குறிப்புச் சொல் முதலியன. ஒன்றை நேரே விலக்காமல் குறிப்பால் விலக்குவது.

### 7. வேற்றுப்பொருள் வைப்பணி

முன்னர் ஒரு சிறப்புப் பொருளைச் சொல்லத் தொடங்கி பின்பு அதை நிலைநாட்டுவதற்காக, உலகறிந்த ஒரு பொதுப் பொருளைக் கூறி முடிப்பது வேற்றுப்பொருள் வைப்பணி.

சுருங்கச் சொன்னால் பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும் சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் நிலை நாட்டுவது இது.

### 8. வேற்றுமையணி

வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ ஒப்புமையுடைய பொருள்களை முதலிற்கூறி, இறுதியில் ஒன்றினொன்று வேறுபடு வதையோ, ஒன்றினும் மற்றொன்று மேம்படுவதையோ கூறி முடிப்பது இது.

### 9. விபாவனையணி

ஒரு காரிய நிகழ்ச்சி நடந்ததற்கு, நன்கு உலகறிந்த காரணத்தை நீக்கி, பிறிதொன்றைச் சிந்தித்து உணரும்படி, இயல்பாகக் கூறுவது

இது. பிரிவினால் காதலர் மனம் வெந்துபோகும். அதை 'தீ இன்றி வேம் தமியோர் சிந்தை' என்பது இவ்வணியின் பாற்படும்.

## 10. ஒட்டணி

புலவன் தான் கருதிய பொருளை மறைத்து, அக்கருத்தைப் புலப்படுத்துவதற்குத் தக்க, ஒப்புடைய பிறிதொன்றைக் கூறுவது இது. சுருங்கச் சொன்னால் உவமையை முழுவதும் கூறி உவமேயப் பொருளைக் குறிப்பால் அறிய வைப்பது ஒட்டணி.

## 11. அதிசயவணி

தான் கருதிய ஒரு பொருளின் வனப்பை மகிழ்ந்து கூறும் போது இயல்பான உலக எல்லையைக் கடவாது, பெரியோர் வியக்கும்படி கூறவேண்டும். இவ்வாறு பாடலில் கற்பனையை வெளிப் படுத்துவது அதிசயவணி.

## 12. தற்குறிப்பேற்றவணி

அசையும் பொருள் அசையாப் பொருள் எனும் உலகப் பொருள்கள் அனைத்திலும், இயல்பாக நடக்கும் செய்தியைக் கூறாமல், அதன்மீது அதற்கு அயலான ஒன்றை ஏற்றிக் கூறுவது இது. அதாவது கவிஞன் தான் கருதிய குறிப்பை அல்லது கற்பனையை அதன்மீது ஏற்றிக் கூறுவது. (தன் +குறிப்பு + ஏற்றம்) குறிப்பு - கற்பனை.

## 13. ஏதுவணி

எந்த ஒரு பொருளைப் பற்றியும், இதனால் இது விளைந்ததென்று காரணத்தை விளக்கிக் கூறுவது இது. காரகவேது, ஞாபகவேது என இது இரண்டுவகைப்படும். (ஏது -காரணம். காரகம் - ஒரு செயல் நிகழக் கருவியாவது. ஞாபகம் - ஒன்றை அறிவிக்கும் கருவியாவது.)

## 14. நுட்பவணி

நன்கு தெரியும்படி வெளிப்படையாகக் கூறாமல், குறிப்பாக வேனும் ஒரு செயல் மூலமேனும், பிறருக்குத் தம் உள்ளக் கருத்தைத் தெரிவிப்பது நுட்பவணி.

## 15. இலேசவணி

மனக் குறிப்பை உடலின்மூலம் வெளிப்படுத்துவது சத்துவம் (மெய்ப்பாடு). அதன் உண்மையை மறைத்து, அது வேறு ஒன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது இலேசவணி.

புகழ்வது போலப் பழித்தலும் பழிப்பது போலப் புகழ்தலும் இலேசவணியின்பாற்படும்.

## 16. நிரனிறையணி

முதலில் சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி, அதே வரிசைப்படி அவற்றை முடிக்கும் சொற்களையும் நிறுத்திப் பாடுவது நிரனிறையணி. சிலபோது இவ் வரிசையை மாற்றி வைப்பினும் பொருளுக்கேற்ப, மாற்றியறிதல் வேண்டும். அதை மொழி மாற்றிப் பொருள்கொளல் என்பர். சுருக்கமாக எதிர் நிரனிறை எனலாம்.

## 17. ஆர்வமொழியணி

தன் உள்ளத்துள் தோன்றிய ஆர்வத்தையுணர்த்தும் சொற்கள் மிகுதியாக வெளிப்பட உரைப்பது ஆர்வமொழி எனும் அலங்கார மாகும்.

## 18. சுவையணி

உள்ளத்துள் நிகழும் உணர்வுகள், புறத்தே உடம்பின்கண் வெளிப் பட, எட்டுவகையான மெய்ப்பாட்டினால் புனைவது சுவையணி எனப்படும். அவையாவன வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை. (உருத்திரம் - கோபம்)

## 19. தன்மேம்பாட்டுரையணி

போர்க்களம், சொற்போர்க்களம் போன்றவற்றில் ஒருவர் தம்மைத் தாமே புகழ்ந்து சொல்வது தன்மேம்பாட்டுரையணி. (தமிழில் நெடுமொழி, வஞ்சினக் காஞ்சி என்றெல்லாம் கூறப் படும். ஒரு புறப்பொருள் துறை இது. இங்கு அணி வகையில் கூறப் பட்டுள்ளது.)

## 20. பரியாயவணி

தான் கருதியதை நேரே கூறாமல், அதற்கு ஈடாக, அக்கருத்துப் புலப்படுமாறு, பிறிதொன்று கூறுவது பரியாயம். (பரியாயம் - திறமையாக அறிவிக்கும் பேச்சு)

## 21. சமாகிதவணி

முதலில் தான் முயன்ற ஒரு செயலின்பயன், அதனாலன்றிப் பிறிதொன்றால் முடிந்ததாகக் கூறுவது சமாகிதம். (இதனைத் துணைப்பேறு - ஒன்றன் பயன் பிறிதொன்றால் முடிவது என்பர்.)

## 22. உதாத்தவணி

வியத்திற்குரிய செல்வ வளமும் மிகமேம்பட்ட ஊக்க வுணர்ச்சியும் பற்றி, அவற்றின் உயர்வைப் புனைவது உதாத்தவணி. (உதாத்தம் - பெருஞ்சிறப்பு, பிறிதொன்றற்கு இல்லாத தனிச்சிறப்பு. இதைத் தமிழில் 'வீறுகோளணி' என்றும் கூறுவர். )

## 23. அவநுதியணி

சிறப்பு, பொருள், குணம் ஆகியவற்றினது சிறந்த தன்மைகளான உண்மையை மறுத்து, பிறிதொன்றாக உரைப்பது இது. அவற்றின் உண்மையை மறுப்பதுபோல், பிறிதொரு சிறப்பைச் சொல்வதே இது.

## 24. சிலேடையணி

ஒரே சொற்றொடர் பல பொருள் தருமாறு, நன்கு விளங்கும்படி வருவது சிலேடை எனப்படும். (இதனைத் தமிழில் இரட்டுற மொழிதல் என்பர்) இது செம்மொழிச் சிலேடை - சொல்லைப் பிரிக் காமலே இரு பொருள் தருவது; பிரிமொழிச் சிலேடை – சொல்லைப் பிரித்துப் பலபொருள்தருவது என இரண்டு வகைப்படும்.)

## 25. விசேடவணி

குணம், செயல், சாதி, பொருள், உறுப்பு முதலானவை குறைபடுதல் காரணமாக அவற்றுக்கு மேம்பாடு தோன்ற விளம்புவது விசேடம். குறைபடுவதாகச் சொல்வதுபோல் சொல்லி, மேம்பாட்டையும் பெருமையையும் உணர்த்துவது இது.

(வீரன் தன் புருவத்தை வளைக்கு முன்பே, பகைவனின் செங்கோலாட்சி வளைந்து வீழ்ந்தது என்பது போலப் புனைவது இது. )

## 26. ஒப்புமைக் கூட்டவணி

தான் கருதிய ஒரு குணத்தின் அடிப்படையில் சமமான பல பொருள்களையும் உடன்வைத்து, ஒருங்கு கூட்டிச் சொல்வது ஒப்புமைக் கூட்டம். இது புகழ் ஒப்புமைக் கூட்டம், பழிப்பு ஒப்புமைக் கூட்டம் எனும் இரண்டிலும் புலப்படும்).

## 27. விரோதவணி

சொல்லும் பொருளும் ஒன்றற்கொன்று முரண்படத் தோன்றுமாறு உரைப்பது விரோதவணி. (காலை மாலை, மேல்கீழ் என வருவன. சொல்விரோதம். குயில் குரல்மழுங்க மயில்களித்துஆட என்பது பொருள் விரோதம். தமிழில் இது முரண்தொடை எனப்படும்.)

## 28. மாறுபடு புகழ்நிலையணி

தான் கருதிய பொருளை மறைத்து, அப் பொருளைப் பழிப் பதற்கு, வேறொரு பொருளைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை. ஒன்றைப் புகழ்வதன் மூலம் பிறிதொன்றைப் பழிப்பது இது. (நாய்கள் நன்றி மறப்பதில்லை எனப் புகழ்வது, நன்றி மறப் பவரைப் பழிக்கப் பயன்படும்போது இவ் அணியாகும்.)

## 29. புகழாப் புகழ்ச்சியணி

ஒன்றனையே பழிப்பது போன்ற தன்மையிற் கூறி, அதன் மேன்மை புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி. (ஒன்றைப் புகழாதது போலவே கூறிப் புகழ்வது இது. )

## 30. நிதரிசனவணி

ஒருவகை நிகழ்ச்சியின் பயன் அதற்கு ஒத்தது ஒன்றனது பயனை அறிவுறுத்துகிறது என்பது இது. இதன்மூலம் அப் பொருளின் புகழ்மையும் தீமையும் புலப்படவைத்திடின் அது நிதரிசனவணியாகும். (நிதரிசனம் - காட்சி. இது புகழ்மை கூறின் நற்பொருட்காட்சி; தீமை கூறின் தீப்பொருட்காட்சி.)

## 31. புணர்நிலையணி

செயலும் பண்பும் ஆகிய இவையிருபொருளுக்கும் ஒரு வினை முடிபே பொருந்துமாறு சொல்வது இது. (கார்காலத்தில் காதலியின் கண்கள், கருமேகங்களுடன் கூடி நீரைப் பொழிந்தன.)

## 32. பரிவருத்தனையணி

பரிமாறுதல் - கொடுத்துப் பெறுதல். பொருள்கள் தம்முள் ஒன்றனை மற்றதற்குக் கொடுத்து, பிறிதொன்றைத் தாம் பெற்றுக் கொண்டதாகப் பாடுவது இது.

## 33. வாழ்த்தணி

இன்னார்க்கு இவையிவை வாய்த்திடுக என்று சொல்லி, தாம் கருதியதனைக் கூறி வாழ்த்துவது வாழ்த்தணியாகும்.

## 34. சங்கீரணவணி

இதுகாறும் கூறப்பட்ட அணிகள் பலவும் தம்முள் கலந்துவரத் தொடுப்பது சங்கீரணவணி. (இரண்டிறந்த பலவே இவ்வணியின் பாற்படும்.)

## 35. பாவிகவணி

ஒரு காப்பியம் முழுவதும் இழையோடுகிற ஒரு கருத்துப் பாவிகம் எனப்படும். (பிறன்மனை நயத்தல் தீது - இது இராமகதைப் பாவிகம்.)

## உவமை உருவகங்களுக்குப் புறனடை

2.1 *ஒப்புமையில்லது* - பொதுநீங்கு உவமை. ‘தானே உவமை தனக்கு’ என்பது இது. இதுவும் உவமை வகையுள் அடங்கும்.

2.2 *ஐய உவமை* - ‘கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல் - நோக்கம்இம் மூன்றும் உடைத்து’ (1085). இக் குறளில் ஐயப் பட்டுரைப்பினும் இதுவும் உவமையுளடங்கும்.

2.3. *உவமை உருவகம்* - விழிமலர் ஒளிமலரையே ஒக்கும். முதலில் உருவகம் வந்து, அது பின்னரும் உவமிக்கப்பட்டது. இதுவும் உருவக வகைப்படும்.

மேலும் உவமை கூறும் போது முல்லை குறிஞ்சி முதலான திணைப் பாடல்களில், அவ்வந் நிலக் கருப்பொருள்களால் உவமை கூறுவது இடத்துக்கேற்ற உவமை. கார், கூதிர் போலும் பருவப்புனைவில், அவ்வப் பருவத்திற்குரியவற்றை உவமை கூறுவது காலத்துக்கேற்றஉவமை. மேலும் பொருளுக்கும், பண்பிற்கும், மானுடஇனமெனும் சாதிக்கும் மரபுவழிக்கும் ஏற்ப உவமை கூறவேண்டும். உவமையிடையே 'பவளம் போல் செந்துவர் வாய்' என்பது சுட்டிக் கூறும் உவமை; இவ்வாறுபொதுத் தன்மை முதலியவற்றை விரிக்காமல் உவமை கூறுவது சுட்டிக் கூறா உவமம் எனப்படும்.

நூல்

# பொருளணியியல்

## காப்புச் செய்யுள்

### கலைமகள் வணக்கம்

27. என்னை யுடையாள் கலைமடந்தை எவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய அடித்தளிர்கள் - இன்னளி சூழ்
மென்மலர்க்கே கன்றும் எனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து

கலைகளுக்கு அரசியாகிய கலைமகள் என்னை அடிமையாக உடையவள். எவ்வுயிருக்கும் அன்னையாகிய அவளது தளிர்போன்ற அடிகள், வண்டுகள் மொய்க்கும் மெல்லிய மலரில் பட்டாலும் வாடி விடும் என்று சொல்வார்கள், அவ்வாறிருக்க, எனது மெய்ம்மையில்லாத கல்போன்ற வலியமனத்தில் அவை வந்து தங்குமோ? தங்காது. எனினும் என்னை அடிமையாகவுடையவளாதலால் தங்கும் என்பதே கருத்து. இது அவையடக்கம் போலவும் உளது. (அளி - வண்டு. கன்றும் - வாடும்.)

### பொருளணிகள்

28. தன்மை, உவமை, உருவகம், தீவகம்,
பின்வருநிலையே, முன்ன விலக்கே,
வேற்றுப் பொருள் வைப்பே, வேற்றுமை, விபாவனை,
ஒட்டே, அதிசயம், தற்குறிப்பேற்றம்,
ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை
ஆர்வமொழி, சுவை, தன்மேம் பாட்டுரை,
பரியா யம்மே, சமாகிதம், உதாத்தம்,
அரிதுணர் அவநுதி, சிலேடை, விசேடம்,
ஒப்புமைக் கூட்டம், மெய்ப்படு விரோதம்,
மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி,
நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனையே,
வாழ்த்தொடு, சங்கீரணம், பாவிகம் இவை
ஏற்ற செய்யுட்கு அணிஏழ் ஐந்தே

தன்மையணி, உவமையணி, உருவகவணி, தீவகவணி போல ஒரு வரிசைப்பட, அவற்றின் சிறப்பு, மிகுதியாகவருதல் என்பன நோக்கி இம் முப்பத்தைந்து அணிகளும் கூறப்பட்டுள்ளன.

இவற்றுள் சில தமிழ்நூல் அடிப்படையுடையன; மேலும் சில தமிழடிப்படையுடையவெனினும் வடமொழிப் பெயருடையன; சில வடமொழிக்கே உரியன.

இவை பெரும்பான்மை பாடலில் வரும் பொருள் நோக்கியன, சில சொல் நோக்கியன; சில பொருளும் சொல்லும் உடன் நோக்கியன. தீவகம், பின்வருநிலை, நிரனிறை, சிலேடை, விரோதம் (முரண் அணி) போல்வன பெரிதும் சொல் நோக்கியன. எனினும் பிற பலவும் பொருள் நோக்கியனவாதலால், இது பொருளணியியல் எனப்பட்டது.

முதலிலுள்ள 33 அணிகளும் ஒரு பாடலில் தனியே வருவன; சங்கீரணம் பல அணிகளும் சேர்ந்து ஒரு பாடலில் வருவது; பாவிகம் காப்பியம் முழுவதும் வருவது. இதனால் 'வாழ்த்தொடு' – என்று 'ஒடுக்' கொடுத்து, சங்கீரணம் பாவிகத்தை இறுதியில் தனியே பிரித்துக் கூறியுள்ளார்.

## 1. தன்மையணி

எவ்வகைப்பட்ட பொருளாயினும் அதன் உண்மைத் தன்மை விளங்குமாறு கூறுவது தன்மையணி, இயல்பையே கூறினும் அழகு படச் சொல்ல வேண்டும். 'சூழ்ந்து முரன்று அணவி வாசம் துதைந்து ஆடித் தாழ்ந்து மதுநுகரும் வண்டு' - மலரில் சூழ்ந்து, மேலே அணைந்து, வாசத்தைப் பொருந்தி ஆடி, உள்ளே சென்று மதுவை (மகரந்தப் பொடியை) நுகரும் வண்டு. இது வண்டின் இயல்பை உள்ளபடி கூறு வதால் தன்மையணி.

## 2. உவமையணி

ஒரு பொருளை விளக்குவதற்கு அதனுடன் ஒப்புமையுடைய பண்பு, தொழில், பயன் எனும் மூன்று அடிப்படையில், உவமிப்பது உவமையணி. பண்பு, தொழில், பயன் என்பன பொதுத்தன்மைகள். பவளம் போன்ற செவ்விதழ் - நிறம் பற்றிய பண்பு உவமை. புலிபோலப் பாய்ந்தான் - தொழில், செயல்பற்றிய உவமை. மழை போல வாரி வழங்கும் வள்ளன்மை - பயனுவமை.

இது 24 உள்வகைகளாகவும் எட்டு அணிகளுடன் கூடி வருமென்றும் மிக விரிவாகக் கூறப்படுகிறது. இவற்றுட் சிலவே

தெளிவுடையவை. பிற யாவும் புலமை விளையாட்டாக மட்டுமே அமைபவை. இதனால் இவற்றுள் சிலவற்றையே கற்றோர் போற்றுவர். தொல்காப்பியரும் சில வேறுபாடுகளை மட்டுமே கூறியுள்ளார்.

### 3. உருவகவணி

உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறு படுத்திக் கூறாமல், ஒன்றெனவே கூறிவிடுவது உருவகமாகும். மலர்போன்ற கையை - கைமலர் என்பது. தளிர்போன்ற அடியை - அடித்தளிர் என்பது. பவளம் போன்ற இதழை - இதழ்ப்பவளம் என்பது. நெஞ்சக் கனல் (கனல்-நெருப்பனைய நெஞ்சம்), புரட்சிப் புயல் (புயல் போன்றவர்), என இன்று வழங்கும் உருவகங்கள் பல. உருவகத்தில் 15 உள்வகைகள் கூறப்படுகின்றன மேலும் இது 6 பிற அணிகளுடனும் வரும் என விரிக்கப்படுகிறது.

### 4. தீவகவணி

தீவகம் - விளக்கு. செய்யுளில் ஒரு சொல்லானது ஓரிடத்தில் நின்று முன்னும் பின்னும் நடுவிலும் சென்று பொருள் தருவது தீவகம் என்னும் அணியாகும். ஓரிடத்தில் வைத்த விளக்கு, சுற்றிலும் ஒளி தருவது போன்றது. இது.

இவை குணம், தொழில், சாதி, பொருள் குறித்து வரும்.

முதலிலும் இடையிலும் இறுதியிலும் இந் நான்குடனும் இணைந்து வரும். மேலும் மாலை, விருத்தம், ஒருபொருள், சிலேடை என நான்குடனும் உவமை, உருவகத்துடனும் இணைந்து இத்தீவக அணி வரும்.

**உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண**
**அண்ணாத்தல் செய்யாது அளறு (255)**

இதில் 'ஊன்' என்பது இடைநிலைத் தீவகம். ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என முன்னும், ஊன் உண்ண அளறு (நரகம்) அண்ணாத்தல் செய்யாது எனப் பின்னும் ஒரே சொல் (ஊன்) இரண்டு பக்கத்திலும் சென்று பொருள் தருகிறது. (இதனைத் தாப்பிசைப் பொருள்கோளில் அடக்குவர் நன்னூலார்).

### 5. பின்வருநிலையணி

ஒரு செய்யுளில் முன்னர்வந்தசொல்லும் பொருளும் பின்னரும் பல இடத்தும் திரும்ப வருமாயின், அது 'பின்வரு நிலையணி'

எனப்படும். சொல்மட்டும் திரும்ப வந்து பொருள் வேறுபடுவது சொற்பின்வருநிலையணி. ஒரே பொருள் தரும் சொற்கள் திரும்ப வருவது பொருள் பின்வருநிலையணி. முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்த்திரும்ப வருவது சொற்பொருட் பின்வருநிலையணி. 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம், செல்வத்துள் எல்லாம் தலை' (411). இக்குறளில் சொற்பொருட் பின்வரு நிலையணியுளது.

### 6. முன்ன விலக்கணி

ஒன்றனைக் குறிப்பினால் விலக்குவது முன்ன விலக்கணி. முன்னம் - குறிப்பு. அது மூவகைப் பட்டதாகிய இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனும் முக்காலங்களோடும் கூடிவரும். 'செல்லாமை உண்டேல் எனக்கு உரை, மற்று நின் - வல்வரவு வாழ்வார்க்கு உரை,' (1151). நீ வரும் வரை உயிர்வாழ்வார் உண்டேல், அவரிடம் நீ விரைந்து வருவதைப் போய்க்கூறு என்னும் இது, நான் அதுவரை வாழமாட்டேன் என்பதைக் குறிப்பால் கூறி விலக்குவதால் 'முன்ன விலக்கு அணி' யாகும். (தமிழில் அகத்துறை சார்ந்த அணி இது) தலைவி, தன்னைத் தலைவன் பிரிவதை விலக்குவதே பெரும்பாலும் இவ் அணியாக வரும்.

இது பொருள் குணம் காரணம் காரியம் நான்குடன் சார்ந்து விலக்கணி வகையாக வரும். மேலும் 15 வகையான விலக்கணிகள் விளக்கப்படுகின்றன.

மேலும் வேற்றுப் பொருள்வைப்பு, சிலேடை, ஏது - என்னும் மூன்றணிகளுடன் கலந்தும் இது வரும்.

### 7. வேற்றுப் பொருள் வைப்பணி

முதலில் ஒரு பொருளைச் சொல்லத் தொடங்கி, பின்பு அதனை நிலைநாட்டுவதற்காக, உலகறிந்த தன்மையுடைய ஒரு செய்தியைச் சொல்லி முடிப்பது வேற்றுப் பொருள் வைப்பணி ஆகும். அது எட்டு வகைப்படும்.

**புறந்தந்து இருள் இரியப் பொன்நேமி உய்த்துச்**
**சிறந்த ஒளிவளர்க்கும் தேரோன் - மறைந்தான்**
**புற ஆழி சூழ்ந்த புவனத்தே தோன்றி**
**இறவாது வாழ்கின்றார் யார்?**

பொற்சக்கரத்தை உருட்டி, இருளை ஓட்டும் கதிரவனும் மறைந்தான். கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் தோன்றி இறவாது

யார்தான் வாழ்கின்றார்? - இதில் கதிரவன் மறைந்தான் என்பது சிறப்புப் பொருள். அது இவ்வுலகில் இறவாது வாழ்கின்றவர் எவருமிலர் எனும் பொதுப்பொருளால் உறுதிப்படுத்தப் படுகிறது. இவ்வாறு பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும் சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் நிலைநாட்டுமாறு, இரண்டையும் ஒன்றற்கொன்று சான்றாவது போல வைப்பதே வேற்றுப்பொருள் வைப்பு.

## 8. வேற்றுமையணி

வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ ஒப்புமையுடைய இரண்டு பொருள்களைக் கூறி, இறுதியில் அவற்றில் ஒன்றினொன்று வேறுபடும் சிறப்பைச் சொல்லி முடிப்பது வேற்றுமையணியாம். வேறு பாட்டைச் சொல்வதும் உண்டு; ஒன்றை மிகுதிப்பட மேம்படுத்திக் கூறலுமுண்டு.

இது குணம் பொருள் சாதி தொழில் நான்குடனும் சேர்ந்தும் வரும்.

**ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின் நேர் தனியாழி வெங்கதிர்ஒன்று ஏனையது**
**தன் நேரிலாத தமிழ்**

மலைமேல் தோன்றி, உயர்ந்தோர் தொழவிளங்குதலும், ஒலிக்கும் கடல்சூழ் உலகஇருளை ஓட்டுதலும் சூரியனுக்கும் தமிழுக்கும் ஒப்புமையாகும். ஒன்று புற இருளை ஓட்டுகிறது; மற்றது அக இருளை ஓட்டுகிறது. இவற்றுள் ஒற்றைச் சக்கரத்தையுடைய கதிரவன் ஒன்று; ஆனால் மற்றையதோ தனக்கு ஒப்பில்லாத தமிழ். இதில் ஒப்புமை கூறிவிட்டுத் தமிழைத் தனக்கு ஒப்பில்லாதது என்று கூறுவதால் இது வேற்றுமையணிப் பாற்படும்.

ஓங்கல் - மலை. ஏங்குஒலி - பேரொலி (செய்யும் கடல்). ஆழி - சக்கரம்.

## 9. விபாவனை அணி

விபாவனை - சிறப்பாகச் சிந்திக்கவைத்தல். குறிப்பின் வெளிப்படல் - சிந்தித்து ஆராய்தலினால் அறிதல்.

ஒரு காரிய நிகழ்ச்சிக்கு., உலகமறிந்த காரணத்தை நீக்கி, வேறு ஒரு காரணத்தை, இயல்பாகச் சிந்தித்து அறியும்படி உரைப்பது விபாவனையணி எனப்படும்.

தீ இன்றி வேகும் தமியோர் சிந்தை - என்றால் காதலர் தனிமையிலிருக்கும் போது அவர்கள் உள்ளம் தீ இல்லாமலே வேகும்.

'செழுந்தேறல் வாய்இன்றி மஞ்ஞை மகிழ்ந்தாடும்' - செழுமை மிகும் மதுவை வாயால் பருகாமலே மயில் மகிழ்ந்து ஆடும். 'வாயிலார் இன்றிச் சிலர் ஊடல் தீர்ந்தார்' - தூதுவர் இன்றியே காதலர் சிலர் ஊடல் தீர்ந்தனர் - தூதுவர் இன்றியே காதலர் சிலர் ஊடல் தீர்ந்தனர். 'அமரின்றிக் கன்றிச் சிலை வளைக்கும் கார் - கார்கால மேகம் போரின்றியே (வான) வில்லை வளைக்கும்.

இவை உலகறியும் காரணமின்றியே நடந்தன. அதற்குப் பிறிதொரு காரணமுண்டு. அதுதான் கார்காலம். அப்பருவ மாதலால் தனியோர் மனம் தீய்கிறது; கள்ளுண்ணாதே மயில் களித்தாடுகிறது; தூதுவரின்றியே காதலர் ஊடல் தீர்கின்றனர்; போரின்றியே வானம் வில்லை வளைக்கிறது.

உலகறிந்த காரணமின்றி நடந்தாலும் கார்காலமாதலால் நடந்தன என உய்த்துணருமாறு, குறிப்பாகவும் இயல்பாகவும் பாடப் பெற்றுள்ளன. உண்மைக் காரணம் குறிப்பினால் வெளிப்படுகிறது. இவ்வாறு சிந்தித்து உணர வைப்பதால் இது 'விபாவனை' ஆயிற்று.

**தீயின்றி வேம்தமியோர் சிந்தை செழுந்தேறல்**
**வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார்**
**இன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார் அமரின்றிக்**
**கன்றிச் சிலைவளைக்கும் கார்.**

## 10. ஒட்டணி

புலவன் தான் கருதிய பொருளை மறைத்து, அக்கருத்தைப் புலப்படுத்துதற்குத் தக்க பிறிதொன்றைக் கூறுவது ஒட்டணியாகும்.

இதனைத் தமிழில் உவமப் போலி, பிறிது மொழிதலணி, நுவலா நுவற்சியணி எனவும் கூறுவர்.

இது நான்கு வகையாகக் கூறப்படும். அதில் ஒன்று வருமாறு: களித்தாடும் படியான செவ்வியுடைய தாமரையைப் பிரிந்த வண்டு, பிற வண்டுகள் முன்பு மேய்ந்த நீலமலர்களின் குறைபடு தேனை விரும்பியும் அவற்றைச் சேரும்.

இதில் உவமை கூறப்பட்டுள்ளது. இதற்குரிய பொருள் அல்லது உவமேயம் எதுவென்றால் தாமரையாகிய தலைமகளை

நீங்கி, வண்டாகிய தலைமகன், காவி எனப்படும் நீலோற்பல மலர் களாகிய பரத்தையை நாடிச் சென்றான் என்பதாகும்.

'இது, பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி சொல்லியது' என்று முன்னைய குறிப்புரையில் கூறப் பட்டுள்ளது. இதனை இங்கு, அகப்பாடலில் வரும் 'உள்ளுறை' என்று கூறும்படி இஃது அமைந்துள்ளது.

திருவள்ளுவர்க்கு இவ் அணியில் ஈடுபாடு உண்டு.

**கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது** (772)

சிறிய குறிக்கோள்களுக்காக முயன்று வெற்றி பெறுவதை விட, பெரிய முயற்சிகளில் இறங்கித் தோற்றாலும் அதுவே இனிது! படை வீரர்க்குச் சொன்ன இது, அனைவர்க்கும் பொருந்தும். உவமைதான் இருக் கிறது; அதற்குரிய உவமேயம் எனப்படும் பொருள் வருவித்து உணரப்படு கிறது. கருதிய பொருளை மறைத்து, அதற்கு ஒத்ததோர் உவமையைக் கூறுவதே 'ஒட்டு' அணி.

### 11. அதிசயவணி

தான் விரும்பிய ஒரு பொருளின் வனப்பையும் சிறப்பையும் மனமுவந்து கூறும்போது, உலகஎல்லையைக் கடவாது, பெரியோர் வியக்கும்படி பாடுவது அதிசயவணி.

இது பொருள், குணம், தொழில், ஐயம், துணிவு, திரிவு என ஆறு வகையில் தோன்றும்.

**'ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும்என் பீடு** (1088)

போரில் பகைவரும் அஞ்சும்படியான என் வலிமை, இவளது ஒள்ளிய நுதல் (நெற்றி) ஒன்றனுக்கே தோற்றுவிட்டதே! என்ன வியப்பு? இக் குறளில் பொருள் அதிசயவணி உளது.

### 12. தற்குறிப்பேற்றவணி

இயல்பான ஒன்றில் கவிஞன் தன் கற்பனைக்குறிப்பை ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றம். உலகிலுள்ள இயங்கு பொருள், இயங்காப் பொருள் எனும் இரண்டிலும் இயல்பாக உண்டாகும் தன்மையை விடுத்து, தான் கருதிய ஒன்றினை அதன்கண் ஏற்றிச் சொல்வது இது.

இதன்கண் அன்ன, போல முதலான உவமஉருபுச் சொல் சில பொருந்தி வருதலுமுண்டு.

இளங்கோவடிகளுக்கும் கம்பருக்கும் தற்குறிப்பேற்ற அணியில் மிகுந்த ஈடுபாடு உண்டு. மிகப் பல இடங்களில் அவர்கள், இதனை ஆள்கின்றனர். தக்கவாறு தொகுத்து, இடம் நோக்கி விளக்கி, ஆராயத் தக்கது இது.

கண்ணகி கோவலனுடனும் கவுந்தியடிகளுடனும் மதுரை நகருக்குள் செல்ல முற்பட்டபோது, "போர் உழந்து எடுத்த ஆர் எயில் நெடுங்கொடி, வாரல் என்பனபோல் மறித்துக் கை காட்ட" என்பார் இளங் கோவடிகள். போர் வெற்றிகளால் மதில் மீது எடுத்த நீண்ட கொடிகள் அசைந்தாடின. அஃது இயல்பாகக் காற்றில் அசைவது. ஆனால் அக்காட்சி அவர்களை " வராதீர்கள்" என மறித்துக் கை காட்டுவது போல இருந்தது எனக் கற்பனை செய் திருப்பதே தற்குறிப்பேற்றம் (புறஞ் சேரி 189 -190)

## 13. ஏதுவணி

ஏது - காரணம். ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி, இதனால் இது விளைந்தது என்று, காரணத்தைச் சிறப்பாக எடுத்துச் சொல்வது 'ஏது' என்னும் அணியாகும். அது காரக ஏது, ஞாபக ஏது என இருவகைப்படும்.

காரக ஏது - ஒரு தொழில் நிகழ்ச்சிக்குக் கருவியாயுள்ள ஏது. ஞாபக ஏது - ஒன்றை அறிவிக்கும் கருவியாயுள்ள ஏது.

முதல்வன் (கருத்தா),பொருள், கருமம், கருவி, ஏற்பது, நீக்கம் எனும் ஆறும் காரணமாகத் தோன்றுவது காரக ஏது. 'யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு' (குறள் 397). கல்வி கருவியாதலின் இது 'கருவி காரக ஏது அணி' யின் பாற்படும்.

இதனை அபாவ ஏது, சித்திர ஏது என்றெல்லாம் மிகப் பலவாறு வகைப்படுத்துவது வடநூன்மரபு.

## 14. நுட்பவணி

நுட்பம் - குறிப்பாக உணர்த்துவது நுட்பம். வெளிப்படை யாக நன்கு தெரியும்படி கூறாமல், பிறருக்குத் தம் மனக்கருத்தைக் குறிப்பாகவும் செயல்மூலமும் அறிவுறுத்துவது நுட்பவணி. தோழியர் கூட்டத்திடையே, தலைவி ஞாயிறு மறையும் மேற்குத் திசையை நோக்கி நின்றாளாம். அது இரவுக்குறிக்கு அவள் உடன்பட்டதைக் காட்டும் குறிப்பாகும். இவ்வாறு புனைந்த பாடலைக் 'குறிப்பு நுட்பம்' என்றனர்.

## 15. இலேசவணி

மனக்குறிப்பை வெளிப்படுத்துவது சத்துவம் அல்லது மெய்ப் பாடு. அதனை மறைத்து, அம் மெய்ப்பாடு பிறிதொன்றால் நிகழ்ந்த தாகப் புனைவது இலேசமாகும். கல்லுயர்தோள் கிள்ளியாகிய சோழனது குதிரையைத் தொழுது, காதலால் கண்ணீர் அரும்பும் பெண்கள், அது படைகளின் எழுச்சியால் எழுந்த தூசிபட்டுக் கண் கசிந்ததாகக் கூறுவ ராம். மெய்ப்பாட்டின் உண்மையை மறைப்பது இது. அது வேறொன் றால் நிகழ்ந்ததெனக் கூறுவர்.

புகழ்வதுபோலப் பழித்தல், பழிப்பது போலப் புகழ்தல் ஆகிய இரண்டும் இவ்வாறு உள்ளதை வேறுபடக் கூறுவதால் இதி லடங்கும் என்பர்.

## 16. நிரனிறையணி

முதலில் சொல்லையும் பொருளையும் நிரலே - வரிசைப் பட நிறுத்தி அவற்றை முடிக்கும் சொற்களையும் அவ்வாறே வரிசைப்பட நிறுத்துவது நிரனிறை அணியாகும்.

**மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும்
என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியதகலமும்
வலியும், தெறலும், அளியும் உடையோய் (புறம் 2 )**

மண் - பொறுமை, விசும்பு - ஆராய்ச்சி, சிந்தனை. வளி - வலிமை. தீ - அழித்தல் . நீர் - தண்ணளி, கருணை. இது நிரனிறையணி. வரிசையை மாற்றி அமைப்பினும் பொருளுக்கேற்ப, மொழி மாற்றிப் பொருள் கொள்வர். அதைமொழி மாற்றிப் பொருள்கொளல் என்பர். இது எதிர் நிரனிறை எனப்படும்.

## 17. ஆர்வமொழியணி

உள்ளத்துள் உள்ள ஆர்வம் மிகுதியாக வெளிப்படப் புனை வது ஆர்வமொழியணி.

**கருமணியிற் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம் (1123)**

திருவள்ளுவர் காதலன் தன் காதலிபால் வைத்த ஆர்வத்தை அவனது கூற்றாகக் கூறுவது இது. கண்ணுள்ளிற்கும் கரு மணியில் ஆடும் பாவையே! நீ வெளியே வா! யான் விரும்பும் என் திரு நுதலாள் காதலியை வைத்துப் போற்ற, வேறு இடம் இல்லை எனக்கு!

**18. சுவையணி**

உள்ளத்தினுள் நிகழும் உணர்வுகளின் தன்மை, புறத்தே உடம்பின்கண் வெளிப்பட, எட்டுவகை மெய்ப்பாடுகளுடன் நடப்பது சுவையணியாகும்.

தொல்காப்பியர் மெய்ப்பாடு என்றதையே இவ்வாசிரியர் சுவையணியாக வகுக்கின்றார்.

அவை வீரம் அச்சம் இழிப்பு வியப்பு காமம் அவலம் உருத்திரம் (கோபம்) நகை எனும் எண்சுவைகளாகும்.

இவற்றுள் நகைச் சுவைக்கு மட்டும் ஓர் உதாரணம் காணலாம்:

**கிளையினில் பாம்பு தொங்க**
**விழுதென்று குரங்கு தொட்டு**
**விளக்கினைத் தொட்ட பிள்ளை**
**வெடுக்கெனக் குதித்ததைப் போல்**
**கிளைதொறும் குதித்துத் தாவிக்**
**கீழுள்ள விழுதை எல்லாம்**
**ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி**
**உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்! -**

**பாவேந்தர்பாரதிதாசன்**

ஆலமரத்திலிருந்த குரங்கு அதன் கிளையில் தொங்கிய மலைப் பாம்பை விழுதென்றெண்ணித் தொட்டது; அது தொட்டதும் நெளியவே அஞ்சி நடுங்கி, விளக்கைத் தொட்டபிள்ளை சூடுபட்டுக் குதித்ததைப் போலக் கிளைதொறும் தாவிக் குதித்து, கீழே தொங்கிய விழுதையெல்லாம் பாம்பென்றே நினைத்து, மரத்தின் உச்சிக்கே ஓடிப்போனது. அங்கே போன பிறகும் அச்சத்தால், தன் வாலையே பாம்போ என எண்ணி மருண்டு பார்த்தது.

இதிலுள்ளது நகைச்சுவை.

**19. தன்மேம்பாட்டுரையணி**

ஒருவன் தன்னைத் தானே பெருமிதத்தோடு உயர்த்திப் புகழ்ந்து சொல்வது தன்மேம்பாட்டுரையணி.

தமிழில் புறப்பொருளில் நெடுமொழி, வஞ்சினக்காஞ்சி என்றெல்லாம் துறைகளாகக் கூறப்படுமிது இங்கு அணிவகையில் சேர்க்கப் பட்டுள்ளது. இது தெளிவாக, தண்டி யாசிரியர், தமிழ்நூல் வகையையும் தெரிந்தவர் என்பதைக் காட்டுகிறது.

**எஞ்சினார் இல்லை எனக்குஎதிராய்; இன்னுயிர் கொண்டு**
**அஞ்சினார் ஓடுவீர் உய்ந்து!**

விற்போர்க்களம், சொற்போர்க்களம் போன்றவற்றில் இவ்வாறு தன்னைத் தான் மேம்படுத்தி உரைப்பது தவறாகாது. அதை அழகுபடச் சொல்வதே நீண்மொழி, நெடுமொழிவஞ்சி, வஞ்சினக் காஞ்சி போல்வன.

## 20. பரியாயவணி

சொல்லக் கருதியதைக் கூறாமல், ஆயினும் அப்பொருள் குறிப்பாகத் தோன்றுமாறு, பிறிதொன்றைக் கூறுவது பரியாய வணி. பரியாயம்-சாமர்த்தியமாகப் பேசுவது. அதாவது தன் கருத்தை நேரே கூறாமல் பிறிதொன்றைச் சொல்லி, அதனை அறிவிப்பது.

தமிழில் அகத்திணையில் இடத்துய்த்து நீங்குதல் என்பது ஒரு துறை. தலைவி தலைவனைச் சந்திக்க, தக்க இடத்தில் அவளை நிறுத்தி விட்டுத் தோழி பிரிந்து போவது இது. அப்போது தோழி. நீ இங்கே நில்; யான் மலையுச்சிக்குப் போய் மலர்களைக் கொய்து வருவேன் என்று கூறிச் செல்வாள். உண்மையான காணம், தலைவி தலைவனுடன் தனித்திருந்து அளவளாவ வேண்டும் என்ற கருத்தேயாகும். இங்ஙனம் புனைவது தமிழ் அகப்பாடல் மரபாதலால் இவ்வணி வடமொழிப் பெயர் பெற்றிருப்பினும் தமிழ் அடிப்படையுடையதே என உணரலாம்.

## 21. சமாகிதவணி

சமாகிதம்-துணைப் பயன். முதலில் எடுத்த முயற்சியின் பயனைப் பிறிதொன்று தந்ததாக முடிப்பது இது.

உமையம்மை இறைவனிடம் ஊடல் கொண்டு, அதைக் கை விடாதிருந்தாள், இராவணன் கயிலை மலையை எடுக்க முயன்ற போது, அசைவைக் கண்டு அஞ்சிய தேவி, ஊடல் தவிர்ந்து சிவனைத் தழுவிக் கொண்டாள். இதில் ஒரு முயற்சியின் பயனைப் பிறிதொன்று தந்தது.

## 22. உதாத்தவணி

உதாத்தம் - பிறிதொன்றற்கு இல்லாத பெருஞ்சிறப்பு. உலகம் வியக்கும் படியான செல்வமும், மேன்மேலும் உந்துதல் தரும் ஊக்கமும் பற்றிய உயர்ச்சியைப் புனைந்துரைப்பது உதாத்த மாகும். இதனைத் தமிழில் வீறுகோளணி என்பர். வீறு-பிறி தொன்றற்கில்லாத தனிச்சிறப்பு.

**கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்**
**என்றும் வறிஞர் இனங்கவர்ந்தும்-ஒன்றும்**
**அறிவரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம**
**செறிகதிர்வேற் சென்னி திரு**

சோழ மன்னனது செல்வமிகுதியைப் புனைகிறது. கன்றும்-பொறாமையால் சினங்கொள்ளும் பகை மன்னர்களது செல்வத்தைக் கவர்ந்து வருவதாலும், வறியவர் கூட்டம் எப்பொழுதும் பெற்றுச் செல்வ தாலும் சோழ மன்னனது செல்வத்தினது அளவு அறிதற்கு அரி தாய் நிலை பெற்று நிற்கும். சென்னி-சோழர்தம் குடிப்பெயர்.

இதுபோல ஊக்கமிகுதியைப் புனைவதும் உதாத்தவணியாகும்.

## 23. அவநுதியணி

அவநுதி - மறுத்துரைத்தல். மறுப்பதுபோல் ஒன்றன் சிறப் பையே வெளிப்படுத்தல் இது.

ஒன்றன் சிறப்பு, பொருள், குணம் ஆகியவற்றின் உண்மையை மறுத்து, பிறிதொன்றாக உரைப்பது அவநுதியாகும்.

போரில் வெல்ல வல்ல வேந்தன் செங்கோலன் அல்லன்; கொடுங்கோலன். ஏனென்றால் தன்மீது ஆசைகொண்ட மகளிரின் அழகையும் அணிகளையும் நாணத்தையும் மன நிறையையும் நிலை தளராமல் காக்கின்ற அறநெறியை அவன் கடைப்பிடிக்கவில்லை. இது வேந்தனது ஆட்சிச் சிறப்பை மறுப்பதுபோல் தோன்றினும், அவனது காதற்சிறப்பைக் காட்டவே இவ்வாறு புனையப் படுகிறது. இது 'சிறப்பவநுதி' என்பர்.

## 24. சிலேடையணி

ஒரு வகையினதாக நின்ற சொற்றொடர், பல்வேறு பொருள் தருமாறு, விளங்கும்படி புனைவ்து சிலேடையணியாகும். ஒரே தொடர் பலபொருள் தருமாறு அமைவது இது. தமிழில் இதை இரட்டுற **மொழிதல்** என்பர். குன்றேறாமா - குன்று ஏறா மா (விலங்கு); குன்று ஏறு ஆமா - குன்றில் ஏறும் காட்டுப்பசு. 'செல்வையாயின் செல்வை ஆகுவை' (புறம். 70) - செல்வை - செல்லின். செல்வை - செல்வ முடையவனாதல்.

இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை, என இரு வகைப்படும். 'செல்வை' என்பது செம்மொழிச் சிலேடை. சொல்லைப் பிரிக்காமலே இருபொருள் தருகிறது. குன்று ஏறு ஆமா; குன்று ஏறா மா - குன்றேறாமா. இது பிரிமொழிச் சிலேடை. இவ்வாறு வருவன மிகப்பலவுள.

**செங்கரங்க ளான்இரவு நீக்கும்; திறம்புரிந்து**
**பங்கய மாதர் நலம்பயில - பொங்குதயத்து**
**ஓராழி வெய்யோன் உயர்ந்த நெறியொழுகும்**
**நீராழி நீணிலத்து மேல்**

இது சூரியனுக்கும் சோழனுக்கும் ஏற்பப் பொருள்தரும் செம் மொழிச் சிலேடை.

**சூரியனுக்கு:** சிவந்த கதிர்க் கைகளால் இரவுப் பொழுதை நீக்கும். தாமரை மலர்களாகிய மாதர்கள் காதலித்து, அழகு பெற, உதயத்தில் தோன்றி வானில் வலம் வரும்.

**சோழனுக்கு:** சிவந்த கைகளால் இரப்பவர் வறுமை தீர்ப்பான். தாமரைத் திருவாகிய இலக்குமியால் செல்வம் பெருகும். உலகை ஒற்றை ஆட்சிச் சக்கரத்தால் ஆண்டு உயர்ந்த அறநெறியில் ஒழுகுவான்.

கரம்- கதிர், கை. இரவு-இருள், இரத்தல். பங்கயமாதர்- தாமரை, இலக்குமி.

ஓர் ஆழி -ஒற்றைச் சக்கரம். சூரியனும் ஒற்றைச் சக்கரத் தேர் ஓட்டுபவன்; சோழனும் உலகைத்தன் ஒற்றைச் சக்கரத்தால் முழுவதும் ஆள்பவன். வெய்யோன்-வெப்பமுடைய சூரியன்; மக்களால் விரும்பப்படுபவன். உயர்ந்த நெறி - வானவழி, மிக உயர்ந்த அறநெறி. நீர் ஆழி நீள்நிலம்- கடலால் சூழப்பட்ட உலகம்.

இச்சிலேடையணி ஒருவினைச் சிலேடை, பலவினைச் சிலேடை, முரண் வினைச்சிலேடை, நியமச் சிலேடை, நியம விலக்குச் சிலேடை, விரோதச் சிலேடை, அவிரோதச் சிலேடை எனும் ஏழு வகையாகப் புனையப்படும்.

## 25. விசேடவணி

ஒன்று குறைபடுதல் காரணமாக ஒரு பொருளுக்கு மேம்பாடு தோன்ற உரைப்பது இது. குணம், தொழில், சாதி, பொருள், உறுப்பு முதலாயின குறைபடுதல் காரணமாக, ஒரு பொருளுக்கு மேன்மை தோன்றும்படி உரைப்பது விசேடவணியாகும்

**கோட்டம் திருப்புருவம் கொள்ளா; அவர் செங்கோல்**
**கோட்டம் புரிந்த; கொடைச் சென்னி-நாட்டம்**
**சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்**
**சிவந்தன செந்தீத் தெற**

சோழன் கலிங்கத்தை வென்ற செய்தி இதிலுளது. அவன் சினங்கொள்ளு முன்பே பகைவர் நாடு தீப்பற்றி அழிந்தது என்பது கருத்து. புருவம் கோட்டம்-வளைவு கொள்ளு முன்பே, பகைவரின் செங்கோல் வளைந்ததாம். சென்னி-சோழன். நாட்டம்-கண். சோழனது கண் சிவக்கு முன்பே கலிங்க நாட்டு ஊர்கள் தீப்பட்டுச் சிவந்து போயினவாம். இது குணக்குறை விசேடம்.

**26. ஒப்புமைக்கூட்டவணி**

ஒப்புமையுடையவற்றை ஒருங்கு கூட்டிச் சொல்லுதல். புலவன் தான் கருதிய குணம் முதலியனவற்றால் சிறந்த பொருள்களை, ஒருங்கு வைத்துக் கூட்டிச் சொல்லி, ஒன்றன் மேன்மை விளங்க வுரைப்பது ஒப்புமைக் கூட்டவணி.

அது புகழொப்புமைக் கூட்டம், பழிப்பொப்புமைக் கூட்டம் என இரு வகைப்படும். உமாதேவியின் மார்பு அழுந்தவே, குழையக் கொடுத்த ஏகம்ப நாதரும் ஒளிவீசும் தூண்டா மணி விளக்கும் ஈகைப் பண்புள்ள பெரியோர்களும் காஞ்சி நகரத்தில் ஒருங்கு கூடி இருத்தலால், இந்நிலவுலகம் நிலைபெற்றுளது. இவ்வாறு ஒப்புமைக் கூட்டவணி புனையப்படும். காஞ்சியைச் சிறப்பிப்பது இது.

**27. விரோதவணி**

விரோதம் - முரண். தமிழ் நூலார் தொடையில் இதை அடக்குவர். ஒன்றற்கொன்று மாறுபட்ட சொல்லாலும் பொருளாலும், முரண்பாட்டுத் தன்மை தோன்றப் புனைவது விரோதவணி.

காலை மாலை, கைகூப்பல் கால் தொழுதல், மேல்கீழ், கருமை வெண்மை செம்மை - இச்சொற்கள் வரத் தொடுப்பது சொல் விரோதவணி.

குயிலின் குரல் சோர்ந்து அடங்க, மயில் மகிழ்ந்து ஆட - எனப் புனைவது பொருள் விரோதவணி.

### 28. மாறுபடு புகழ்நிலையணி

கவிஞன் தான் கருதிய பொருளை மறைத்து, அதைப் பழிப் பதற்காக, பிறிதொன்றைப் புகழ்வது மாறுபடு புகழ் நிலையணி.

பிறரிடம் கையேந்தி இரப்பவரைப் பழிப்பதற்காக, மான் இனத்தைப் புகழ்வது ஒரு கற்பனைத்திறம். ''இந்த மான் கூட்டம் இரத் தலை அறியா; எவர் பின்னாலும் போகமாட்டா; நிழல் நீர் புல் ஆகிய வற்றைத் தாமே தேடிப் பெறினல்லாது பிறர் தந்தாலும் பெற்றுக் கொள்ளா; இத்தகைய இப்புள்ளிமான்களுக்கு இப் பூமியில் துன்ப மில்லையல்லவா?'' - இவ்வாறு மான் கூட்டத்தைப் புகழ்வது, முயற்சியின்றி இரந்து வாழ்வோரைப் பழிப்பதாயிற்று. இதுவே மாறுபடு புகழ் நிலையணி.

### 29. புகழாப் புகழ்ச்சியணி

ஒன்றனையே பழிப்பது போன்ற பாவனையிற் கூறி, அதன் மேன்மை புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சியணி.

**பாரி பாரி என்றுபல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே**
**(புறம் . 107)**

கபிலர் பாட்டு இது. பாரிமட்டுமா உலகு புரக்கின்றான்; இந்தச் செம்மைசால் நாவையுடைய புலவர்கள் அவனையே புகழ்கின்றனர். ஆனாலும், இங்கு மாரியும் - மழையும் உலகு புரப்பதொன்று உளது. இதனை அவர்கள் மறந்து விட்டனர் போலும்!

பாரியைக் குறைத்து மதிப்பது போலுமிது, அவனுக்கு இவ் வுலகில் மாரியைத் தவிர, வேறு ஒப்புமை இல்லை எனப் புகழ்வ தாகிறது. புறநானூற்றுப் பழைய உரையாசிரியர், 'பழித்தது போலப் புகழ்ந்தவாறு' என்று குறிப்பிடுகின்றார்.

### 30. நிதரிசனவணி

நிதரிசனம்- காட்சிப்படுத்தல். இது ஒருவகை உவமை போன்றதே. ஒரு வகையாக நிகழ்வது ஒன்றுஅதற்கு ஒத்த பிறிதொன் றனுக்குப் புகழாகவோ தீமையாகவோ புலப்படுவதாகப் புனைவது நிதரிசனவணி.

சூரியன் தோன்றியதும் செந்தாமரை மலர்ந்தது; அல்லி மலர்கள் வாடிக் குவிந்தன. பிறர் செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வதையும் சிறியோர் பொறாமைப் படுவதையும் இவை அறிவுறுத்தின. மலர்களின் நிகழ்வுகள், மாந்தர்தம் மன இயல்பை அறிவுறுத்தப் பயன்பட்டன.

### 31. புணர்நிலையணி

செயல், பண்பு என இவை இரு பொருளுக்கு ஒரு முடிவே பொருந்தச் சொல்வது புணர்நிலையணியாகும். இரண்டுக்கும் ஒரே வினை முடிபு இருக்கும்.

காதலியின் கண்கள், கருகிப் பரந்து செல்லும் நீண்ட முகிலுடனே நீரைப் பொழிந்தன. இது 'வினைப் புணர் நிலையணி', (கார்காலமாதலின் கண்களும் நீரைப் பொழிந்தன. )

### 32. பரிவருத்தனையணி

பொருள்கள் ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்கிக் கொள்வதாகப் புனைவது பரிவருத்தனையணி.

**சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையும் தந்து (1183)**

இக் குறளில் தலைவர் நோயையும் பசலையையும் தந்து அவற்றுக்கு ஈடாக என் அழகையும் நாணத்தையும் கொண்டார் எனத் தலைவி வருந்துகிறாள். இதுவும் பரிவருத்தனையணியே.

### 33. வாழ்த்தணி

இத்தகையவர்க்கு இன்னது கிடைக்கவென்று கவிஞர்கள் தாம் விரும்புவதைச்சொல்லி வாழ்த்துவது, வாழ்த்தணியாகும்.

சங்க கால வாழ்த்துவகைகள் மிகப் பலவாகும். அவை இங்கு அணி எனப்பட்டன.

**வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**

**(1367)**

என்பது தொல்காப்பியம். யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய எனத் தன் வாழ்நாளையே தருவதாக வாழ்த்துவதைப் புறநானூற்றில் காணலாம். (173)

## 34. சங்கீரணவணி

இதுகாறும் கூறப்பட்ட அணி பலவும் தம்முட் கலந்து வரப் புனைவது சங்கீரணவணி.

> **தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
> **காமத்துக் காழில் கனி** (குறள். 1191)

வீழ்வார் வீழ பெற்றவர், பெற்றாரே - சொற்பின்வரு நிலையணி. காமத்துக் காழ்இல் கனி- காமம் கனிபோன்றது எனும் உவமைத் தன்மையும் காமக் கனி என உருவகத்தன்மையும் ஒப்புமையிருப் பினும் இது காழ் இல் கனி (கோதற்றது) என்பதால் வேற்றுமையணித் தன்மையும் இதிலுள. எனவே இக்குறளில் சங்கீரணவணி உளது எனலாம்.

## 35. பாவிகவணி

தமிழில் பொருள்தொடர்நிலைச் செய்யுள் என்றும் காப்பியம் என்றும் கூறப்படுவனவற்றில் நூல் முழுவதுமாக ஊடுருவி நிற்பது பாவிகம் எனும் அணியாகும்.

'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பது சிலப்பதி காரம் உணர்த்தும், மூன்று பாவிகங்களில் ஒன்று. அக்காப்பியம் முழுவதும் ஊழ்வினைத் தாக்கம் ஊடுருவி நிற்கிறது.

### புறனடை

உவமை உருவகங்களைப் பாடும் போது பலவாறு புனைவர். இதுற்கு ஒப்புமை இல்லை, தானே தனக்கு உவமை - என்பது பொது நீங்கு உவமை.

முகமோ, தாமரையோ என ஐயப்பட்டுக் கூறுவதும் உவமையில் அடங்கும்.

முகமாகிய மதியம் உதய முழுமதியத்தையே ஒக்கும் - என உவமையை உருவகமாகக் கூறி, அதனையே மீண்டும் உவமிப்பது.

உவமை கூறும்போது இடத்துக்கேற்ப உவமை கூற வேண்டும். பாலை நிலத்தில் பரற் கற்களையும் மரல்பழத்தையும் உவமிக்கலாம். அவை அவ்விடத்திற் காணப்படுவன.

காலத்திற் கேற்பவும் உவமை கூறவேண்டும். கார்கால வருணனையில் கொன்றைமலர், இந்திரகோபப் பூச்சி (பட்டுப் பூச்சி) போன்றவற்றை உவமிக்க வேண்டும்.

இவைபோலப் பொருளுக்கேற்பவும் பண்பிற்கேற்பவும் சாதி எனும் தகுதிக்கேற்பவும் வழிவழியாக வரும் மரபிற் கேற்பவும் உவமைகள் கூறவேண்டும். 'சுட்டிக்கூறா உவமம்' எனப் பொதுப் பண்பை விரிக் காமலும் உவமை கூறலாம். பவளம் போலும் சிவந்த செவ்வாய் என்பது மரபிற்கேற்ற உவமை. செம்பருத்தி போலும் செவ்வாய் என்பது மரபன்று.

## பொருளணி - நூற்பாக்கள்

## 1. தன்மையணி

**29. எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்**
**சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்.**

உலகிலுள்ள எவ்வகைப்பட்ட பொருளையும் அதன் உண்மைத் தன்மையை, நேரில் கண்டது போல் விளக்கும் சொல் நடையால் பாடப் படுவது தன்மையணி. இதனைத் 'தன்மை நவிற்சி' என்பதுமுண்டு.

தன்மை - உள்ளதான இயல்பு. அதற்காக வந்து போனான். செந் நிறத்தவன், இரண்டு கண்ணன் என யாதொரு அழகுமின்றி கூறுவன அணியாகா.

**30. அதுவே,**
**பொருள் குணம் சாதி தொழிலொடு புலனாம்**

அத் தன்மையணி நான்கு வகைப்படும்: பொருட் தன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழில்தன்மை.

சாதித் தன்மை என்பது ஊர்வன, பறப்பன, நீர் வாழ்சாதி போல்வன. இது தமிழ்ச்சொல் (வடவர் ஜாதி அன்று இது.)

1. சிவபெருமானை நீல மணி மிடற்றன், நீண்ட சடை முடியன் என இவ்வாறு அவ்விறைவனது உண்மைத் தோற்றத்தை வருணிப்பது 'பொருட்டன்மை'.

2. தில்லையில் திருநடஞ்செய்யும் சிவனைத் தொழுத பெண், தன்னை மறந்தாள்; உள்ளங் குளிர மயிர்க் கூச்செறிந்தாள் என்பன 'குணத் தன்மை'. மறதி-குணம்.

3. பரமசிவன் அணிந்த பாம்பு பத்தியான கோடுகளை யுடைய வயிற்றையும் விரியும் படத்தையும் கரிய கழுத்துப் பாகத்தையும் பிளவுபட்ட நாவையும் உடைய தென வருணிப்பது 'சாதித் தன்மை'.

4. சிவனது கொன்றை மலர் மாலையை நீங்காத வண்டு சூழ்ந்தும் முரன்றும் (ஒலித்தும்) வாசம் துளைத்தும் மது நுகர்தலைப் புனைவது 'தொழில் தன்மை'.

(குறிப்பு: இந்நூலாசிரியர் எடுத்துக்காட்டுப் பாடல்கள் அனைத்திலும் சிவனைப் பற்றியே குறிப்பிடுவதால், இவர் ஆழ்ந்த பக்தியுள்ள சிவனடியார் என்று தெரிகிறது. ஒன்றிரண்டு திருமால் பற்றியன.)

## 2.உவமையணி

**31. பண்பும் தொழிலும் பயனும்என்று இவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்**
**புணர்த்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை**

பண்பு, செயல், பயன் என்ற பொதுப்பண்புகளின் அடிப்படையில் ஒரு பொருளோடு பிறிதொரு பொருளை ஒப்புமை புலப் படுமாறு பாடுவது உவமையணி. இது ஒரு பொருளோடு ஒரு பொருளையும், ஒரு பொருளோடு பல பொருளையும், பல பொருளோடு ஒரு பொருளையும், பல பொருளோடு பல பொருளையும் இயைபுபட வைத்து உவமை கூறப்படும்.

இவற்றுள் உவமையை, உவமம், உவமானம் என்றும் உவமிக்கப் படுவதைப் பொருள், உவமேயம் என்றும் கூறுவர். உவத்தல்-ஒத்தல்-ஒப்பல்-ஒப்பிடுதல் ஆவதால், உவமை தமிழ்ச்சொல்லாகிறது.

**பவளம்போல் செவ்விதழ்-பண்புவமை (நிறப்பண்பு)**
**பிறைபோலும் நெற்றி-பண்புவமை (வடிவப்பண்பு)**
**புலிபோலப் பாய்ந்தனன்-தொழிலுவமை**
**மழைபோல் வழங்கினான்-பயனுவமை**

முகில்போலும் கருங்கூந்தல் - ஒரு பொருளோடு ஒரு பொருள்
முத்துப் போன்ற பற்கள்-ஒரு பொருளோடு பல பொருள்
தாயர் போன்ற தண்ணளி - பல பொருளோடு ஒரு பொருள்
கயல்மீன்கள் போற்பிறழும் கண்கள் - பல பொருளோடு பல பொருள்

**காந்தள்**
**அணிமலர் நறுந்தாது ஊதும் தும்பி**
**கையாடு வட்டில் தோன்றும்...**

செங்காந்தள் மலர் ஐந்து விரல்கள் போல் பூத்திருக்கும்; அதில் அங்குமிங்கும் வண்டு மொய்க்கும். இது கைகளால் வட்டுக் காய்களை உருட்டி ஆடுவதுபோல் உளது. (வட்டு-வட்டுக்காய், சதுரங்கம் ஆடும் கருவி), இதில் செந்நிறப் பண்பும், ஆடுகின்ற தொழிலும் பொதுப்பண்பாய் வந்துள. இவ்வாறு பொதுப்பண்புகள் ஒன்றுக்கு மேற்பட்டும் உவமையாகும்.

முத்துப்போலும் வெண்பல்-என்புழி முத்து உவமை, பல் உவமிக்கப்படும் பொருள், உவமேயம், வெண்மை - இரண்டற்கும் பொதுவாகிய பண்பு, போலும்=உவம உருபு இடைச்சொல். முத்துப் பல் - தொகை உவமை (இடையிலுள்ள தொக்கன). முத்துவெண் பல்-விரியுவமை. முத்துப்போலும் வெண்பல்-முற்றுவமை. இவ் வாறு கூறுவாரும் உளர்.

## உவமைவகை

**32. அதுவே,**
**விரியே, தொகையே, இதரவிதரம்,**
**உரைபெறு சமுச்சயம், உண்மை, மறுபொருள்,**
**புகழ்தல், நிந்தை, நியமம், அநியமம்,**
**ஐயம், தெரிதரு தேற்றம், இன்சொல்,**
**எய்திய விபரீதம், இயம்புதல் வேட்கை,**
**பலபொருள், விகாரம், மோகம், அபூதம்,**
**பலவயிற் போலி, ஒருவயிற் போலி,**
**கூடா உவமை, பொதுநீங்குவமை,**
**மாலை என்னும் பால தாகும்**

இதில் 24 உவமை வகைகள் கூறப்படுகின்றன. இவற்றுட் சில தவிர, பிற யாவும் வடமொழிப் பெயர்கள். இந்நூல் தோன்றிய இடைக் காலப் பகுதி வடமொழி வல்லாண்மை தொடர்ந்த நிலை யினது. இன்று எதனையும் ஆங்கிலமயமாக்குதல், ஆங்கிலத்திற் சொல்லுதல் என அனைவரும் மூழ்கிக் கிடக்கும் இதே நிலை, அன்று வடமொழி மீதும் இருந்தது. தமிழுக்கேயுரியனவும் சமற்கிருதமயமாக்கப் பட்டதில் தமிழனே மகிழ்ந்தனன். தமிழனின் தாழ்வு மனப்பான்மை உலகில் வேறெங்கும் காணாதது. எனினும் இந்த அளவேனும் எஞ்சிற்றே என மகிழ்வோமாக!.

**1. விரியுவமை** - பொதுப்பண்பு, உவம உருபு முதலியன விரிந்து நிற்பது. 'பால்போலும் இன்சொல், பவளம் போற்

செந்துவர் வாய்' என்று வரும். இதில் பொதுப்பண்பு, உவம உருபு இரண்டும் விரிந்து வந்தன காண்க.

**2. தொகையுவமை** - பொதுப்பண்பு, உவம உருபு முதலியன தொக்கு வருவது. தாமரை முகம், தரள முறுவல் என வரும் (தரளம்-முத்து).

**3. இதரவிதர உவமை** - பொருள் (உவமேயம்) ஒரு கால் உவமையாயும் உவமை ஒரு கால் பொருளாயும் ஒரே தொடரில் வருவது. 'களிக்கும் கயல்போலும் கண்களும் கண்போல், களிக்கும் கயலும் நீ காண்!'.

**4. சமுச்சயவுவமை** - ஒன்றனை ஒப்பது இதனானேயன்றி இன்னொன்றாலும் ஒக்கும் என்பது.

'குமரியர் தோள், அளவால் வடிவொப்பதன்றியே, பச்சை இளவேய் நிறத்தானும் ஒக்கும்'. வேய் - மூங்கில். அது வடிவால் மட்டுமன்றி நிறத்தாலும் காளிதேவியின் தோளை ஒக்கும்.

**5. உண்மையுவமை** - உவமையைக் கூறி மறுத்து, பொருளினையே கூறி முடிப்பது. 'தாமரை அன்று முகமே ஈது, ஈங்கிவையும் காமருவண்டல்ல' கரு நெடுங்கண்.

**6. மறுபொருளுவமை** - முன்னர் ஒப்பிட்ட உவமைக்கு நிகராகப் பின்னரும் ஓர் உவமையை வைப்பது.

**அன்னைபோல் எவ்வுயிரும் தாங்கும்**
**அனபாயா!**
**நின்னையார் ஒப்பார் நில வேந்தர்-அன்னதே**
**வாரிபுடை சூழ்ந்த வையகத்திற்கு இல்லையால்**
**சூரியனே போலும் சுடர்**

அனபாயச் சோழன் அன்னைபோல் எவ்வுயிரும் தாங்குபவன். இது முதல் உவமை. கடலால் சூழப்பட்ட உலகத்திற்குச் சூரியனைப் போன்று பிறிதொரு சுடர் இல்லை. நீயும் உலக மன்னரிடையே அது போன்றவனே. இது அடுத்துவந்த உவமை.

---

* உள்வகைகள் இருபத்து நான்கிலும் ஒரு சிலவே நினைவில் வைக்க வேண்டியன. பிறவற்றை ஒரு முறை படித்து விட்டாற் போதும், பொது இலக்கணமே சிறப்பாகப் படிக்க வேணடியது.

**7. புகழுவமை** - உவமையைப் புகழ்ந்து உவமிப்பது. 'சிவனது சடை முடிமேல் எந்நாளும் தங்கும் பிறை போன்ற நெற்றி' எனும் போது உவமை புகழப்பட்டவாறு காண்க.

**8. நிந்தையுவமை** - உவமையைப் பழித்து உவமிப்பது. மறுவுள்ள மதியமும் அம் மதிகண்டு வாடிக் குவிகின்ற தாமரையும், முல்லைப்பூங் கோதை முகத்திற்கு ஒக்கு மேனும், முகம் சிறப்புடையது.

**9. நியம உவமை** - இதற்கு இதுவே உவமை எனத் தேற்றேகாரம் கொடுத்துத் துணிந்து சொல்வது. 'தாது ஒன்று தாமரையே நின்முகம் ஒப்பது மற்று, யாதொன்றும் ஒவ்வாது இளங்கொடியே' என்பது இது.

**10. அநியம உவமை** - நியமித்த உவமையைப் பொருந்தா தென்று விலக்கிப் பின்பு அது போன்ற பிறிதொன்றிருப் பின் அதுவும் ஒப்பாகும் என்பது. 'கவிரே (முருக்கிதழே) நின் வாய் போல்வது; அதுவன்றி, அப் பூப் போல்வது, பிறிதொன்று உலகத்துண்டானால், அதுவும் ஒக்கும்.

**11. ஐயவுவமை** - உவமையை நேரே கூறாமல் ஐயுற்றுரைப் பது. 'இவள் முகம், 'தாது அளவி வண்டு தடுமாறும் தாமரையோ, மாதர் விழியுலவு வாண்முகமோ?' (வாண் முகம்- ஒளியுள்ள முகம்).

**12. தெரிதருதேற்றவுவமை** - ஐயுற்றதனைத் தெளிந்து துணிவது. 'தாமரையாயிருந்தால் தண்மதியம் தோன்றியதும் வாடிக்குவியும்; மதியமாக இருந்தால் மதியில் களங்க முண்டு. அதனால் இது என் காதலியின் முகமே என்பதில் ஐயமில்லை'.

**13. இன்சொலுவமை** - உவமிக்கப்படும் பொருளைவிட உவமைக்கு ஒரு கூடுதல் சிறப்பைக் கூறி, இத்துணைச் சிறப்புடையதேனும் ஒப்புமையுடையதன்றிச் சிறந்த தன்று என முடிப்பது. 'மடக் கொடியே! நின் முகம் மானைத் தாங்கி வரும் முழு மதியம் போன்றதே. ஆனாலும் அந்த மதிக்கு, நின் முகத்திற்கு ஒப்பாகும் சிறப்பன்றி, வேறு சிறப்புண்டோ?'

**14. விபரீதவுவமை** - தொன்று தொட்டு உவமையாக்கி வருவதனைப் பொருளாக்கி, பொருளாய் வருவதனை உவமையாக்கி மாற்றிப் புனைவது. 'பெண்களின் திரு முகம் போல் மலரும் செந்தாமரை, அவர்களின் கரு நெடுங்கண் போலும் கயல் மீன்கள் '.

**'வருமுலை அன்ன வாண் முகை உடைந்து**
**திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை'**

(வாள் முகை - ஒளி பொருந்திய மொட்டு)

15. இயம்புதல் வேட்கையுவமை - **உ**வமிக்கப்படும் பொருளை, இன்னதைப் போலும் என்று சொல்ல என்னுள்ளம் விழைகிறது என்பது. 'பூங்கொடியே! தேனூறும் தாமரை மலரை நின் முகத்திற்கு ஒப்பென்று சொல்ல, என்னுள்ளம் ஆசைப்படுகின்றது'.

**16. பலபொருளுவமை** - ஒரு பொருளுக்குப் பலவுவமை கூறுவது. 'பூங்கோதையின் கண் வேலும் கருவிளையும் மென்மானும் காவியும், சேலும் வடுவகிரும் செஞ்சரமும் போலும்'. (கருவிளைமலர், காவி - நீலமலர். சேல்-மீன், வடு-மாவடு, சரம்-அம்பு.)

**17. விகாரவுவமை** - ஒர் உவமையை விகாரப் படுத்தி உவமிப்பது. 'கோதையின் முகத்தை, பிரமன் மதியின் நில வொளியையும் கமலமலரின் புது மலர்ச்சியையும் கூட்டியது போல அமைத்தான்'.

**18. மோகவுவமை** - ஒரு பொருளின் மேல் கொண்ட மோக மயக்கம் தோன்ற உவமை கூறுவது. 'காதலால் உளம் வெதும்பும் நான் கயல் மீன் போலுளது என்று உன் கண்ணைப் பழிப்பேன்: உன் கண் பிறழ்வதுபோல், தானும் அசைவதால் கயல் மீனைப் புகழ்வேன்'. இதனை மயக்கவுவமை என்பதுமுண்டு.

---

குறிப்பு: இவ்வுவமை வேறுபாடுகள் எல்லாம் சொல்லும் முறையாலும் நடை வேறு பாட்டாலும் பொருளை மாற்றிமாற்றிச் சொல்லும் மன வேட்கையாலும் கவிஞன் கவித் திறன் காட்ட முயலும் திறமையாலும் சிறுசிறு வேறுபாட்டுடன் வருகின்றன. இவ் வாறே எண்ணிப் பார்த்தால், இவ் வகை வேறுபாடு கணக்கின்றி விரிய வாய்ப்புள்ளது.

**19. அபூதவுவமை** - முன்பு இல்லாத ஒன்றை உவமிப்பது. இதனை 'இல்பொருளுவமை' என்பர். 'எங்குமுள்ள கமலப்பூக்களின் எழில் எல்லாம் திரண்டு ஒன்றினால், உன் முகத்திற்கு ஒப்பாகும்'. இது, தானே ஒன்றுதல்.

விகாரவுவமை - பிறரால் விகாரப்பட்டதாகவரும். இதுவே இவற்றிடை வேற்றுமை.

**20. பலவயிற்போலியுவமை** - ஒரு தொடராகப் பல உவமைகள் வந்தால், உவமை தோறும் உவம உருபு வருவது.

**மலர்வாவி போல்வரால் மாதர், கமல**
**மலர் போலும் மாதர் வதனம் - மலர்சூழ்**
**அளிக்குலங்கள் போலும் அளகம் அதனுள்**
**களிக்கும் கயல்போலும் கண்**

(வாவி - குளம். அளிக்குலம் - கருவண்டுக் கூட்டம். அளகம் - கூந்தல்.)

**21. ஒருவயிற்போலியுவமை** - ஒரு தொடரில் பல உவமை வந்தால், வந்த உவமை தோறும் உவம உருபு சேர்க்காது, ஒரிடத்தில் மட்டும் உவமஉருபு வருவது. 'மலர் முகமும் கயற்கண்ணும் பவள வாயும் துடியிடையுமுடைய மயில் போல்வாள் என் மனங்கவர்ந்தாள்'.

**22. கூடாவுவமை** - ஒரு பொருளுக்குக் கூடாததனைக் கூடுவதாகச் சொல்லி, அதனை உவமிப்பது. 'சந்தனத்திற் செந்தழலும் தண்மதியில் வெவ்விடமும் வந்தனவே போலுமால் நும் மாற்றம்'. காதலியின் மாற்றம் - பேச்சு சந்தனத்தில் தீத்தழலும் மதியில் நஞ்சும் சேர்ந்தது போலத் துன்பம் தந்ததாம்.

**23. பொதுநீங்குவமை** - உவமையைக் கூறி மறுத்து, உவமிக்கப் பட்ட பொருளே அதற்குவமையாகும் என்பது. 'தானேதனக்குவமை' என முடிப்பது.

**திருமருவும் தண்மதிக்கும் செந்தா மரையின்**
**விரைமலர்க்கும் மேலாம் தகையால் - கருநெடுங்கண்**
**மானே! இருள் அளகம் சூழ்ந்தநின் வாண்முகம்**
**தானே உவமை தனக்கு**

(விரை - மணம். அளகம் - கூந்தல். வாள்முகம் - ஒளி பொருந்திய முகம்.)

**24. மாலையுவமை** - ஒரு பொருளுக்குப் பல உவமைகளை, ஒரு மாலை போலத் தொடர்ச்சிப்படத் தொடுத்து, இறுதியில் பொருள்களைச் சேர்த்து முடிப்பது.

**மலயத்து மாதவனே போன்றும், அவன்பால்**
**அலை கடலே போன்றும், அதனுள் குலவும்**
**நிலவலயமே போன்றும் நேரியன்பால் நிற்கும்**
**சிலைகெழுதோள் வேந்தர் திரு**

(நேரியன் - நேர்மை மிகு சோழன். அவனிடமுள்ள செல்வம் மலயத்து அகத்தியனைப் போன்றும் அவன் குடித்த கடலைப் போன்றும் அக் கடலால் சூழப்பட்ட உலகம் போன்றும் நிலைபெற்றுத்திகழும்.)

## உவமையணி பிற அணிகளுடன் கூடி வருதல்

33. **அற்புதம், சிலேடை, அதிசயம், விரோதம்,**
**ஒப்புமைக் கூட்டம், தற்குறிப்பேற்றம்,**
**விலக்கே, ஏது என வேண்டவும் படுமே.**

இவ் உவமையணி மேலே கூறிய எட்டு அலங்காரங்களுடன் கூடியும் வரும்.

**1. அற்புதஉவமை** - குழையணிந்து புருவம் தாங்கி நீண்ட விழியுடன் வரும் மதியம் உண்டேல் அது இவள் முகத்திற்கு ஒப்பாகும்.

**2. சிலேடையுவமை** - இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும். செம்மொழிச் சிலேடையுவமை- கவிதையும் கன்னியர் முகமும். சந்தம் - அழகு, ஓசை; தொடை - உறுப்பு, சொல் தொடுத்தல்; அணி - அணி, அலங்காரம். இவற்றால் ஒப்புமையுடையன எனல். **பிரிமொழிச்சிலேடையுவமை** - யானைக்கும் தென்றலுக்கும் உவமை. முன்னது நிறை கடாம் (மதம்) சிந்தும், தென்றல் மன நிறைகளை அழிக்கும். யானை - கந்து என்னும் தறியைச்சீறி மலையாது நிலவும். தென்றல் கந்தம் - மணம் அலைத்து-பரப்பி, நிலவும். 'நிறை கடாம் சிந்தி' என்பதும் 'கந்த மலையா நிலவும்' என்பதும் இரண்டிற்கும் பிரித்து, இருபொருள் பெறப் பட்டன . இதைச் சந்தான

உவமை என்பதுமுண்டு. இரண்டு பொருளுக்குப் பயன்படும் சொற்களால் பாடுவது சந்தானம் என்பர்.

3. அதிசயவுவமை - அதிசயிப்பது போல உவமை சொல்வது,

4. விரோதவுவமை - திங்களுக்கும் முகத்திற்கும் பகையெனப் பாடுவது

5. ஒப்புமைக்கூட்டவுவமை - ஒப்புமையுடையதைக் கூட்டி உவமை கூறுவது.

6. தற்குறிப்பேற்றவுவமை

**உண்ணீர்மை தாங்கி உயர்ந்த நெறியொழுகி**
**வெண்ணீர்மை நீங்கி விளங்குமால் - தண்ணீர்த்**
**தரம் போலும் என்னத் தரு கடம்பை மாறன்**
**கரம் போல் கொடை பொழிவான் கார்**

கடம்பை மாறன் கொடைக் கை போல, மேகமும் உள்ளே நீரையுடைத்தாய், வெளுத்த தன்மை நீங்கி விளங்குகின்றது. இது மேகத்தின் மேல் தற்குறிப்பேற்றம். கடம்பை மாறன் என்பது வரலாற்றுக் குறிப்பு.

7. விலக்கவுவமை - 'மழை போல் தரும் நெடுங்கைச் சென்னியின் (சோழன்) தமிழ்நாடனையார், கருநெடுங்கண் போலும் கயல்' - என் உள்ளங் கவராது' எனக் கயல் விலக்கப்பட்டது.

8. ஏதுஉவமை - காரணங்காட்டி உவமை கூறுவது.

## உவமைக்குச் சில சிறப்பு விதிகள்

**34. மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்**
**பால்மாறு படுதலும் பாகுபாடுடைய**

உவமை அடை மிகுதலும் உவமை அடை குறைதலும் இழிந்த உவமையோடு உயர்ந்த பொருள் உவமையாதலும், உயர்ந்த உவமை யோடு இழிந்த பொருள் உவமையாதலும் ஆண்பாலுக்குப் பெண்பால் உவமையாதலும் பெண்பாலுக்கு ஆண்பால் உவமையாதலும் பன்மைப் பாலுக்கு ஒருமைப்பாலுவமையாதலும் ஆகிய வேறுபாடுகள் இடம் பெறும்.

உவமையை உயர்ந்த அடைமொழி கொடுத்துக் கூறுதல், அதனைக் குறைவுபடுத்திக் கூறுதல் 'நாய் போலும் மறவர்' என இழிந்த

உவமை கூறுதல், இங்ஙனம் 'பால்' மாற்றி உவமை கூறுதல் எல்லாம் வழு வென்பர் உரையாசிரியர்கள். ஆனால் நூற்பாவின்படி ஏற்ற இடத்தில் இவ்வாறும் வரும் என்பதே கருத்து. 'நாய்போற் சிறந்த நன்றியுடையார்' என, நன்றிக்கு உயர்வுடைமை கருதிக் கூறல் தவறாகாது. எறும்பு போல் சுறுசுறுப்பானவன் - எனலாம். அதற்கு அது சிறந்த குணம் அன்றோ? எனவே பெரியோர்கள் பொருந்திய இடத்தில் இவற்றை ஏற்பர், பொருந்தாத இடத்தில் வழு என மறுப்பர் எனக் கூறுவர்.

## உவம உருபுகள்

**35. போல, மான, புரைய, பொருவ**
**நேர, கடுப்ப, நிகர, நிகர்ப்ப,**
**ஏர, ஏய, மலைய, இயைய,**
**ஒப்ப, எள்ள, உறழ, ஏற்ப,**
**அன்ன, அனைய, அமர, ஆங்க,**
**என்ன, இகல, விழைய, எதிர,**
**துணை, துாக்கு, ஆண்டு, ஆங்கு, மிகுதகை, வீழ**
**இணை, சிவண், கேழ், அற்று, செத்தொடு பிறவும்**
**நவைதீர் பான்மை உவமைச் சொல்லே**

இந்நூற்பாவில் 35 உவம உருபுகள் கூறப்பட்டுள்ளன. பிறவும் என்றதால் நாட, நக, நடுங்க, நந்த, கள்ள, கருத, காட்ட, மிளிர, ஏய்ப்ப, மருள முதலியனவும் கொள்க என்பர் பழைய உரையாசிரியர்.

தொல்காப்பியரும் ஒரு நீண்டபட்டியல் தருவதோடு பண்பு, வினை (தொழில்), பயன் போன்றவற்றில் இன்னதற்கு இவ்வுருபு வரும் எனவும் மிக நுட்பமாகக் கூறுகிறார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களும் பிற இலக்கண ஆசிரியர்களும் தருவனவற்றையும், இலக்கணத்தில் மட்டுமல்லாது இலக்கியங்களில் காணப்படுவனவற்றையும் உலக வழக்கில் வழங்கு வனவற்றையும் தொகுத்தால் தமிழில் உவம உருபுகள் இருநூறுக்கும் மேல் வரக்கூடும். இவை பல வெறும் உருபுகளல்ல, தனித்தனி நிழற் பொருளுடையன. பொருவ என்றால் போரிடுவன போன்றன என்றும் எள்ள என்றால் நகை யாடுவன போன்றன என்றும் உறழ என்றால் மாறு படுவன போல்வன என்றும் இவ்வாறு எல்லாம் நிழற் பொருள் வேறு பாடும் காட்டவல்லன.

புலிபோலும் மறவன் - போலும் பெயர் கொண்டு முடிந்த பெயரெச்சம். புலி போலப் பாய்ந்தான் - போல வினை கொண்டு முடிந்த வினையெச்சம்.

இவை தொக்கும் (மறைந்தும்), விரிந்தும் வருவன.

## 3. உருவகவணி

**36. உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து**
**ஒன்றென மாட்டின் அஃது உருவக மாகும்.**

உவமையையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு ஒழிவித்து, இரண்டையும் ஒன்றெனவே பொருத்திக் கூறினால் அஃது உருவகமாகும்.

முகமலர் என்றாலும் முகமே மலராக என்றாலும் முக மாகிய மலர் என்றாலும் முகத்தை 'மலர்' என்றே இடம் நோக்கிக் கூறினாலும் எல்லாம் உருவகமேயாம்.

தொல்காப்பியர் உவமையினுள்ளேயே உருவகத்தையும் சேர்த்துச் சொல்வார்.

மலர் போன்ற முகம் - உவமை. மலர் முகம் - உவமத் தொகை. முகமலர் - உருவகம். ஏறத்தாழப் பொருள் ஒன்றேயாம்.

## உருவக வகைகள்

**37. தொகையே, விரியே, தொகை விரி எனாஅ**
**இயைபே, இயைபிலி, வியநிலை எனாஅ**
**சிறப்பே, விரூபகம், சமாதானம் எனாஅ**
**உருவகம், ஏகம், அநேகாங்கம் எனாஅ**
**முற்றே, அவயவம், அவயவி எனாஅ**
**சொற்றஜம் மூன்றும் மற்றதன் விரியே**

இதில் பதினைந்து வகைகள் கூறப்பட்டுள்ளன. உருவகம் என்பது உருவகஉருவகம், ஏகம் என்பது ஏகாங்க உருவகம். இவை சிறு சிறு வேறுபாடுடையன. பாடுவோர் மொழி நடை, கருத்தை வெளிப் படுத்தும் திறன், அழகுபடுத்திக் கூற நினைத்தல், புலமைத்திறம் போல்வனவே இவ் வேறுபாட்டு வகைகளுக்கு அடிப்படை.

உவமையைத் தாய் அணி என்பர். அதிலிருந்தே உருவகமும் பிற அணிகள் பலவும் தோன்றுகின்றன.

1. **தொகையுருவகம்** - ஆகிய என்னும் சொல்லுருபு தொகுத்துச் சொல்வது. 'அங்கை மலரும் அடித்தளிரும்'கண்வண்டும்'. இது அங்கையாகிய மலரும், அடியாகிய தளிரும், கண்ணாகிய வண்டும் என வருவது, இடையுருபு தொக்கது.

2. **விரியுருவகம்** - ஆகிய என்பது விரிந்துநிற்பது. ஆகிய, ஆக என்பன உருவக உருபுகள். 'கொங்கை முகையாக மென் மருங்குல் கொம்பாக'. கொங்கை - மார்பு. முகை - மொட்டு. மருங்குல் - இடை. ஆக - எனும் உருபு விரிந்துளது.

3. தொகைவிரி உருவகம் - அவ்வுருபு தொக்கும் விரிந்தும் நிற்பது.

**வையம் தகழியா, வார்கடலே நெய்யாக,**
**வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய**
**சுடர்ஆழி யான் அடிக்கே சூட்டுவன் சொன்மாலை**
**இடர்ஆழி நீங்குகவே என்று** (முதல்அந்தாதி 1)

உலகம் தகழியாக நீண்டகடல் நெய்யாக, வெப்பமிக்க கதிரவன் விளக்காக - இது வரை 'ஆக' - உருபு வந்தது.

சிவந்த சுடர்நிறச் சக்கரத்தையுடையானது அடிக்கு, இடர் ஆழி (கடல்) நீங்குக என்று, சொல் மாலை சூட்டுவன். இவற்றில் உருபு தொக்கது. எனவே இதில் வந்திருப்பது தொகைவிரி உருவகம்.

4. **இயைபுருவகம்** - செவ்வாய்த் **தளிர்**, நகை **முகிழ்** (மொட்டு), **கண்மலர்**, கூந்தல் **வண்டு** என தம்முள் தொடர்புடையவற்றை உருவகம் செய்வது இது.

5. **இயைபிலுருவகம்** - தம்முள் இயைபில்லாத பல பொருள்களை வைத்து உருவகம் செய்வது. 'பிள்ளையாருக்குக் கொன்றைமலர் பொன்னாக, சடை பவளக்கொடியாக, மதம் மழையாக,மருப்பு (தந்தம்) மதியாக விளங்குகின்றன'. இவை தொடர்பற்றவை.

6. **வியநிலையுருவகம்** - ஒரு பொருளின் சில அங்கங்களை உருவகம் செய்தும் வேறு சிலவற்றை உருவகம் செய்யாதும் இறுதியில் அவற்றையுடைய பொருளை உருவகித்து முடிப்பது.

**7. சிறப்புருவகம்** - ஒரு பொருளை எடுத்து, அதற்குச் சிறந்த உறுப்புக்களை உருவகம் செய்து, பின்பு அதனையும் உருவகமாக்கியுரைப்பது.

**8. விருபகவுருவகம்** - ஒரு பொருளுக்கு இது இது கூடாது எனப் பலவும் கூட்டி உருவகம் செய்வது; குளத்தில் இருக்காது; முள்தாள்மேல் மொட்டாகாது; ஆனாலும் அம்முகமலர் இயல் பாய் மலரும்.

**9. சமாதானவுருவகம்** - ஒரு பொருளை உருவகம் செய்து, அது தீங்குதருவதாகக் கூறி, அத் தீங்கும் அதனால் வருகின்ற தன்று என்று பிறிதொரு காரணம் கூறுவது. (இத்தகைய வற்றுக்கு இத்தண்டி நூலில் வரும் பாடலே சான்றாகும். பிறிதொரு பாடல் காணுதல் அரிது. இதனால் ஒவ்வொரு பாடலும் அதுஅது சொல்லும் முறையில் தனி அணியாகுமென அறியலாம்.)

**10. உருவகவுருவகம்** - ஒன்றை உருவகம் செய்து, அவ்வாறு செய்ததைப் பெயர்த்தும் பிறிதொன்றாக உருவகம் செய்வது. மகளிரின் கொங்கையை மலையாக உருவகம் செய்து , மீண்டும் அதனை மதக் களிறாக உருவகம் செய்த பாடல் இதற்குக் காட்டப்படுகிறது.

**11. ஏகாங்கவுருவகம்** - ஒரு பொருளினது அங்கங்கள் பல வற்றுள், ஒன்றை உருவகம் செய்து, பிறவற்றை உருவகியாது விட்டுவிடுவது.

> **அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**
> **பிறவாழி நீந்தல் அரிது. (குறள் 8)**

அறக்கடலாகிய இறைவனது திருவடிகளாகிய புணையை (தெப்பத்தை) அடைந்தவர்க்கு அல்லாமல் மற்றையோர்க்குப் பிற கடல்களை நீந்துவது இயலாது. இறைவனை அறக் கடல் என்று உருவகம் செய்து, 'தாள்' - என்பதை புணை (தெப்பம்) என உருவகம் செய்யாததால் இதை 'ஏகதேச உருவகம்' என்பார் பரிமேலழகர். இங்குவருவன இது போன்றன.

**12. அநேகாங்க உருவகம்** - ஒரு பொருளின் அங்கங்கள் பல வற்றையும் உருவகம் செய்து பாடுவது. ஏக + அங்கம் = ஏகாங்கம் (ஒரே அங்கம் மட்டும் உருவகமாதல்). அநேக அங்கம் = அநேகாங்கம் (பல அங்கம்). அங்கம் - உறுப்பு.

**13. முற்றுருவகம்** - உறுப்புக்கள், அவ்வுறுப்புக்களை உடைய முதற்பொருள் அனைத்தையும் உருவகம் செய்வது முற்றுரு வகம். (வடமொழியில் அவயவம், அவயவி). 'என் மனக் குளத்தில் காதலியின் திருமுகமே தாமரை, விழிகளே வண்டு, புன்னகையே மகரந்தத்தேன் என உருவகம் செய்வது'.

**14. அவயவவுருவகம்** - அவயவத்தை (உறுப்பை) உருவகம் செய்து, அவயவியை (உறுப்பையுடைய முதலை) உருவகம் செய்யாது விடுவது.

**15. அவயவி உருவகம்** - அவயவியை (முதலை) உருவகம் செய்து, அவயவங்களை வாளா கூறுவது. (வாளா - வெறு மனே).

## உருவகம் பிற அணிகளுடன் கூடி வருதல்

**38. உவமை, ஏது, வேற்றுமை,விலக்கே**
**அவநுதி, சிலேடைஎன்று அவற்றொடுடன் வருமே**

உருவக அணி உவமை, ஏது,வேற்றுமை, விலக்கு, அவநுதி, சிலேடை என்னும் ஆறு அலங்காரங்களுடன் கூடியும் வரும்.

**குறிப்பு:** தமிழ் அணியிலக்கணங்கள் பொருள் புலப் படுத் தலும் இலக்கிய இன்பம் தருதலும் நோக்கியன. அவை ஒருவழித் தொகுக்கப்பட்டால் மனம் மகிழும். வடமொழியைப் பின்பற்றிய இவை புலவனின் சொற்சாதுரியத்தை மிகைபடக் காட்ட வென்று வலிந்து புனையப்பட்டவை; படிப்பவர்க்குக் குழப்பம் விளைவிப்பவை; வெறுப்பை விளைவிப்பவை. வடமொழி தொனி, இரீதி, இரசக் கோட் பாடுகள் அனைத்திலும் கவிஞனின் திறமையைக் கண்டபடி காட்ட வென்று முயல்வதையே பார்க்கின்றோம். இவை ஒருமுறை பார்த்து, விடத்தக்கவையே.

மேலும் இவ் உள் வகை அணிகளுக்கு, அவ்வவற்றின் அடியில் தண்டியாசிரியர் காட்டியுள்ள உதாரண வெண்பாக்களே சான்றாவன. வேறு எங்கும் தேட முடியாதபடி உள்ளவையே மிகுதி. எனினும் 35

பொது அணிகளிலும் சிற்சில உள் வகைகளிலும் நம் தமிழ் அடிப்படை யணிகளும் உள என்பதை மறத்தல் கூடாது. எனவே முழுவதும் படித்து, தேவையானவற்றை மட்டும் மனத்திற் பதிவித்து இத்துறையில் வளர்தல் மாணாக்கர் கடமையாகும்.

1. **உவமைஉருவகம்** - மாதரின் முகமாகிய மதியம், உதயமாகின்ற (பௌர்ணமி எனும்) முழுமதியத்தையே ஒக்கும். இதில் உரு வகம் செய்து, மீண்டும் அதனையே உவமையாக்கியும் கூறப்பட்டுள்ளது.

2. **ஏது உருவகம்** - இது காரணங்காட்டி உருவகிப்பது.

   **மாற்றத்தால் கிள்ளை நடையால் மடவன்னம்**
   **தோற்றத்தால் தண்ணெனன் சுடர்விளக்கம் - போற்றும்**
   **இயலால் மயில்எம்மை இந்நீர்மை யாக்கும்**
   **மயல் ஆர் மாதர்நெடுங் கண் மான்**

   இதில் இன்ன இன்ன காரணத்தால் கிளி, அன்னம், விளக்கு, மயில், மான் என உருவகங்கள் கூறப்பட்டுள்ளன. (கிள்ளை- கிளி. நீர்மை - தன்மை. மயல் - மயக்கம். மதர்-செருக்குள்ளது போன்ற, மதர்த்த)

3. **வேற்றுமை உருவகம்** - இது வேற்றுமையணி போலவே உளது.

   **வையம் புரக்கும் மன்னவ! நின் கைக்காரும்**
   **பொய்யின்றி வானிற் பொழி காரும் - கையாம்**
   **இருகார்க்கும் இல்லைப் பருவம் இடிக்கும்**
   **ஒருகார் பருவ முடைத்து**

   கைக் கார் - கையாகிய மேகம். பொழிகார் - மழை பொழியும் மேகம். இடியிடிக்கும் மழைக் கார் மேகத்திற்குப் பருவமுண்டு; கைகளாகிய கொடுக்கும் இரண்டு கார் மேகங்களுக்குப் பருவம் இல்லை; அவை எப்பொழுதும் கொடுக்கும். இதில் மேகமாக உருவகம் செய்தாலும் வேற்றுமைப் படுத்தி முடிப்பதால் வேற்றுமை உருவகம்.

4. **விலக்குருவகம்** - முகமாகிய மதியத்திற்கு, மதியின் தன்மை இல்லை என்பது இது. ஏனெனில் இப் பெண்ணின் மதிமுகம் இரவிலேயன்றிப் பகலிலும் எம்மை வாட்டுகிறதே. மதியைக் கூறி, விலக்குவது காண்க.

5. **அவநுதி உருவகம்** - அவநுதியாவது ஒன்றன் உண்மைத் தன்மையை மறுத்தல். ''இவை பொங்கி வளர்ந்த கூந்தல் அல்ல; புயல் (மேகம்) என்றே கூறவேண்டும்; இவை கண்கள் அல்ல; வண்டுகளே'' என்பதுபோல் புனைவது இது.

6. **சிலேடை உருவகம்** - இரு பொருள்படப் பாடி, உருவகம் செய்வது இது.

## உவமை உருவகங்களுக்குப் புறனடை

**39.** **உருவகம் உவமை எனஇரு திறத்தவும்**
**நிரம்ப உணர்த்தும் வரம்புதமக்கு இன்மையின்**
**கூறிய நெறியின் வேறுபட வருபவை**
**தேறினர் கோடல் தெள்ளியோர் கடனே**

உவமை உருவகம் இரண்டும் பற்றி முழுவதும் உரைத்திடின் எல்லையின்றிச் செல்லும். ஆதலின் இங்கு கூறிய நெறியினின்றும் வேறுபட வருவன உளவேல், அவற்றைத் தெளிவாக அறிதல், அறிஞர் தம் கடமையாகும்.

1. **ஏது உருவகம்**- காரணம் காட்டி உருவகம் செய்வது.

**வில்ஏர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்ஏர் உழவர் பகை** (குறள். 872)

வில்லை ஏராகவுடைய உடையவரால் வரும் தீங்கை விடச் சொல்லை ஏராகவுடைய உழவராம்- புலவர்களது பகை, மிகுதியாகத் தீங்குதரும். ஆகவே அப்பகையைக் கொள்ளற்க!.

வில்லை விடச் சொல்லாகிய கருவியாம் பகை பெரிது எனக் காரணம் காட்டும் இது ஏது உருவகம்

2. **இயைபு உருவகம்** - ஒன்றுடன் ஒன்று இயைபு - தொடர்பு உடையவற்றை உருவகம் செய்வது. இவர் பாடும் சோழன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டவன் போலும். 'சோழனது கச்சி (காஞ்சி) பொலிவு, இருபுறமும் ஏரிச் சிறகுகளையும், மதில் வயிற்றையும், சோலைத் தோகைகளையும் திருமாலின் அத்தியூர்வாயையும் பெற்றிருப்பதால், மயிலைப் போன்றுளது'.

3. **விலக்குருவகம்** - ஒன்றை விலக்கி உருவகம் செய்வது. மலையில் பிறவாத மயில் இவள். அலையில் பிறவாத அமுதம் இவள் என இவ்வாறு புனைவன. மலையில் பிறந்த மயிலை

இது விலக்குவதால், இது விலக்குருவகம் என்பர் உரையாசிரியர்.

4. **சிறப்புருவகம்** - மழலைவாய் நவ்வி - மழலை பேசும் மான். மதர் நெடுங்கண் மஞ்ஞை - மதர்த்த கண்களையுடைய மயில். இதில்ஒரு பெண்ணைப் பற்றிய உருவகத்தில், உருவகங்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

5. **அற்புதஉருவகம்** - உருவகத்தை வியப்புத் தோன்றுமாறு புனைவது இது.

1. **தெரிதரு தேற்ற உவமை** - உவமையைத் தெளிவுபடக் கூறுவது.

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு (குறள் 408)**

நல்லவர் பால் பட்ட வறுமையை விட, கல்லாதவர் பால் பட்ட செல்வம் தீங்குதரும். இவ்வறுமை, தன்னை அடைந்த வரை மட்டுமே கெடுக்கும்; ஆனால் கல்லாதவரிடம் சேர்ந்த செல்வம் எல்லோரையும் கெடுக்கும். இவ்வாறு உவமை கூறத் தக்கதன்று என்பதால் இது 'தெரிதருதேற்ற உவமை' யாம்.

2. **பலவயிற் போலியுவமை** - சோழனாகிய ஒரு 'பொருளுக்கு' திருமாலும் சிவபிரானுமாகிய இரண்டு உவமைகள் கூறப் படுவதைக் காட்டி, இது 'பலவயிற் போலியுவமை' என்பர்.

3. **பண்புவமை** - பண்பு அடிப்படையில் உவமை கூறுவது. வேங்கைப் பூ உதிர்தலால், பாலை நிலத்தில் துறுகல் ஒன்று புலிக்குட்டிபோல் தோன்றும். அக் காட்டிடையே வருகிறான் தலைவன் என்பது ஒரு சங்கப் பாடற் கருத்து. இதில் மலர் பரவிக் கிடக்கும் கல்லின் வண்ணமும் (நிறமும்) வடிவமும் புலிபோலத் தோன்றும் என்பதால் இது பண்புவமை.

4. **ஒப்புமையுவமை** - 'முத்துக் கோத்தது போன்ற பல் வரிசை, அப்பல் வரிசை போன்று அரும்புகளையுடைய முல்லைக் கொடி' - இவ்வாறு முதலில் உவமை கூறப்பட்ட பொருளை, அடுத்து உவமையாக்கிக் கூறுவது இது.

5. **சந்தான உவமை** - இது மாலை உவமை போன்றது. 'பிடியின் (பெண்யானையின்) கை போன்ற தொடை, அத்தொடை

போன்ற வாழைமரம், அவ் வாழைப் பூ போன்ற கூந்தல், அக் கூந்தலைப் போன்ற கிளைகளையுடைய வேங்கைமரம் - இவ்வாறு தொடுப்பது இது.

ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல பொருள்களை ஒரு பொருளுக்கு உவமை கூறுவதுமாலை உவமை; அவ்வாறு தொடர்புடையவற்றைப் பலபொருள்களுக்கு உவமை கூறுவது சந்தான உவமை.

6. **விலக்குவமை** - ஒன்றை விலக்குவது இது. இதற்குப் 'பாரியையே புலவர்கள் போற்றுவர்; ஆனால் உலகு புரப்பது பாரிமட்டு மல்லன்; மாரியும் உண்டு' எனும் புறப் பாடலைக் காட்டுவர். மாரியும் உண்டு என்பதால், உவமையாவதை விலக்கிய வாறு அறிக என்பர் உரையாசிரியர்.

## 4. தீவகவணி

தீபகம் - விளக்கு - ஓரிடத்தில் வைக்கப்பட்ட விளக்கு, பல இடத்தும் சென்று ஒளிதருவதுபோல, ஒருபாடலில் ஓரிடத்து நின்ற சொல், பல இடங்களிலும் சென்று பொருள் தருவது இவ் அணியின்பாற்படும்.

**40. குணம் தொழில் சாதி பொருள்குறித்து ஒருசொல்**
**ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்**
**தீவகம் செய்யுள் மூவிடத்து இயலும்**

குணம், தொழில், சாதி, பொருள் என்னும் நான்கில் ஏதேனும் ஒன்றைக் குறித்து, ஒரு சொல் ஒரு பாடலின்கண் ஓரிடத்தில் நின்று, அப்பாடலின் பலஇடத்தும் நிற்கின்ற சொற்களோடு சேர்ந்து பொருள் தருவது தீவகமென்னும் அலங்காரமாகும். இவ் அணி முதனிலை, இடை நிலை, கடைநிலை என அப்பாடலின் மூன்று இடங்களில் நின்று இவ்வாறு பொருள் தரும்.

எனவே இம் மூன்று இடங்களையும் குணம் தொழில் சாதி பொருள் எனும் நான்கனோடும் பெருக்க இவ் அணி பன்னிரண்டு வகைப்படும்.

முதனிலை - முதலில் நிற்கும் சொல் பல இடத்தும் சென்று சேர்ந்து பொருள் தருவது. இடைநிலை - பாடலின் இடையில் நிற்கும் சொல் அவ்வாறு பொருள் தருவது. கடைநிலை - பாடலின் இறுதியில்

நிற்கும் சொல் அவ்வாறு பொருள்தருவது. சுருக்கமாகக் கீழ்வரும் காட்டு பயன்படும்.

**உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண**
**அண்ணாத்தல் செய்யாது அளறு (255)**

ஊன் - இறைச்சி. இச்சொல் குறளின் இடையிலேயுள்ளது. ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என முதலிலும், ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு எனப் பின்வருவதோடும் சேர்ந்து - இரு பக்கமும் ஒரே சொல் சேர்ந்து பொருள் தருகிறது. இது இடைநிலைத் தீவக அணி. இது போன்றவையே பிறவும் எனக் கொள்ளலாம்.

குணம்: முதனிலை, இடைநிலை, கடைநிலை என மூன்றாக வரும். தொழிலும் சாதியும் பொருளும் இதுபோல மூன்றிடங்களில் வரும். எனவே இது 4 x 3 = 12 ஆகின்றது.

**முதனிலைக் குணத் தீவகம்**

**சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்**
**ஏந்து தடந்தோள் இழிகுருதி - பாய்ந்து**
**திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த அம்பும்**
**மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து**

அரசனது கண்கள் சிவந்தன. அதனால் பகை வேந்தர்களின் தோள்களில் கொட்டும் இரத்தம் (சிவந்தது); வில்லிலிருந்து எய்யப் பட்ட அம்புகள் (சிவந்தன); இரத்தம் மேலே படுதலால் பறவைக் கூட்டங்களும் (சிவந்தன). தெவ் - பகைவர் . குருதி - இரத்தம். சிலை- வில் . மிசை - மேலே. முதலில் உள்ள 'சிவந்தன' எனும் சொல், இவ்வாறு பாடலின் பிற இடங்களிலும் சேர்த்துப் பொருள்கொள்ளப் பட்டதால் இது முதனிலைக் குணத்தீவகம்.

இது போலவே தொழிலுக்கும் சாதிக்கும் பொருளுக்கும் உரிய சொற்கள் முதலில் நின்று பொருள்தருவது முதனிலைத் தீவக அணியின்பாற்படும். சிவந்தன என்பதே சேந்தன என வந்தது.

**இடைநிலைக் குணத்தீவகம்**

**எடுத்த நிரைகொணா என்றலுமே வென்றி**
**வடித்திலங்கு வைவாளை வாங்கத் - துடித்தனவே**
**தண்ணார மார்பும், தடந்தோளும், வேல்விழியும்**
**எண்ணாத மன்னர்க்கு இடம்**

நிரை - ஆன்நிரை, பசுக்கூட்டம், பசுக் கூட்டத்தைக் கவர்ந்து கொண்டுவருக என அரசன் ஆணையிட்டதும் வெற்றி பொருந்திய கூரிய வாளை மறவன் ஓங்கினான். உடனே. நிலைமையைக் கருதிப் பாராத பகையரசர்களின் மார்பும் தோளும் கண்ணும் இடப்புறத்தே துடித்தன. (ஆண்களுக்கு இடப்புறம் துடிப்பது தீங்கு வருமென்பதற்கு அறிகுறி. வடித்து - நன்கு செய்யப்பட்டு. வை - கூர்மை. தண் ஆர - குளிர்ச்சி பொருந்திய. எண்ணாத - பகையரசனின் வலிமையை எண்ணிப் பாராத.) துடித்தன் என இடையிலே நின்ற சொல்,பின்வந்த பல சொற் களோடும் கூடிப் பொருள் தந்தது. இதனை இடை நிலைக் குணத் தீவகம் என்பர். இவ்வாறே தொழில், சாதி, பொருளுக்கும் கொள்க.

**கடைநிலைத் தொழில்தீவகம்**

**துறவு உளவாச் சான்றோர் இளிவரவும் தூய**
**பிறஉளவா ஊன்துறவா ஊனும் - பறை கறங்கக்**
**கொண்டான் இருப்பக் கொடுங்குவையாள்**
**தெய்வமும்ஒன்று**
**உண்டாக வைக்கற்பாற்று அன்று**

துறவு பூண்ட சான்றோரின் இழிவான ஒழுக்கமும் தூய உணவு பிறபல உளவாகவும் இறைச்சியைத் துறவாது உண்பதும் வாத்தியம் முழங்க மணம் செய்த கணவன் இருக்கவும் ஒரு பெண் பிற தெய்வங்களைத் தொழுவதும் ஆகிய இவை மூன்றும் ஒரு பொருட்டாக வைக்கத்தக்கன அல்ல. 'தெய்வம் பிறிதொன்று உண்டாக வைக்கற் பாற்றன்று' என இறுதிக்குச் சொன்ன இது, முதலில் உள்ள இரண்டிற்கும் சென்றுசேர்தலால், இது கடை நிலைத் தொழில் தீவகம்.

இதுபோலவே ஏனைய குணம், சாதி, பொருளுக்கும் கொள்க.

## தீவக அணி பிறஅணிகளுடன் சேர்ந்து வருதல்

**41. அதுவே**
**மாலை, விருத்தம், ஒருபொருள், சிலேடைஎன**
**நால்வகை யானும் நடைபெறும் என்ப**

அத்தீவக அணி மாலை, விருத்தம், ஒருபொருள், சிலேடை எனும் நான்கு அணிகளுடன் கூடியும் வரும்.

**மாலா தீவகம்**

**மனைக்கு விளக்கம் மடவார், மடவார்**
**தமக்குத் தகைசால் புதல்வர், - மனக்கினிய**
**காதல் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும்**
**ஓதில் புகழ்சால் உணர்வு**

(விளக்கம் - விளக்கு. மடவார் - மகளிர். உணர்வு - மறவாமை.)

மகளிர்க்குப் புதல்வர் விளக்கம், புதல்வர்க்குக் கல்வி கற்றல் விளக்கம், கல்விக்கு அதை மறவாமை விளக்கம் - என 'விளக்கம்' என்பதனைத் தொடர்ந்து, மாலை போற் சேர்த்துப் பொருள் கொள்வதால் இது மாலாதீவகம்.

**விருத்த தீவகம்** - 'தென்றல் காற்று சேர்ந்திருக்கும் காதலர்க்குப் பொலிவும் பிரிந்திருப்பார்க்கு மெலிவும் தரும்.' இதில் தென்றல் என்ற ஒரு பொருளே பொலிவும் மெலிவும் செய்வதாக வருவதால் இது விருத்த தீவகம். விருத்தம் - சொல்லும் பொருளும் மாறுபடுதல் என்பர் குறிப்புரைகாரர்.

**ஒரு பொருள் தீவகம்** - ஒரே பொருள் பலவாறு வரும் பல செயல்களையும் செய்வதாகக் கூட்டியுரைப்பது இது.

**சிலேடா தீவகம்** - சிலேடை எனும் இருபொருள்படும்படி பாடுவது சிலேடைபற்றிய தீவகமாகும்.

உரையாசிரியர் இவை போதாவென்று, மேலும் இரண்டு வகைத் தீவகங்களைக் குறிப்பிடுகிறார். (1) உவமாதீவகம் (2) உருவக தீவகம். இவற்றில் இரண்டு அணிகளும் சேர்ந்து வரும்.

## 5. பின்வருநிலையணி

**42. முன்வரும் சொல்லும் பொருளும் பலவயின்**
**பின்வரும் என்னில் பின்வரு நிலையே**

ஒரு பாடலுள் முன்னர் வந்த சொல் அல்லது பொருள் அல்லது சொல்லும் பொருளும் பலவிடத்தும் பின்னரும் வரு மெனில் பின் வருநிலையணியாம்.

**சொற்பின்வருநிலையணி** - முன்வந்த சொல்லே பின்னரும் பல விடத்தும் வருவது.

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் (751)

இக்குறளில் பொருள் எனும் சொல் திரும்பத்திரும்ப வந்திருப்பது சொற்பின்வரு நிலையணியாகும்.

## பொருட்பின்வருநிலையணி

அவிழ்ந்தன தோன்றி, அலர்ந்தன காயா,
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை, - மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை, விரிந்த கருவிளை,
கொண்டன காந்தள் குலை

இவை மலர்கள் பலவற்றின் பெயர்கள். அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, (குலை) கொண்டன- என்னும் சொற்கள் எல்லாம் மலர்ந்தன எனும் ஒரே பொருள் உடையன. எனவே இது பொருட்பின்வருநிலை.

(நேர்முகை - நீண்ட மொட்டு. விண்டன - விள்ளுதல்- மலர்தல். குலை கொண்டன - குலைகுலையாகப் பூத்தன.)

## சொற்பொருட்பின்வருநிலையணி

'வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகும்என்று இன்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார் (நாலடியார் 39)

நாள்தோறும் பொழுதானது தம் வாழ்நாள் மேல் தங்கிக் கழி தலை, அதன் இயல்பைப் பார்த்து அறியாதவர்கள், நாள்தோறும் இந்தப் பொழுதானது வரக்கண்டும், அதை என்றென்றும் தங்கும் எனக் கருதி மகிழ்வர்.

வைகல் - நாள், பொழுது, தங்குதல் எனப் பல பொருள்படும். ஒரேசொல் திரும்ப வருகிறது; அச்சொல்லின் பல பொருளும் திரும்ப வருகிறது. எனவே இது சொற்பொருட்பின்வருநிலை.

உரையாசிரியர் உவமையணி வடிவிலும் இது வரும் என்றும் அது 'உவமைப் பொருட்பின்வருநிலை' எனவும் கூறுவர்.

# 6. முன்ன விலக்கணி

43. **முன்னத்தின் மறுப்பின்அது முன்ன விலக்கே**
**மூவகைக் காலமும் மேவிய தாகும்.**

ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்குவது முன்ன விலக்கணி. அஃது இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் பொருந்தி வரும்.இதனை வெளிப்படையாக மறுப்பதுமுண்டு; அது கூற்றினால் விலக்குவது என உரையாசிரியர் சேர்த்துக் கொள்வர்.

எனவே குறிப்பு விலக்கு, கூற்று விலக்கு (வெளிப்படையாகச் சொல்லி விலக்குவது) எனும் இரு வகையாக்கி, இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் இரு வகையாக்கி, முன்னவிலக்கணி அறுவகைப்படும் என்பர்.

**இறந்த வினை விலக்கு என்பது** முன்பு நடந்தது. திருமால் உலகை உண்டு ஆலிலை மேல் துயின்றான் என்பர்; அவ் வாறெனில் உலகை உண்டபிறகு அந்த ஆலிலை எங்கே இருந்தது? கடலினுள்ளா? மண்ணிலா?ஆகாயத்திலா? ஆலிலை என ஒன்று இருந்தது என்பது பொருந்தாது எனக் குறிப்பால் விலக்கப்பட்டது என்பர்.

**எதிர்வினை விலக்கு** - எதிர் கால விளைவைக் கூறிக் குறிப்பால் விலக்குவது.

**முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப**
**எல்லை இனவண்டு எழுந்துஇரங்க - மெல்லியல்மேல்**
**தீவாய் நெடுவாடை வந்தால் செயலறியேன்**
**போவாய் ஒழிவாய் பொருட்கு**

வாடைக் காற்று வீசும் கூதிர்காலம், தலைவி பிரிந்து உயிர் வாழாள். முல்லைக் கொடி நடுங்கவும் காந்தள் பூக்குலை சிதையவும் ஒளியுடைய வண்டுகள் ரீங்காரம் இடவும், தீயையுடைய நெடிய வாடை வந்தால் யான் செய்வது அறியேன். அதனால், தலைவ பொருள் தேடிப் போவாய் அல்லது போகாது தவிர்வாய்! அஃது உன் விருப்பம். இது பொருள்வயிற் பிரிய நினைத்த தலைவனை, தோழி 'நீ பிரியின் தலைவி இறந்துபடக் கூடும்' எனக் குறிப்பாற் கூறித் தடுப்பது; அதாவது பிரிவை விலக்குவது.

முன்ன விலக்கணி உதாரணங்கள் முழுவதும் இவ்வாறு தலைவனைப் பார்ததுப் பிரிவை விலக்குவதாகவே உள்ளன. உள் வகைகளும் இதே அடிப்படையின. எனவே சங்க அகப்பாடல்களுடன்

இம் முன்ன விலக்கணியை ஒப்பிட்டு, அக்காதற் பாடல் களிலிருந்து எடுத்துக்காட்டுக்களைத் தொகுத்துத் தனியே ஆராயலாம்.

**செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை (1151)**

இக்குறட் கருத்து: பிரிந்து மிக விரைவாகத் திரும்புவேன் என்ற தலைமகனிடம் தோழி கூறியது இது. ''நீ பிரிந்து செல்லாமையுண்டேல் எனக்குச் சொல்; மற்றபடி நீ பிரிந்து விரைந்து வருவதாகச் சொல்வதாயின், அதை நீ திரும்பி வரும்வரை உயிர் வாழ்வார்க்குச் சொல்'' என்பது இது. ''பிரியின் இறந்துபடுவோம்'' என்பது குறிப்பு. இது குறிப்பு எதிர்வினை விலக்கு.

## விலக்கணி வகைகள்

**44. அதுவே**
**பொருள் குணம் காரணம் காரியம் புணரும்**

பொருள்விலக்கு, குணவிலக்கு, காரண விலக்கு, காரிய விலக்கு என நான்கு விதமாக, இவ் விலக்கணி கூறப்படும்.

'தன் உயிர் அறிவு முதலியவற்றை அழிக்கும் பெண்ணின் அழகைக் கூறி, அவளிடம் மென்மை இல்லை என விலக்குவது **குணவிலக்கு** எனப்படும். பிறவும் இவ்வாறு வரும்.

## விரிவான விலக்கணி வகைகள்

**45. வன்சொல், வாழ்த்து, தலைமை, இகழ்ச்சி**
**துணைசெயல், முயற்சி, பரவசம், உபாயம்**
**கையறல், உடன்படல், வெகுளி, இரங்கல்**
**ஐயம் என்று ஆங்கு அறிந்தனர் கொளலே**

மேலே கூறிய 13 பாகுபாட்டையுடையது இவ் விலக்கணி.

### 1. வன்சொல் விலக்கு

**மெய்யே பொருள்மேற் பிரிதியேல், வேறுஒரு**
**தையலை நாடத் தகும்நினக்கு - நெய்யிலைவேல்**
**வள்ளல் பிரிவுஅற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்**
**கொள்ள உழலுமாம் கூற்று**

உண்மையில் நீ பிரிவதாயின், உனக்கு இப்பொழுதே வேறு ஒரு மனைவியைத் தேடுவது தக்கது. ஏனெனில் நெய்பூசிய

வேலையுடைய வள்ளலே! பிரியும் அந்த நேரம் பார்த்து எங்கள் வாழ்நாளைக் கொள்ள, கூற்று அலைகின்றது.

வன்சொல் கூறி விலக்குவது இது.

**2. வாழ்த்து விலக்கு**

**செல்லும் நெறியனைத்தும் சேம நெறியாக**
**மல்க நிதியம் வளம்சிறக்க - வெல்லும்**
**அடல்தேர் விடலை அகன்றுறைவது யாங்குஅவ்**
**இடத்தே பிறக்க வியாம்**

நீ செல்லும் நெறி எல்லாம் பாதுகாப்பாக அமைக! செல்வம் பெருகுக! வளம் சிறப்பதாகுக! - இவ்வாறுவாழ்த்தி விடலை (தலைவன்) எங்கு பிரிந்து உறைகின்றானோ, அங்கே நாங்கள் பிறப்போமாக! என முடிவதால், தாம் இறப்பதைக் கூறி விலக்குவதாயிற்று. இது வாழ்த்து விலக்கு

3. **தலைமை விலக்கு** - தன்பால் தலைமை தோன்றக் கூறி, தலைவன் பிரிவ்தை விலக்குவது இது. 4. **இகழ்ச்சி விலக்கு** - உயிர் மேலன்றிப் பொருள்மேல் எமக்கு ஆசையில்லை என்று, பிரிவுக்குக் காரணமான பொருளை இகழ்ந்து கூறிப் பிரிவை விலக்குவது இது. 5. **துணைசெயல் விலக்கு** - தலைவன் பிரிவுக்கு உடன் படுவதுபோல் கூறி விலக்குவது இது. 6. **முயற்சி விலக்கு**- 'பிரிந்து செல்க எனச் சொல்ல நினைத்தாலும் பிரியாதே என்று சொல்லவே என்மனம் முயல்கின்றது' எனக் கூறி விலக்குவது இது. 7. **பரவசவிலக்கு** - 'தன் வசமில்லாத நிலைமையைக் கூறி, பிரிந்தால் என்னாகுமோ என்பதை அறிவுறுத்தி, முதலில் இவள் உன்மேல் வைத்த ஆசையைப் போக்கிப் பிரிவாயாக,'' என்று தோழி கூறுவது இது. 8. **உபாய விலக்கு** - 'நீ பிரிந்தால், இளவேனிற் பருவத்தில் காமனும் கூற்று வனும் வரின், அவர்கள் கண்ணுக்கு நாங்கள் தோன்றாதபடி ஓர் உபாயத்தை (வழியைத்) தந்து போவாயாக' என்பது இது. 9. **கையறல் விலக்கு** - தாம்தாம் விரும்பிய பொருளுக்காக முயலாமல் கைவிட்டதற்கு வருந்திக் கையற்றுச் சொல்வது கையறலாகும்.

**வாய்த்த பொருள் விளைத்தது ஒன்றில்லை, மாதவமே**
**ஆர்த்த அறிவில்லை, அம்பலத்துக் - கூத்துடையான்**
**சீலஞ் சிறிதேயும் சிந்தியேன், சென்றொழிந்தேன்**
**காலம் வறிதே கழித்து.**

'அறமாகிய நற்பொருளைப் பெற முயலவில்லை; தவம் செய்யத் தக்க அறிவுமில்லை; அம்பலத்தே கூத்தாடும் சிவனின் பெருமையை யான் சிந்திக்கவில்லை; என் காலத்தை வறிதே கழித்து வாணாளை வீணாளாக்கிவிட்டேன்.' தனக்குரிய சிவ சிந்தனை இன்மையை கையறல் விலக்கணி ஆக்கிய, இதன் ஆசிரியரின் சிவபக்தி வியத்தற் குரியது. 10. **உடன்படல் விலக்கு** - பிரிவிற்கு உடன் பட்டார் போலப் பேசி விலக்குவது. 11. **வெகுளி விலக்கு** - வெகுளியாகிய கடுஞ் சினம் தோன்றக் கூறி விலக்குவது இது. 12. **இரங்கல் விலக்கு** - 'நீர் பிரியின் இச் சோலையே எழில் இழக்கும்படி இவள் உயிரிழப்பள்' எனக் கூறிப் பிரிவைத் தடுப்பது இது. 13. **ஐய விலக்கு** - 'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல், நோக்கம் இம் மூன்றும் உடைத்து (1085). கூற்றோ, பெண் மானோ எனும் ஐயம் மடவரல் (இளம்பெண்) நோக்கம் (கண்ணோ) என்பதால் விலக்கப்பட்டது.

## விலக்கணி பிற அணிகளுடன் கலந்து வருவது

**46. வேற்றுப்பொருள், சிலேடை, ஏது என்று இன்னவை**
**மேற்கூறு இயற்கையின் விளங்கித் தோன்றும்**

வேற்றுப்பொருள் வைப்பு, சிலேடை, ஏது எனும் மூன்று அலங்காரங்களோடு, இவ் விலக்கணி முற்கூறியவை போல வரும்.

வேற்றுப்பொருள் வைப்பு விலக்கு: 'அனபாயச் சோழனது வெண்கொற்றக் குடைக்குள் அடங்காத வேந்தரே இல்லை; வெண் மதியும் பகலவனும் வந்துலவும் வானின்கீழ் அடங்காதது எதுவுமில்லை'. இதனுள் ஒரு பொருளால் இன்னொரு பொருளுக்குச் சிறப்புக் கூறப் பட்டுள்ளது. இதுவே வேற்றுப்பொருள் வைப்பு விலக்கு.

சிலேடை விலக்கு - சிலேடையணி பொருந்தவரும் விலக்கு இது.

ஏது விலக்கு - ஒரு காரணங்காட்டி ஒன்றை விலக்குவது போலப் புனைவது இது.

# 7. வேற்றுப்பொருள் வைப்பணி

47. முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை உலகறி பெற்றி
ஏற்றிவைத்து உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே

முன்னதாக ஒரு சிறப்புப் பொருளைச் சொல்லத் தொடங்கியவர், பின்பு அதை நிலைநிறுத்துவதற்காக, உலகறிந்த பொதுவான தன்மை யுடைய பிறிதொரு பொருளைக் கூறி முடிப்பது வேற்றுப் பொருள் வைப்பாகும். சிறப்புப் பொருளை, உலகறிந்த பொதுப் பொருளால் உறுதிப் படுத்துவது இது.

பழமொழி நானூறு இதற்கு ஏற்ற சான்றாகும். அதில் சொல்லவந்த பொருளை, உலகறிந்த பழமொழியால் உறுதிப் படுத்துவது காணலாம்.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன், 'குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்'. (பழமொழி. 6)

நரையுடைய முதியவர் இருவர் ஒரு வழக்கைக் கொணர்ந் தனர். அவர்கள் கரிகாற் பெருவளத்தானைப் பார்த்ததும் 'இவன் இளையவன்; நம் வழக்கைக் கேட்டு முடிவு சொல்ல இயலாதவன்' என்றனர். கரிகாலன், நரைமுடித்து, கிழவன்போல வந்து, வழக்கைக் கேட்டு, நல்ல தீர்ப்பு வழங்கி, அம் முதியவர்களே மனம் மகிழ்ந்து பாராட்டும்படி செய்தான். 'குலவித்தை கல்லாமலே இனிதாக அமையும்' என்பது பழமொழி.

## வேற்றுப்பொருள் வைப்பணி வகை

48. முழுவதும் சேறல், ஒருவழிச் சேறல்,
முரணித் தோன்றல், சிலேடையின் முடித்தல்,
கூடா வியற்கை, கூடு மியற்கை
இருமைஇயற்கை, விபரீதப் படுத்தல் என்று
இன்னவை எட்டும் அதனது இயல்பே

1. முழுவதும் சேறல் – 'ஒளி வளர்க்கும் சூரியனும் மறைந்தான்; உலகில் தோன்றி இறவாது வாழ்கின்றார் யார்?' என முடியும் இது.

**2. ஒருவழிச் சேறல்** - 'வாமன் (சிவன் அல்லது அருகக் கடவுள்) எல்லோர்க்கும் அருள் செய்வான்; ஏனெனில் புகழாளர்க்கு எவ்வுயிரையும் காப்பதே கடமை' என முடியும் இது, புகழாளரை மட்டும் சேர்வது ஒருவழிச் சேறல்.

**3. முரணித் தோன்றல்** - 'இடி இடித்தாலும் மழை பொழியும் முகிலை யாவரும் விரும்புவர்; குற்றங்கள் பல உளவாயினும் 'பொருள் பொழிவார் மேற்றே புகழ்'. இதில் இடி x மழை. குற்றம் x ஈகை. இம் மாறுபாடு, முரணித் தோன்றல் எனப் பட்டது. 4. சிலேடையின் முடித்தல் - முல்லைக் கொடி பிரிந் திருக்கும் தலைவி தன்னை வளர்த்தவள் என்றும் பாராமல், அவளைப் பார்த்தே சிரிக்குமாம்.

**எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த**
**முற்றிழையாள் வாட முறுவலிக்கும் - முற்றும்**
**முடியாப் பரவை முழங்குஉலகத்து என்றும்**
**கொடியார்க்கும் உண்டோ குணம்**

(இழை - அணிகலன். பரவை - கடல். கொடியார் - முல்லைக் கொடிக்கும் கொடியவர்க்கும் சிலேடை.)

**5. கூடாஇயற்கை** - முத்துமாலை, சந்தனம், நிலவு எல்லாம் பிரிந்தார்க்கு அழலை விரிக்குமாம். இவ்வாறு நெருப்புப் போல்வது அவற்றுக்குக் கூடா இயற்கை. உலகப் பொருள் களும் இவ்வாறு தத்தம் விதிவகையால் வேறுபடும் என முடிப்பது இது.

**6. கூடு மியற்கை** - இயல்பாகக் கூடுவதனைக் கூடுவதாகக் கூறுவது இது. 'தீப்போலும் நிறத்தினையுடைய செங்காந்தட் பூக்கள், பிரிந்திருக்கும் மடவாரின் மெய்வருந்த வெதுப்பும்' என முடிப்பது இது. 7. இருமை இயற்கை - மேலே கூறிய கூடாததனையும் கூடுவதையும் ஒருங்கு கூறுவது இது.

8. விபரீதம் - விபரீதப்படப் புனைவது. 'உயிர்களைப் படைத்த பிரமன் தலையை இழந்தான்; ஆனால் தன் தந்தையைக் கொன்ற சண்டீசன் குற்றம் நீங்கினான், உலகில் மேன் மக்கள் வேண்டினால், 'தப்பாகிய வினையும் விபரீதமாம்', என முடியும் இது.

# 8. வேற்றுமையணி

49. கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே

கூற்று - வெளிப்படையாகச் சொல்வது. குறிப்பு - குறிப்பாகச் சொல்வது. தம்முள் ஒப்புமையுடைய இரு பொருள்களை முதலிற்கூறி, அவற்றிடையேயுள்ள வேற்றுமையை கூற்றினாலாவது, குறிப்பினாலாவது வேற்றுமை தோன்றச் சொல்வது வேற்றுமையணியாம்.

இது மூவகைப்படும் என்பர் உரையாசிரியர்: ஒரு பொருள் வேற்றுமைச் சமம், இருபொருள் வேற்றுமைச் சமம், உயர்ச்சி வேற்றுமை.

வேற்றுமைப்படக் கூறுதல் மட்டுமன்றி ஒன்றினொன்று உயர்ச்சி தோன்றக் கூறுவதே உயர்ச்சி வேற்றுமை.

**கூற்றுவேற்றுமை**

இது வெளிப்படையாகச் சொல்வது.

**ஒரு பொருள் வேற்றுமைச் சமம்** - கடலும் படையும் ஒப்புமை யுடையன. ஒப்புமையைக் கூறி, பின்பு கடல் 'நீர் வடிவினது' என்பதே வேற்றுமை என முடிப்பது ஒரு பொருள் வேற்றுமை. சமமேயாயினும் வேற்றுமையும் உண்டென்பது கருத்து.

**இருபொருள் வேற்றுமைச் சமம்**

**சென்று செவியளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே**
**நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று**
**மலரிவரும் கூந்தலார் மாதர்நோக்கு ஒன்று**
**மலரிவரும் கூத்தன்தன் வாக்கு**

செவிவரை சென்றளக்கும் அழகுடையனவாய்ச் சிந்தை யுள்ளே நின்று அளவில்லாத இன்பம் பயப்பவை இரண்டு. அவற்றுள் ஒன்று மலர் இவரும் (பொருந்தும்) கூந்தலையுடையராம் மாதர்தம் கண்; மற்றொன்று மலரி எனும் ஊரில் பிறந்த (மலரி + வரும்) கூத்தன்தன் கவிவாக்கு.

கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தனின் கவியையும் மாதர்தம் கண்ணையும் ஒப்பிட்டுப்பிறகு அவை இரண்டும் வேறெனச் சொல்லி முடிப்பதால் இஃது இருபொருள் வேற்றுமைச் சமம். இரண்டும் வேறெனினும் சமமேயாம்.

## உயர்ச்சி வேற்றுமை

**மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்**
**ஒலியும் பெருமையும் ஒக்கும் - மலிதேரான்**
**கச்சி படுவ கடல்படா, கச்சி**
**கடல்படுவ எல்லாம் படும்**

தேர்ப்படையையுடைய மன்னனது காஞ்சிபுரமும் பெரிய கடலும் ஒலியாரவாரத்தாலும் பெருமையாலும் ஒக்கும். எனினும் மன்னனின் காஞ்சியில் உள்ளன எல்லாம் கடலில் கிடையா; ஆனால் கச்சியில் கடலில் உள்ளன எல்லாம் கிடைக்கும்.

இதில் உவமையை விட, உவமிக்கப் பட்ட பொருளுக்கு (உவமேயத்திற்கு) உயர்வு கூறினமையின் இஃது உயர்ச்சி வேற்றுமை.

## குறிப்பு வேற்றுமை

**இருபொருள் வேற்றுமைச்சமம்**- கரிய முகிற் கூட்டத்தையும் அலைபாயும் கடலையும் போலப் போர்க் களிறுகளையும் பாயும் குதிரைகளையும் உடையது சேனை. எம் அரசனது படையிலும் யானைகளும் குதிரைகளும் உள. கடலோ மரக் கலங்களையுடையது. எம் அரசனது படை, தேர்களையுடையது. இதில் கடலுக்கும் படைக்கும் ஒப்புமை கூறி, பிறகு வேற்றுமையும் கூறினமையின் இஃது இருபொருள் வேற்றுமை. ஆயினும் 'சமமே' என்பது கருத்து.

உயர்ச்சிவேற்றுமை - தாமரை மலர் வண்டுகளையுடையது. எம் காதலியின் முகம் மலர்ந்த கண்களையுடையது. ஆயினும் தாமரை இரவில் தன் இயல்பு கெடும். எம் மாதின் முகம் எப் போதும் தன் இயல்பு கெடாது. உவமையை விட உவமிக்கப்பட்ட பொருளுக்கு உயர்ச்சியாகிய வேற்றுமை கூறப்பட்டுளது.

**50. அதுவே**
**குணம் பொருள் சாதி தொழிலொடும் புணரும்**

அவ் வேற்றுமையணி குணம் பொருள் சாதி தொழில் எனும் நான்கனோடு கூடியும் வரும்.

**1. குணவேற்றுமை** - காமனாம் மன்மதனும் சோழர் பெருமானாம் கொற்றப் போர்க் கிள்ளியும் அழகால் ஒத்திருப்பினும் நிறத்தால் ஒவ்வார். எவ்வாறெனில் காமன் கருத்திருப்பான்; சோழன் நிறமோ சிவப்பு.

நிறப் பண்பு பற்றிய வேற்றுமை இது.

2. பொருள் வேற்றுமை

**ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னோர் தனியாழி வெங்கதிர்ஒன்று ஏனையது**
**தன்னே ரிலாத தமிழ்**

ஞாயிறு மலையில் தோன்றும்; தமிழ் பொதிய மலையில் தோன்றியது. இரண்டும் உயர்ந்தோர் தொழுமாறு விளங்குவன. ஒன்று புற இருளை நீக்கும்; மற்றையது அக இருளை நீக்கும். ஆனாலும் தமிழ் தனக்கு ஒப்பில்லாதது. (ஓங்கல் - உயர்ந்த மலை. ஏங்குஒலி நீர் - ஆரவாரிக்கும் ஓசையுள்ள கடல். ஞாலம்- உலகம். மின்நேர் - ஒளி பொருந்திய. தனி ஆழி - ஒற்றைச் சக்கரமுள்ள ஞாயிறு.)

ஞாயிறு, தமிழ் ஆகிய பொருள்களிடையே ஒற்றுமை கூறி, இறுதியில் வேற்றுமையை வெளிப்படுத்தும் இது பொருள் வேற்றுமை.

**3. சாதி வேற்றுமை** - புற இருள், அறியாமையாகிய அக இருள் என இருண்மையால் ஒற்றுமைப்பட்ட 'சாதி' யிடையேயுள்ள வேற்றுமை கூறுவது, இதற்கு உதாரணம்.

**4. தொழில் வேற்றுமை** - சோழனுக்கும் திருமாலுக்கும் வேற்றுமை கூறப்படுகிறது. சோழன் பகைவர் எறிந்த வேலைத் தாங்கியும் தான் பகைவர்மேல் வேலை எறிந்தும் வென்று இவ்வுலகைக் கைக் கொண்டான்; திருமாலோ மாவலிச் சக்கரவர்த்தியிடம் நீர்சொரிந்து தானமாக இவ்வுலகைப் பெற்றுக் கொண்டான். இவ்வாறு இவர்கள் வினைவகையால் வேறுபடுவர் என்பது தொழில் வேற்றுமை.

**புனல்நாடர் கோமானும் பூந்துழாய் மாலும்**
**வினைவகையான் வேறு படுவர் - புனல்நாடன்**
**ஏற்றுஎறிந்து மாற்றலர்பால் எய்தியபார் மாயவன்**
**ஏற்று இரந்து கொண்டமையி னால்**

(புனல் நாடு - சோழநாடு. துழாய் - துளசி. மாற்றலர் - பகைவர்.)

உரையாசிரியர் 'விலக்கியல்,சிலேடையின் மேவவும் பெறுமே' என்று கொண்டு, மேலும் இரண்டு வகைகள் கூறுகிறார்.

1. விலக்கியல் வேற்றுமை - முகில் கைம்மாறும் பருவ எல்லையை உடையது. பருவ வேறுபாடின்றிக் கொடுக்கின்ற அனபாயச் சோழனை அஃது ஒக்குமோ? - இவ்வாறு கேட்பது விலக்குவதாகும்.

2. சிலேடை வேற்றுமை - சிலேடையணியுடன் வேற்றுமை கூடி வருவது.

## 9. விபாவனையணி

**51. உலகறி காரணம் ஒழித்துஒன்று உரைப்புழி**
**வேறுஒரு காரணம் இயல்பு குறிப்பின்**
**வெளிப்பட உரைப்பது விபாவனை ஆகும்**

ஒன்றைப் பற்றிக் கூறும்பொழுது, அதற்கு உலகம் அறிந்த காரணத்தைக் கூறாமல் விட்டு, பிறிதொரு காரணத்தை இயல்பாகக் குறிப்பினால் வெளிப்படுமாறு, உரைப்பது விபாவனை ஆகும். (விபாவனை - விசேடமான காரணம்)

**அயற் காரண விபாவனை** - இதனை வேறொரு காரண விபாவனை எனவும் கூறலாம்.

தனித்திருக்கும் காதலர் சிந்தை வேகும்; தேறல் மதுவைப் பருகாமலே மயில் ஆடும்; தூதுவர் இன்றியே மகளிர் சிலர் ஊடல் தீர்ந்தனர்; கார்மேகம் போரின்றியே வில்லை வளைக்கும்.

இதற்கெல்லாம் காரணம் கார்காலம் என்பது குறிப்பால் ஊகிக்கப்படுகிறது.

**தீயின்றி வேம்தமியோர் சிந்தை செழுந்தேறல்**
**வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார்**
**இன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார் அமரின்றிக்**
**கன்றிச் சிலைவளைக்கும் கார்**

(தமியோர் - பிரிந்து தனித்திருக்கும் காதலர். தேறல் - இனிய மது. வாய் இன்றி - வாயால் பருகாமல். மஞ்ஞை - மயில். தூங்கும் - மகிழ்ந்தாடும். வாயிலார் - தூதுவர். சிலர் - மகளிர்சிலர். அமர் - போர். கன்றி - சினந்து. சிலை - வானவில். கார் - முகில்.)

**இயல்புவிபாவனை** - இதனைக் குறிப்புக் காரண விபாவனை என்றும் கூறுப. 'கடையாமே கூர்த்த கருநெடுங்கண்' - மகளிர் கண்கள் யாரும் கடையாமலே கூர்மையை அடைந்தன என்பது இது. இவை இயற்கையாக அமைந்தன என ஊகிக்கப் படுவனவாம். 'மகளிர் மார் பகங்கள் யாரும் ஆராய்ந்து செய்யாமலே தக்க வடிவத்தைப் பொருந்தின' என்பதும் அது.

உரையாசிரியர் 'வினை எதிர்மறுத்துப் பொருள் புலப் படுத்தல்', 'பொதுவகையால் காரணம் விலக்கிக் காரியம் புலப் படுத்தல்' என இரண்டு கூறுவர்.

**1. வினை எதிர்மறுத்துப் பொருள் புலப்படுத்துவது**

பூட்டாத வில் - வானவில். தீட்டாத அம்பு - மழைத்துளி. காணாத கண் - மயிலின் தோகையிலுள்ள கண். இவை யாவும் கார் கால வருணனை என்ற பொருளைப் புலப்படுத்த வரும்.

**2. பொதுவகையால் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்துவது**

காரணமின்றி தென்றல்காற்று கனல்கின்றது; தண்ணிய மதியம் வெப்பத்தை வீசுகிறது; காரிகையர்க்குக் கண்கள் இயல் பாகவே நீண்டுள்ளன; தனங்கள் தாமே திரண்டுள்ளன. காரண மின்றியே நிகழ்ந்தனவாக இக் காரியங்கள் கூறப்பட்டுள்ளன.

**வினை எதிர்மறுத்துப்பொருள் புலப்படுத்தல் (குறிப்பு)** - பாயாத வேங்கை-மரத்தைக் குறிக்கும். பூவாத புண்டரிகம் (தாமரை)- புலி. வேங்கை மலரவே, அதைப் புலியென்று கருதி அஞ்சி, ஆண்யானை தன் பெண்யானையை (களிறு தன் பிடியைத்) தழுவிக் கர்ச்சனை புரியும் காட்டில், தலைவனே நீ வாரற்க! - என்பது பாடற்கருத்து. தலைவனுக்கு ஊறு நேரலாம் எனும் குறிப்பை இது தருகிறது.

## 10. ஒட்டணி

52. கருதிய பொருள்தொகுத்து அதுபுலப் படுத்தற்கு
ஒத்ததுஒன்று உரைப்பின் அஃது ஒட்டென மொழிப

கவிஞன் தான் கருதிய பொருளை மறைத்து, அதைப் புலப்படுத்துவதற்கு அதனோடு ஒத்தது பிறிதொன்றைச் சொல்லின் அஃது ஒட்டணியாகும்.

சுருங்கச் சொன்னால் இஃது உவமையைக் கூறி, அவ் உவமையால் உணர்த்தப்படும் பொருளை (உவமேயத்தை) உய்த்துணர விட்டுவிடுவது. சில போது இஃது, அகப் பாடல்களில் வரும் உள்ளுறை போலவும் காணப்படும்.

இதனை 'உவமப் போலி' என்றும் கூறுவர். அதற்கு இஃது உவமைபோலிருப்பதே காரணம்.

பிறிது மொழிதலணி எனவும் இதைக் கூறுவர். சொல்ல வந்ததை மறைத்துப் பிறிதொன்றைக் கூறி, அதை உய்த்துணர வைப்பதால் இப் பெயர் பெற்றது.

இதை 'நுவலா நுவற்சி' எனவும் கூறுப. அதாவது சொல்ல வந்ததைச் சொல்லாமலே சொல்லி விடுவது இது.

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின் (599)**

ஊக்கமுடைமைக் குறள் இது. யானை பெரியது; கூரிய கொம்பையுடையது; ஆனாலும் புலி தாக்க வருமாயின் யானை அஞ்சும். (வெரூஉம் - அஞ்சும்) புலியின் அளவு ஊக்கம் யானைக்கு இல்லை. அதுபோல அரசர்கள் உடல் வலிமையும் படை மிகுதியும் உடையராயினும், ஊக்கமிலராயின் அவற்றால் பயனில்லை; அவர்கள் சிறிய அரசர்களேயாயினும் ஊக்கம் மிகுதியுடையார்க்கு அஞ்சுவர். இதுவே சொல்ல வந்த கருத்து. இதைப் பிறிது மொழிதல் என்பர் பரிமேலழகர்.

**இளைதாக முள்மரம் கொல்க, களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து (879)**

பகைத்திறம் தெரிதல் பற்றிய இக் குறளில், ஒரு முள் மரத்தை அது சிறு செடியளவாக இருக்கும்போதே அழித்துவிடுக என்ற கருத்துளது. 'வெல்ல வேண்டிய பகையை அது வலிமை பெற்ற பிறகு ஒழிக்க நினைத்தால், அது உன்னை ஒழித்துவிடும்'. என்ற கருத்து, சொல்லாமற் சொல்லப்பட்டிருக்கிறது. அஃதாவது உவமையைச் சொல்லி, உவமேயப் பொருள் உணர்த்தப் பட்டிருக்கிறது. இது ஒரு பொருளை ஒட்டியதாகக் கூறப்படுவதால் ஒட்டணியாம். இதனையும் 'பிறிதுமொழிதல்' என்பார் பரிமேலழகர்.

## ஒட்டணி வகை

**53. அதுவே**
**அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்**
**அடைபொது வாக்கி ஆங்ஙனம் மொழிதலும்**
**விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்**
**எனநால் வகையினும் இயலும் என்ப.**

சொல்லவந்த பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிதல்; அடையைப் பொதுவாக்கிப் பொருள் வேறுபட

மொழிதல்; அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல்; அடையை விபரீதப் படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் என இது நான்கு வகையாக நடக்கும்.

**1. அடையும் பொருளும் அயல்பட மொழிதல்**

> **வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்**
> **குறைபடுதேன் வேட்டும் குறுகும் - நிறைமதுச் சேர்ந்து**
> **உண்டாடும் தன்முகத்தே செவ்வி யுடையதோர்**
> **வண்டா மரைபிரிந்த வண்டு**

நிறைந்த மதுவையுடைய செவ்வியுள்ள தாமரையில் தேனையுண்டு களித்துப் பிரிந்த வண்டு, வெறிகொண்ட வண்டுக் கூட்டம் மேய்ந்து வெறுத்துக் கைவிட்ட குறைமிகுந்த காவி மலரின் தேனை விரும்பியும் சேரும்.

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைமகனிடம் தோழி சொல்வது இது.

தாமரை - மனைவி, வண்டு - தலைவன், காவி மலர் - பரத்தை. இவ்வாறு வருவன சங்கஅகப்பாடல்களில் 'உள்ளுறை' எனப்படும். வெறிகொள், குறைபடுதேன், செவ்வியுடையது என அடைமொழிகளும் உட்பொருள் உடையனவாதல் காண்க. அவற்றின் பொருள் வேறுபடும்.

**2. அடை பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்** - இதில் அடைமொழிகள் உவமைக்கும் பொருளுக்கும் பொதுவாய் வரும்.

**3. அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்** - இதில் அடைமொழி கலந்து காணப்படும்.

**4. அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்** - அடை மொழியை முரண்படப் புனைவது இது.

இவை சிறப்புடையனவல்ல; சொற் சாதுரியமும் இதில் புலப்படவில்லை; இலக்கிய இன்பமும் இல்லை. கவிஞர்தம் மிகைப்பட்ட கற்பனைகள் இவை.

## 11. அதிசயவணி

54. **மனப்படும் ஒருபொருள் வனப்புவந்து உரைப்புழி**
**உலகுவரம்பு இறவா நிலைமைத் தாகி**
**ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்**

கவிஞன் தன் மனம் விரும்பும் பொருளின் வனப்பை உவந்து மகிழ்ச்சியோடு சொல்லும்போது, உலகநடையைக் கட வாத தன்மையை உடையதாய், உயர்ந்தோர் வியக்குமாறு சொல்வது அதிசயவணி.

## அதிசயவணி வகை

**55. அதுதான்,**
**பொருள், குணம், தொழில், ஐயம், துணிவே திரிபுஎனத்**
**தெருளுறத் தோன்றும் நிலைமையது என்ப**

பொருளதிசயம் குணவதிசயம் தொழிலதிசயம் ஐய வதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம் என இது ஆறுவகையாகத் தெளிவுறத் தோன்றும் இயல்புடைய தென்பர்.

**1. பொருளதிசயம்** - ஒரு பொருளை அதிசயம் தோன்றப் புனைவது .

**நோக்கினாள் நோக்குஎதிர் நோக்குதல் தாக்கணங்கு**
**தானைக் கொண்டன்னது உடைத்து (1082)**

இக்குறள் தலைவன் கூற்று. தலைவியின் பார்வையைக் கண்டு அதிசயப் படுவது. அழகிய நோக்கினாளை யான் நோக்க, அவள் என்னை எதிர்நோக்குதல், தானே வருத்தும் தாக்கணங்கு தன்னுடன் ஒரு சேனையையும் கூட்டி வந்தது போலுளது. இதனால் தலைவியது அழகு அதிசயப்படப் புனையப் பட்டது.

**2. குணவதிசயம்** - ஒரு பொருளின் நிறம், குணம், வடிவம் முதலியன பற்றிய அதிசயவணி.

**நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள் (குறள் 1164)**

காமமாகிய இந் நெருப்பு புதுவிதமாகவுளது என அதன் இயல்பை வியப்புத் தோன்றப் புனைவது இது.

**3. தொழிலதிசயம்** - ஒருபொருளின் செயலில் அதிசயம் தோன்றப் புனைவது.

**தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு (குறள் 1103)**

தம்மால் விரும்பப்பட்டவருடன் கூடுதல் பற்றிய இது, அதிசயம் தோன்ற உரைக்கப்பட்டுள்ளது. திருமாலது சொர்க்கபூமியும் ஈடாகாது என்பது அதிசயம். கூடுதலாம் தொழில் பற்றியதாதலின் இது தொழிலதிசயம்.

**4. ஐயவதிசயம்** - ஒரு பொருளின்மீது ஐயப்பட்டு, அதிசயம் தோன்றப் புனைவது.

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு** (குறள் 1081)

தெய்வ மகளோ, அழகிய மயிலோ அல்லது கனத்த குழை காதணியை அணிந்திருப்பதால் பெண்தானோ - தெளிவு பெற மாட்டாமல் என் நெஞ்சம் மயங்குகிறது. ஒரு பெண்ணைப் பார்த்ததும் ஐயப்பட்டு, அதிசயித்து, ஒருதலைவன் உரைத்தது இது.

**5. துணிவதிசயம்** - துணிவது, தெளிவதாகும்.

**மக்களே போல்வர் கயவர், அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்டது இல்** (1071)

கயவர்களைக் கயவரெனத் தெரிய வழியில்லை. அவர்கள் மக்களைப் போலவே தெரிகின்றனர். பாம்பு, தேள் எல்லாம் வேறுபாடு தெரிகிறது. அவர்களைப் போன்ற ஒப்புமையை உலகிடை யாம் கண்டதே இல்லை! - இவ்வாறு கூறுவது துணிவதிசயம்.

**6. திரிபதிசயம்** - ஒன்றை வேறொன்றாகத் துணிதல் இது.

திங்கள் பொழியும் நிலவொளியைப் பாலென்று, பச்சைக் கிளி வாய்வைத்துக் குடிக்க முயல்கிறது; மகளிர் தம் பட்டுத் துகிலென்று நிலவொளியைப் பிடிக்கக் கையை நீட்டுகின்றனர்.

**திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்**
**பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும் - அங்கு அயலே**
**காந்தர் முயக்கு ஒழிந்தார் கைவறிதே நீட்டுவரால்**
**ஏந்திழையார் பூந்துகிலாம் என்று**

(வெள்ளி வள்ளம் - வெள்ளிக் கிண்ணம். கிள்ளை - கிளி. காந்தர் - காதலர். முயக்கு - தழுவுதல். ஏந்திழையார் - அணிகள் பூண்ட மகளிர்.) ஒன்று மற்றொன்றாக உணரப்பட்டவாறு அறிக.

# 12. தற்குறிப்பேற்றவணி

56. **பெயர்பொருள் அல்பொருள் என இரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றி அயல்ஒன்று
தான்குறித்து ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்**

அசையும் பொருள், அசையாப் பொருள் என இரு பொருளினும், அவற்றின் இயல்பாக நிகழும் தன்மையை நீக்கி, அதற்கு அயலாகிய, தான் கருதிய ஒன்றை அதன்மேலேற்றிப் புனைவது தற்குறிப்பேற்றம். (தன் + குறிப்பு + ஏற்றம்) சுருக்கமாக இயல்பாக நிகழ்வதொன்றில், புலவன் தன் கற்பனையை ஏற்றிச்சொல்வது இது.

கைகேயி சூழ்வினைப் படலத்தில், இராமன் காடேகவும் பரதன் நாடாளவும் வரம்பெற்றனள் கைகேயி. அதனால் தயரதன் துடி துடித்துப்போன, அந்த நாள் இரவு முடிந்து, விடிகாலம் தோன்றுகிறது. அப்பொழுது நடந்த காலை நிகழ்ச்சிகள் அனைத்திலும் கம்பர் தம் கற்பனையை ஏற்றிப் பல பாடல்கள் புனைகின்றார்.

உயிர் போலப் பல காலம் பழகிய தயரதனாகிய தன் கணவன் இடரெய்த, இரங்காத கைகேயியின் செயல் கண்டு கங்குலாகிய நங்கை (இரவு), மைந்தர் முன்னே நிற்கவும் வெட்கப் பட்டு, நீங்கிப் போயினாள்.

**சேண் உலாவியநாள் எலாம் உயிர்ஒன்று போல்வன செய்து பின்
ஏண் உலாவிய தோளினான் இடரெய்த ஒன்றும் இரங்கிலா
வாள் நிலா நகை மாதராள் செயல்கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னாள்என ஏகினாள் நளிர்கங்கு லாகிய நங்கையே**

(சேண் உலாவிய நாள் - மிகப் பல காலமாக. ஏண் - வலிமை. மாதராள் - கைகேயி. கங்குல்- இரவுப்பெண்.)

இராமனுக்கு முடிசூடப் போவதால், அவன் கைகளுக்குக் காப்புநாண் அணிவதற்குமுன், இரவு வானம் நட்சத்திர முத்துக்களைப் பதித்து, இம் மண்ணுலகம் அனைத்துக்கும் நிழல்தர பந்தல் போட்டி ருந்ததாம். விடியுமுன் அந் நிகழ்ச்சியில்லை என முடி வானதால், விடிந்ததும் அவ்வாறு விரித்த பந்தலைப் பிரித்து விட்டதுபோல, வானில் விண்மீன்கள் மறைந்தனவாம்.

- - காப்புநாண் அணிவதற்குமுன்

**வரித்த தண்கதிர் முத்தது ஆகி, இம்மண் அனைத்தும் நிழற்றமேல்**
**விரித்த பந்தர் பிரித்ததாம் என மீன் ஒளித்தது வானமே!**

கம்பர் தம் காப்பியம் முழுவதும் இவ்வாறு தற்குறிப் பேற்ற அணிக்கு மிகுதியான இடம் தந்துள்ளார். இவற்றைத் தொகுத்துப் பார்ப்பது, இலக்கிய இன்பம் தரும் கல்வியாகும்.

**பெயர்பொருள் தற்குறிப்பேற்றம்** - அசையும் பொருளில் தன் கற்பனையை ஏற்றிப் புனைவது.

**மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்**
**வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் -**
**விண்படர்ந்து**
**பாயுங்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம்**
**தேயும் தெளிவிசும்பில் நின்று**

சோழனது மதயானை பகையரசர்தம் வெண்கொற்றக் குடையைச் சிதைத்த கோபத்தால், வானிலுள்ள முழுமதி தானும் குடைபோன்றிருத்தலால், அந்த யானை தன் மீதும் வானில் வந்து பாயுமோ என்று அச்சத்தால் தேயத் தொடங்கியது.

தேய்பிறை இயல்பான நிகழ்ச்சி; அதில் இவ்வாறு கற்பனை ஏற்றப்பட்டுள்ளது. (மண்படு - உலகை ஆளும். பனி மதியம் குடை போல்வது ஆதலால் அதுவும்.)

**பெயராத பொருள் தற்குறிப்பேற்றம்** - சோலையானது தனது வெம்மையைப் போக்க மழைபொழிந்த வானத்திற்குக் கைம் மாறாக, மலர்களையும் மகரந்தமாகிய மதுவினையும் கிளைகளாகிய கைகளால் ஏந்தி நிற்கும்.

## இவ்வணி உவமைச் சொல்லுடன் வருதல்

**57. அன்ன போலெனும் அவைமுத லாகிய**
**சொன்னிலை விளங்கும் தோற்றமும் உடைத்தே**

அன்ன, போல முதலாகிய சொற்களுடனும் இத் தற் குறிப் பேற்றவணி வரும். ‘சூரியன் இருள் எங்கே ஒளிந்திருக்கிறது என்று தேடுவதைப் போல, தன் கதிர்க்கைகளைப் பரப்பி, சோலைக்குள்ளும் சென்று, மலர்களைத் திறந்து பார்த்து தாமரையின் இதழ்களையும் விரித்துப் பார்க்கின்றான்’. இங்கு போல என்ற உவம உருபு, தற்குறிப் பேற்ற உருபாகவும் வந்தது என்பர் பழைய உரையாசிரியர்.

# 13. ஏதுவணி

58. **யாதன் திறத்தினும் இதனின்இது விளைந்தது என்று**
**ஏது விதந்து உரைப்பது ஏது; அதுதான்**
**காரகம், ஞாபகம் என இரு திறப்படும்.**

எந்த ஒரு பொருளைப் பற்றியும் 'இதனால் இது நிகழ்ந்த தென்று' ஏதுவை (காரணத்தை) விதந்து (தனித்தெடுத்து) சொல்வது ஏதுவணியாகும். அது காரக ஏது, ஞாபக ஏது என இருவகைப்படும். காரகம் - ஒன்றன் செயலை அடிப்படையாகவுடையது. ஒரு விளைவை ஏற்படுத்தும் வலுவான காரணம். 'தொழில் நிகழ்ச்சிக்குக் கருவியாயுள்ள ஏது' - என்னும் தமிழ்ப் பேரகராதி.

ஞாபக ஏது - அறிவிற்குக் காரணமாயது. கருவிமுதலிய வற்றால் அல்லாமல், பிற காரணத்தால் உணரும்படி கூறுவது.

## காரக ஏது

59. **முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்**
**ஏற்பதும் நீக்கமும் என இவை காரகம்**

முதல்வன் - கருத்தா. பொருள், கருமம் (செயல்), கருவியும் ஆகிய நான்காய், ஆக்குவதும் அழிப்பதும் என இருநிலையிலும் காரக ஏது வரும்.

1. **கருத்தா காரக ஏது** - புயல் காற்று பூங்காவில் புகுந்து மலர்களை யெல்லாம் அசைத்துவந்த காரணத்தால், உலகிற்குச் சொல்லரிய பேரின்பம் தோற்றியது. புயல் கருத்தா. இது ஆக்கம் பற்றியது.

2. **பொருட் காரக ஏது** - தென் பொதிகை மலயத்திலிருந்து வரும் தமிழ் மாருதம் (தென்றல்), அருவியிற் கலந்து, சந்தனத்தின் குளிர்ச்சி பெற்று, நிலவொளியிற் படிந்து வந்ததால், தன் இயல்புக்கு மாறாக, தலைவனைப் பிரிந்திருந்த தலைவி யரின் உள்ளத்தையும் உயிரையும் வாட்டுகின்றது. இஃது அழிவு பற்றியது. தமிழ் மாருதம் - பொருள்.

3. **கரும காரக ஏது** - விந்திய மலையில் தவம் செய்பவள் சய மடந்தை (வெற்றி மகள்). பாற்கடலில் தவம் செய்பவள்

இலக்குமி. ஆதிசேடனாம் பாம்பின் தலையில் தவம் செய்பவள் பூமிதேவி. இவர்கள் தாங்கள் செய்த தவத்தால் சோழ மன்னனின் புயத்தைத் தழுவுவர் (புயம் - தோள்). நாங்களும் அப்புயத்தைத் தழுவ என்ன தவம் செய்தோம்! இதில் தவம் - கருமம்.

4. கருவி காரக ஏது - கருவிகளைக் கூறுவது இது.

**கரடத்தால் மாரியும், கண்ணால் வெயிலும்,**
**நிரைவயிரக் கோட்டால் நிலவும் - சொரியுமால்**
**நீள்ஆர்த் தொடை அதுலன் நேரார் கலிங்கத்து**
**வாளால் கவர்ந்த வளம்**

(நீள் ஆர்த் தொடை - நீண்ட ஆத்திமாலை. அதுலன் - ஒப்பற்றவன். நேரார் - பகைவர். வளம் - யானைக் கூட்டம். கரடம் - மதம். கோடு - தந்தம்) சோழன் கலிங்கத்தை வாளால் வென்று கொண்டு வந்த யானைக் கூட்டம் மதத்தால் மழை பொழிந்தது; கண்ணால் வெயிலை வீசியது; வயிரம் பாய்ந்த தந்தக் கொம்பால் நிலவொளி சொரிந்தது. இதில் வாளால், கரடத்தால், கண்ணால், கோட்டால் என்பன காரியம் நிகழ்த்திய கருவிகள்.

## ஞாபக ஏது

**60. அவையல பிறவின் அறிவது ஞாபகம்**

முன்பு சொல்லப்பட்ட காரணங்கள் அல்லாமல், பிற காரணங்களால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபக ஏது.

மாதர்தம் நெற்றி வியர்க்கவும் வாய் துடிக்கவும் வளைந்த புருவ வில் நெறிபடவும் வாட்கண் சிவக்கவும் காரணம், அவர்கள் தலைவன் மீது கொண்ட ஊடல் அளவு கடத்தலைத் தெரிவிக்கும். இது ஞாபக ஏது. உய்த்துணர வைப்பது இது.

## அபாவ ஏது

**61. அபாவம் தானும் அதன்பாற் படுமே**

அபாவம் - ஒன்றனது இன்மை. ஒன்றை 'இல்லை' என்பதும் ஏதுவணியிற் படுமாம்.

## அபாவ ஏது வகைகள்

62. என்றும் அபாவமும் இன்மையது அபாவமும்
ஒன்றினொன்று அபாவமும் உள்ளதன் அபாவமும்
அழிவுபாட்டு அபாவமும் என ஐந்து அபாவம்

1. **என்றும் அபாவம்** - எக்காலத்தும் இல்லாமை. காதலர் சொன்னபடி கார்கால மாலையில் கட்டாயம் வருவார்; 'யாண்டும் மொழி திறம்பார்' (எப்பொழுதும் சொன்ன சொல் தவறார்.) இது எக்காலத்தும் இல்லை என்பது.

2. **இன்மையதபாவம்** - இல்லாமையினது இல்லாமை. அதாவது உண்மை. 'காதலர் கட்டாயம் வருவார், நின் கூந்தலிற் பூச் சூட்ட! அவர் வாராமை இல்லை!' (வருவார்) என்பது இது.

3. **ஒன்றினொன்றபாவம்** - ஒன்றன்கண் ஒன்றனது இல்லாமை. ஒன்றில், தொடர்புடையதை இல்லை எனல். மேலானவர் பொய்ம்மையுடன் புணரார்ரே (பொய் பேசார்). பொய்ம்மையும் மெய்ம்மை சூழ் மேலானவரைப் பொருந்தாது. இதுவும் காதலர் குறித்த காலத்தில் வருவார் என்ற கருத்தினதே.

4. **உள்ளதனபாவம்** - ஓரிடத்து ஒரு காலத்துள்ளது, பிறிதோரிடத்தில் பிறிதொரு காலத்தில் இல்லாமை. 'முற்பிறவியில் ஆமை ஓட்டையும் அணியாகப் பூண்ட பரம சிவனை வணங்காமையானது, இப்பிறவியில் எங்களைச் செல்வமின்றிக் கையேந்த வைத்துவிட்டது'.

5. **அழிவுபாட்டபாவம்** - முன்புள்ளது அழிவுபட்டு இலதாதல். ''இளமை கழிந்தது; செல்வத்தினால் வரும் செருக்கும் அழிந்தது; விரும்பிய பொருளை அடைய முயலும் ஊக்கமும் ஒழிந்தது; காதற் பெண்டிர் மேல் வைத்த ஆசையும் தீர்ந்தது. அதனால் ஒருதன்மைத்தாய சித்தியை அடைந்தது என் உள்ளம்''

## சித்திர ஏது

63. தூர காரியமும் ஒருங்குடன் தோற்றமும்
காரணம் முந்துறூஉம் காரிய நிலையும்
யுத்தமும் அயுத்தமும் முத்தையோடு இயலும்

இதுவும் ஏதுவணியில் அடங்குமாம். சித்திர ஏது - வியப்பைத் தரும் ஏது. தூர காரிய ஏது, ஒருங்குடன் தோற்ற ஏது, காரணம் முந்துறூஉம் காரிய நிலை (காரியம் முந்துறூஉம் காரண நிலை' எனவும் பாடம் உண்டு.) யுத்த ஏது, அயுத்த ஏது (யுக்தம்). இவ் ஐந்தும் முந்தைய ஏது வணியுடன் பொருந்தி வரும். (முத்தை - முந்தையது)

1. **தூர காரிய ஏது** - வேறு ஒரு பெண்ணிடம் வேந்தன் நகத்தினால் குறியிட, அது தலைமகளை வருத்தியதாம். இதனால் இருவரும் ஒருவரே போல் ஆயினராம். எங்கோ நடந்தது இங்கு வலிக்கிறது.

2. **ஒருங்குடன் தோற்ற ஏது** - காரணமும் காரியமும் ஒருசேர நிகழ்வது. 'மாலைப் போதில் மதிநிலவும்விரிந்தது; மன்மதனின் போரும் நிகழ்ந்தது'. முன்னது காரணம்; பின்னது காரியம்.

3. **காரணம் முந்துறூஉம் காரிய நிலை ஏது** - தலைவன் பிரியத் தனித்திருந்தகோதையர்க்கு, மாரன் கணை தைக்குமென்று மார்பகம் புண்ணானது. காரணம் வருமுன்பே காரியம் நிகழ்ந்துவிட்டது.

4. **யுத்த ஏது** - யுத்தம் பொருத்தமுடைமை. 'பொன்னி வள நாடனின் கையிலுள்ள வேல் பொழியும் நிலவால், பகையரசர்களின் செங்கை நூறாயிரமாம் தாமரைகள் குவிந்தன. தாமரை குவிவதற்கு, நிலவு ஒளிபரவியது பொருத்தமான காரணம்.

5. **அயுத்த ஏது** - காரணத்திற்குப் பொருந்தாத காரியம் நிகழ்வது அயுத்தம் - பொருத்த மில்லாத தன்மை. "சோழன் அனபாயன் முகமாகிய மதியின் புன்னகை ஒளியால், மகளிர் முகத் தாமரைகள் பல மலர்ந்தன." தாமரை நிலவில் குவியுமேயன்றி மலராது. இது பொருத்தமில்லாத காரணம்.

**ஐய ஏது** - இது உரையாசிரியர் மேலும் சேர்ப்பது. "சிவனின் கழுத்தில் உண்ட நஞ்சு அமிழ்தமாக மாறியது உமையின் மழலை மொழியாலோ, ஓதும் தமிழ் மறையின் ஒலியாலோ? இதனுள் எதனாலோ?"

## 14. நுட்பவணி

64. **தெரிபு வேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்**
**அரிதுணர் வினைத்திறம் நுட்ப மாகும்.**

பிறர் கருத்தைத் தெரிந்து கொண்டு, வெளிப்படையாக மொழியாது, குறிப்பினாலாவது செயலினாலாவது அவர்கள் அரிதாக நோக்கி உணரும் படி செய்யும் செயல்திறம் உடையது நுட்பவணி.

1. **குறிப்பு நுட்பம்** - கூட்டம் வேண்டிய தலைவனிடம் தோழி மாலைக் காலத்தே கூட்டத்திற்கு உடன்பட்டதைக் குறிப்பால் உணர்த்துவது. இது தமிழ் அகப்பாடல் துறை வழிப்பட்ட அணி.

**காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்**
**பேதையர் ஆயம் பிரியாத - மாதர்**
**படர்இருள் கால் சீக்கும் பகலவனை நோக்கிக்**
**குடதிசையை நோக்கும் குறிப்பு**

தோழியர் கூட்டம் பிரியாத நிலையில், தலைவிக்காகத் தோழி, பகலவன் மறையும் மேற்குத் திசையை நோக்கி நின்று குறிப்புக் காட்டினாள். அது மாலையில் கூட்டத்திற்கு உடன் பட்டமை காட்டும் குறிப்பு. இது காதலன் உயிர்க்குக் காப்பாயிற்று.

2. **தொழில் நுட்பம்** - தலைவி யாழில் குறிஞ்சிப் பண்ணை மீட்டினாள். குறிஞ்சிக்குக் காலம் நள்ளிரவு. எனவே அந்நடு யாமத்தில் கூடுதற்கு உடன்பட்டமையைக் குறிப்பால் உணர்த்தும் இது தொழில் நுட்பம்.

## 15. இலேசவணி

65. **குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்**
**மறைத்து உரையாடல் இலேச மாகும்**

மனக்குறிப்பை வெளிப்படுத்தும் சத்துவமாகிய மெய்ப் பாட்டை, பிறிது ஒன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்வது இலேச அணியாகும்.

இலேச - மிகச்சிறிய மனவுணர்வுக் குறிப்பு. சத்துவம் - அது அப்படியே உடம்பில் வெளிப்படுவது. சிவந்த நிற நூலில், வெண் பளிங்குக் கற்களைக் கோத்தால், உள்ளேயுள்ள செந்நிறம் அவ்வாறே வெளியே தெரியும். அதுபோல மனவுணர்வுகள் சொல் தளர்தல், மெய் மயிர் துடித்தல், கண்ணீர் அரும்பல், கண் சிவத்தல், படபடத்தல் முதலிய

மெய்ப்பாடுகளாக உடம்பில் வெளிப்படும். எதனால் அது விளைந்ததோ, அதை மறைத்துப் பிறிது ஒன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது இலேசவணி.

> **கல்உயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்**
> **மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று- சொல்லுவரால்**
> **பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்து**
> **எங்கண் கலுழ்ந்தனவால் என்று.**

கல்போல் உயர்ந்த தோளினையுடைய கிள்ளி (சோழ மன்னன்) ஏறி வந்த, குதிரையைத் (பரி) தொழுததால், மெல்லியலாராம் மகளிரின் கண்கள் நீர் சொரிந்தன. ஆனால் பொங்கி எழும் படைகள் பரந்துவந்ததால், எழுந்த தூசியினால்தான் கண்ணீர் வடிந்தது என்று அவர்கள் தங்கள் தோழியரிடம் (உண்மையை மறைத்துக்) கூறினார்கள்.

## இலேசவணியின் உள்வகைகள் இரண்டு

> **66. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்**
> **பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்**
> **அவையும் அன்ன வென்று அறைகுநர் உளரே**

இலேசம் என்பது குறிப்பணியே. அதனால் சிலர் ஒன்றையே/ஒருவரையே, புகழ்வதுபோலப் பழிப்பதையும் பழிப்பதுபோலப் புகழ்வதையும் இவ் இலேசவணி என்பர். இதில் பழிப்பும் புகழும் குறிப்பாலறியப் படுகின்றன.

### 1. புகழ்வது போலப் பழித்தல்

> **தேவர் அனையர் கயவர் அவருந்தாம்**
> **மேவன செய்தொழுக லான்** (குறள். 1073)

தம்மைக் கட்டுப்படுத்துவாரின்றி, தாம் விரும்பியவாறே ஒழுகுதலால் கயவர்கள், தேவர்களைப் போன்றவராவர்.

இது புகழ்வார் போன்று பழித்தவாறாயிற்று என்பது பரிமேலழகர் விளக்கம்.

### 2. பழிப்பது போலப் புகழ்தல்

> **இவன்என் நலங்கவர்ந்த**
> **கள்வன்; இவன்எனது**
> **நெஞ்சம் நிறையழித்த**
> **கள்வன் என்று - அஞ்சொலாய்!**
> **செல்லும் நெறியெலாம்**
> **சேரலர் கோக் கோதைக்குச்**

**சொல்லும் பழியோ**
**பெரிது** முத்தொள்ளாயிரம்

கோதை - சேரமன்னன். அவன் ஊர்வலமாகச் செல்லும் வழியில் எல்லாம், மகளிர் 'இவன் என் நலம்(அழகைக்) கவர்ந்த கள்வன்; இவன் என் நெஞ்சின் நிறையழித்த திருடன்' என்று தூற்றும் பழியோ மிகப் பெரிதாகும். இது பழிப்பது போல் அவனது பெருமித அழகைப் புகழ்வது.

## 16. நிரல்நிறை அணி

67. **நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே**

நிரல் நிறுத்துதல் - வரிசைப்பட நிறுத்துதல். எழுவாய் போலும் சொற்களை முதலில் வரிசைப்பட நிறுத்தி, பின்னர் அவை கொண்டு முடியும் சொற்களை அதே வரிசைப்படி நிறுத்தி, ஒன்றுடன் ஒன்றைச் சேர்த்துப் பொருள்கொள்ளுமாறு இயற்றுவது - பாட்டுப் புனைவது நிரனிறையணியாகும்.

இவ்வாறு வரிசைப்படி அமைக்காது, மொழிமாற்றி வைத்து, பொருத்திப் பொருள் கொள்ள வைப்பதும் இவ் அணியின் பாற்படும்.

1. **நிரனிறையணி** - நிரலே நிறுத்தி நேர்பொருள் கொள்ளுதல்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது** (குறள் 45)

இல்வாழ்க்கையின் பண்பு அன்பு, பயன் அறம் என நிரலே பொருள் கொள்ள வேண்டும்.

**கொடிகுவளை கொட்டை நுசுப்புஉண்கண் மேனி**
**மதிபவளம் முத்தம் முகம்வாய் முறுவல்**
**பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்**
**வடிவினளே வஞ்சி மகள்**

ஒவ்வோரடியிலும் நிரல்நிறை உளது. வஞ்சிமகளின் வடிவழகு வருணிக்கப் படுகிறது.

| | | |
|---|---|---|
| கொடி, | குவளை | கொட்டை (தாமரைப் பொகுட்டு) |
| இடை (நுசுப்பு) | கண், | மேனி (நிறம்). |
| மதி - | பவளம் - | முத்தம் - |
| முகம் | வாய் | முறுவல் (புன்னகை) |

| | | |
|---|---|---|
| (பிடி - பெண் யானை) நடை | பிணை (பெண்மான்)- நோக்கு (பார்வை) | மஞ்ஞை - (மயில்) சாயல் |

இவ்வாறு வருவனவே நிரனிறையணி

(2 **எதிர் நிரனிறையணி** - நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்ளுதல்.

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர். (குறள் 410)**

விலங்கு - ஏனையவர் என்னும் கல்லாதவரோடு இணையும்.

மக்கள் - இலங்குநூல் (சிறந்தநூல்) கற்றவரோடு இணையும்

இதில் விலங்கு - கற்றார், மக்கள் - ஏனையவர் என இருக்கும் வரிசையை மாற்றிப் பொருள் கொள்வதால் இது 'மொழிமாற்று நிரனிறையணி'

**சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய**
**யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப**
**கானக நாடன் சுனை**

கானகநாடன் - குறிஞ்சிநிலத் தலைவன். அவனது மலை மீதுள்ள சுனையில் சுரைக்கூடு மிதக்கும், அம்மி உள்ளே அமிழும். வரை- மலை. மலைபோன்ற யானை நிற்கும்; முயல் நீந்தும். இவ்வாறு மொழிமாற்றிப் பொருள்கொள்ள வேண்டிய நிரனிறையணி இது.

நன்னூலில் இவை 'பொருள்கோள்' வகையில் கூறப்படும்.

## 17. ஆர்வமொழியணி

**68. ஆர்வமொழி மிகுப்பது ஆர்வ மொழியே**

உள்ளத்தின் உள்ளே எழும் ஆர்வம் காரணமாக அதை வெளிப் படுத்தும் சொற்கள் மிகுதிப்படத் தோன்றுவது ஆர்வ மொழியணியாகும்.

**வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்**
**பைதல்நோய் எல்லாம் கெட (குறள். 1266)**

பலநாளும் எதிர்பார்த்த கொண்கன் (கணவன்) என்னிடம் ஒருநாள் வருவானாக; வந்தால் பசலை நோய் முழுவதும் கெட, அவ் இன்ப அமிழ்தத்தை ஐம்பொறியும் ஆரப் பருகுவேனாக.

'வேட்கை மிகுதி நோக்கிப் பருகிக்கொள்வேன்' என்றவாறு காலிங்கர் உரை.

**நீகண் டனையோ, கண்டார்க்கேட் டனையோ**
**ஒன்று தெளிய நசையினம் மொழிமோ!**
**வெண்கோட்டு யானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்!**
**யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே** (குறு. 75)

பலநாள் எதிர்பார்த்த கணவன் வந்துகொண்டிருப்பதாகப் பாணன் சொன்னான். அது கேட்ட தலைவி' நீ கண்ணாற் பார்த்தாயா? யாராவது கண்டவர் சொல்லக் கேட்டாயா? உண்மையை அறிய விரும்பு கிறேன் (நசை - விருப்பம்). யார் சொல்லக் கேட்டனை? அஃது உண்மை யானால், யானை சோணையாற்றில் கிடந்து விளையாடும், பொற் செல்வம் மிகுந்த பாடலிபுத்திரத்தையே பரிசாகப் பெறுவாயாக!

செல்வமிகு நகரையே கொடுப்பதென்பது, ஆர்வ மிகுதியின் வெளிப்பாடு.

## 18. சுவையணி

**69. உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற**
**எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே**

உள்ளத்துள் நிகழும் உணர்வு, உடலின் புறத்தே தோன்ற எட்டுவகை மெய்ப்பாடுகளாக நடப்பது சுவையணி யாகும்.

**70. அவைதாம்**
**வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே**
**காமம் அவலம் உருத்திரம் நகையே**

எட்டுவகை மெய்ப்பாடு அல்லது சுவை: வீரம், அச்சம், இழிவு (இளிவரல்), வியப்பு, காமம் (உவகை இன்பம்), அவலம் (அழுகை), உருத்திரம் (கடுங்கோபம், வெகுளி), நகைச்சுவை என்பன.

**வீரச்சுவை**

**என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ**
**முன்நின்று கல்நின் றவர்** (குறள். 771)

இது ஒரு படைவீரன் கூற்று. தெவ்விர் - பகைவர்களே! என் ஐ முன் நில்லன் மின் - என் தலைவன் முன் வந்து நிற்காதீர்கள்; நின்றால் கல்லாகி விடுவீர்கள். ஏனெனில் முன்பே என்ஐமுன் - தலைவன் முன் நின்று, பட்டு, நடுகல்லாகிப் போனவர்கள் பலராவர். (போர்க் களத்தில் வெட்டுப்பட்டு இறந்தவர்களுக்கு நடுகல் எழுப்புவது அக்கால மரபு.)

**அச்சச் சுவை**

> **கைநெரித்து வெய்துயிர்ப்ப கால்தளர்ந்து மெய்பனிப்ப**
> **மைஅரிக்கண் நீர்ததும்ப வாய்புலர்ந்தாள் - தையல்**
> **சினவேல் விடலையால் கையிழந்த செங்கண்**
> **புனவேழம் மேல்வந்த போது**

சினவேல் விடலை - கோபங்கொண்ட, வில்லேந்திய இளம் வீரன். அவனால் துதிக்கையை இழந்த, செங்கண் யானையானது, தன் மேல் வருவதைப் பார்த்த தையல் அஞ்சிநடுங்கினாள்; கை நெரித் தாள்; வெய்துயிர்த்தாள் (பெரு மூச்சு விட்டாள்); கால் தளர்ந்தாள்; மெய் - உடல் வியர்த்தாள்; மைதீட்டிய கண் நீர் ததும்ப, வாய்புலர்ந்து அஞ் சினாள். இவை அச்சச்சுவை மெய்ப்பாடுகள்.

**இழிப்பு - இளிவரல் சுவை**

> **தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
> **நிலையின் இழிந்தக் கடை (குறள் 964)**

மக்கள் தங்கள் உயர்ந்த நிலையைக் கைவிட்டு, ஒருசிறிதும் கீழிறங்கக் கூடாது. அவ்வாறு கீழிறங்குவரேல், அவர்கள் தலையிலிருந்து விழுந்த தலைமுடிக்கு ஒப்பாவர். தலையிலிருக்கும் வரைதான் மயிருக்குப் பெருமை. இதில் இளிவரற்சுவை - இழிவு படுதல் - உளது.

**வியப்புச்சுவை**

> **ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்**
> **நண்ணாரும் உட்கும்என் பீடு (1088)**

ஞாட்பு - போர், நண்ணார் - பகைவர். போர்க்களத்தில் பகைவர்களும் போற்றும் என் பெருமை, இவளுடைய ஒளி பொருந்திய நெற்றியைக் கண்டதும் உடைந்துபோனதே! இஃது என்ன வியப்பு! - தலைவியின் அழகைக் கண்டு வியந்தது.

> **கச்சி ஒருகால்**
> **மிதியா, ஒருகால்**

**தத்துநீர்த் தண்ணுஞ்சை**
**தான் மிதியா - பிற்றையும்**
**ஈழம் ஒருகால்**
**மிதியா வருமே, தம்**
**கோழியர்கோக் கிள்ளி**
**களிறு**

கோழி - உறையூர். கிள்ளி - சோழமன்னன். கச்சி - காஞ்சிபுரம், ஈழம் - தமிழ் ஈழம். தண் உஞ்சை - தண்மை மிகுந்த உச்சயினி நகரம். சோழனின் போர்யானை காஞ்சிபுரத்தில் ஒருகாலை வைத்து, மறு காலை வடநாட்டு உச்சயினி நகரில் வைத்து, பின்பு தெற்கே திரும்பி ஈழத்தில் ஒருகாலை வைத்து மிதிக்கும். அவ்வளவு வேகமாகச் சுழன்று போர்செய்யும் என்பது வியப்புச் சுவை.

**காமம் என்னும் உவகைச் சுவை**

**பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயிறு ஊறிய நீர் (1121)**

எயிறு - பல்வரிசை. முத்தம் கொடுப்பது இது. அது பாலும் தேனும் கலந்ததுபோல் இன்பம் தருகிறதாம்.

**உறுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள் (1106)**

இவளது தோள் அமிழ்தால் செய்யப்பட்டது போலும்; தழுவுந் தோறும் என் உடல் மட்டுமன்று, உயிரும் தளிர்க்கின்றதே!

இக்குறள்கள் காமச்சுவையின் வெளிப்பாடுகள்.

**புன்னாகச் சோலை**
**புனல்தெங்கு சூழ்மாந்தை**
**நன்னாகம் நின்றுஅலரும்**
**நல்நாடன் - என் ஆகம்**
**கங்குல் ஒருநாள்**
**கனவினுள் தைவந்தான்**
**என்கொல் இவர்அறிந்த**
**வாறு? முத்தொள்ளாயிரம்**

புன்னாகச் சோலை - புன்னைமரச் சோலையுள்ள கடற்கரை. தெங்கு - தென்னைத் தோட்டங்கள். மாந்தை - சேர மன்னனது நகரம். நன் நாகம் - நல்ல சுரபுன்னை மரம். ஆகம் - மார்பு. சேரமன்னனது மார்பை, ஒருநாள் இரவில் கனவிற்கண்டு தழுவியதற்கே உடம்பு பூரித்துவிட்ட

தாம். இதனை இவ்வூரார் எவ்வாறுதான் அறிந்தனரோ? - ஒரு தலைவி தன் காதலை வெளிப்படுத்தும் முறை இது.

**அவலச்சுவை**

**இன்றும் வருவது கொல்லோ? நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு (1048)**

நெருநல் - நேற்று, நிரப்பு - உண்ணவும் வழியிலாத வறுமை. நேற்றே பசியால் வாட்டிக் கொல்ல வந்தது போன்ற, அவ்வறுமை எனும் எமன், இன்றும் வருமோ?

**உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்திழைந்து**
**வேண்டியவர்க் கண்ட கண் (1177)**

இந்தக் கண்தானே அவரை விரும்பி நெகிழ்ந்து பார்த்துப் பார்த்து மகிழ்ந்தது; அப்படி மகிழ்ந்தகண் இப்போது பிரிவால் வருந்தி வருந்தி, அழுது, உள்ளிருக்கும் நீரெல்லாம் அற்றுப் போகட்டும்? இதற்கு இத் தண்டனை வேண்டியதுதான்.

**முடித்தலை வெள்ளோட்டு**
**மூளைநெய் யாகத்**
**தடித்த குடர்திரியா**
**மாட்டி - எடுத்தெடுத்து**
**பேஎய் விளக்கயரும்**
**பெற்றித்தே செம்பியன்**
**சேஎய் பொருத களம்**

செம்பியன் சேஎய் - சோழ மன்னன். அவன் போரிட்டுப் பகைவரைக் கொன்ற களத்தின் அவலத்தை இம் முத்தொள்ளாயிரப் பாடல் புனைகிறது. பகைவீரர்களின் முடித்தலை வெள்ளோடுகளாகிய அகல்களில், அவர்களின் மூளைகளையே நெய்யாக ஊற்றி அவர்களின் தடித்த குடல்களையே திரியாக வைத்து, பேய்கள் விளக்கேற்றி வெற்றியைக் கொண்டாடுகின்றனவாம்.

**உருத்திரம் - வெகுளிச்சுவை**

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என் (420)**

செவிச்சுவையை உணராது, வாயால் உண்பதையே விரும்பும் மாக்கள், இவ்வுலகில் செத்துத் தொலைந்தால் என்ன? அன்றி வாழ்ந்தாலும் பயன் என்ன?

திருவள்ளுவரின் 'குணமென்னும் குன்றேறி நின்றதால்' விளைந்தவெகுளிகளில் இதுவும் ஒன்று.

**வருக குடநாடன்**
**வஞ்சிக் கோ மான் என்று**
**அருகலர் எல்லாம்**
**அறிய - ஒருகலாம்**
**உண்டா யிருக்கஅவ்**
**ஒண்தொடியாள் மற்றவனைக்**
**கண்டாள் ஒழிந்தாள்**
**கலாம் (முத்தொள்ளாயிரம்)**

சேர மன்னனாகிய காதலன், சொன்னபடி வராததால் சீற்றம் கொண்ட தலைவியின் கோபம் பாடலின் முதல் மூன்றடிகளில் கொப்பளிக்கின்றது.

**நகைச்சுவை**

**பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
**பீழை தருவதொன்று இல் (839)**

முட்டாள்களுடன் நட்புக்கொள்வது மிகவும் இனிது; ஏனெனில் பிரியும்போது, இருவர்க்கும் அதனால் மனவருத்தம் என்பதொன்றும் இராது.

பாணன் தலைவனைப் பரத்தையின் வீட்டுக்கு அழைத்துச் சென்றனன். அங்கிருந்து திரும்பியபோது, புதிதாகக் கன்று போட்ட பசு அவனை முட்ட வரவே, தலைவியின் வீட்டினுள் ஓடி ஒளியலானான். இதனைப் பார்த்த தலைவி, 'இது உன் வீடன்று; அதோ உளது உன்வீடு; அங்கே போ' எனச் சிரித்தபடி சொன்னாள். இதனை நகைச்சுவையுடன் தலைவி தோழிக்குச் சொன்ன அகநானூற்றுப் பாடல் இது:

''நகையா கின்றே தோழி! நேற்று, தண்துறை ஊரனாம் தலைவனை, புதியபரத்தையரிடம் சேர்த்துவிட்டு, ஆசையுடன் வந்தான் பாணன். அவனைத் தெருவில் புனிற்றா (அண்மையில் கன்று போட்ட பசு) முட்டப்போனது. உடனே அவன் கலங்கி யாழைக் கீழே போட்டு விட்டு என் வீட்டினுள் ஓடி வந்தான். நான் பொங்கியெழுந்த என் சிரிப்பை அடக்கிக் கொண்டு, அவனெதிர் சென்று 'இது உம் மனையன்று; அதோ அங்குளது உம்மனை, என்று கூறவே, அவன் என்னையும் தன்னையும் மாறிமாறிப் பார்த்து, மயங்கிய நெஞ்சினனாய், என்னைத் தொழுது கொண்டு நின்றான். இதை நினைக்குந் தோறும் சிரிப்பு வருகிறது''.

நகையாகின்றே தோழி நெருநல்
பரிவொடு வருஉம் பாணன் தெருவில்
புனிற்றாப் பாய்ந்தென, கலங்கி, யாழிட்டு,
எம்மனைப் புகுதந்தோனே, அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்று
இம்மனை அன்றுஅஃது உம்மனை என்ற
என்னும் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின்றதுவே (56)

## 19. தன்மேம்பாட்டுரைஅணி

71. தான்தற் புகழ்வது தன்மேம் பாட்டுரை

ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து சொல்வது தன் மேம் பாட்டுரையணி. இது புறத்திணையில் நெடுமொழி, நெடுமொழி வஞ்சி என்று கூறப்படுவதை ஒத்தது.

எஞ்சினார் இல்லை எனக்குஎதிரா; இன்னுயிர்கொண்டு
அஞ்சினார் அஞ்சாது போயகல்க - வெஞ்சமத்துப்
பேராதவர் ஆகத்து அன்றிப் பிறர்முதுகில்
சாரா என் கையிற் சரம்

சரம் - அம்பு. எனக்கு எதிரே வந்து பிழைத்துப் போனவர் யாருமில்லை. அதனால் இன்னுயிர்க்கு அஞ்சுபவர் ஓடிப்போய்விடுக! கொடிய போரில், புறமுதுகுகாட்டாதவர் மார்பில் என் அம்பு பாயுமே தவிர, மற்றவர் முதுகில் அது பாயாது.

இது போர்க்களத்தில் தன் வீரத்தைத் தானே புகழ்ந்து சொன்னது.

## 20. பரியாயவணி

72. கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப்
பிறிதொன்று உரைப்பது பரியா யம்மே

பரியாயம் - ஒருபொருள் தரும் பிறிதொரு சொல். சொல்ல வந்ததை வெளிப்படச் சொல்லாது, அதே பொருள்படும்படியாகப் பிறிதொன்றைச் சொல்வது பரியாய அணி.

தலைவியும் தோழியும் தனித்திருக்கின்றனர். அந் நேரம் தலைவன் வருகின்றான். தோழி தான் தலைவியை விட்டுப் பிரிந்து போனால்தான், தலைவன் தலைவியுடன் அளவளாவிப் பேசிக்

கொண்டிருக்க முடியும். எனவே தோழி 'குவளை, செங்காந்தள் பூக்களைக் கொய்துவரப் போகின்றேன்' என்று, வேறொன்றைச் சொல்லி, தான் கருதியதைத் தலைவிக்கு உணர்த்திவிடுகிறாள்.

**மின்னிகராம் மாதே! விரைச்சாந்துடன் புணர்ந்து**
**நின்நிகராம் மாதவிக்கண் நின்றருள்நீ - தன்னிகராம்**
**செந்தீ வர, மலரும் செங்காந்தட் போதுடனே**
**இந்தீ வரங்கொணர்வல் யான்**

மின்னல் போலும் தலைவியே! மணம் பொருந்திய சந்தன மரத்தைத் தழுவி உன்போல் நிற்கின்ற இக் குருக்கத்திக் கொடியின் அடியில் நிற்பாயாக! தன்னை ஒத்த சிவந்த தீயைப் போல மலரும் செங் காந்தட் பூக்களுடனே குவளை மலர்களையும் கொய்து கொண்டு யான் பிறகு வருகின்றேன். விரை - மணம். சாந்து - சந்தனமரம். மாதவி-குருக்கத்திக் கொடி. தீ வர மலரும் - தீயைப் போல மலரும். இந்தீவரம் - குவளைமலர்.

கருதியதைச் சொல்லாமல், வேறொன்றைச் சொல்லி, தான் நினைத்ததை உணர்த்திய திறம் காண்க. இது குறுந்தொகை முதற் பாடலை ஒத்துளது. வடமொழிக்கும் தமிழ்தந்த வரம் இது.

**செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த**
**செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்**
**கழல்தொடிச் சேஎய் குன்றம்**
**குருதிப் பூவின் குலைக்காந் தட்டே** (குறு. 1)

அவுணர்களைப் போர்க் களத்தில் கொன்று, சிவந்த அம்புடனும் செங்கோட்டு யானையுடனும் வரும் கழல் அணிந்த முருகனின் குன்றத்தின் உச்சியில், குருதிச் சிவப்புடன் பூக்கும் செங் காந்தட் பூக்கள் குலைகுலையாக உள்ளன.

அவற்றைக் கொய்துவரப் போகிறேன் என்று கூறித் தோழி தலைவியைத் தனியே விடுத்து நீங்குகிறாள். தலைவன் அங்கு வந்த தால், இவ்வாறு கூறி, அவர்களைத் தனியே விடுத்துத் தோழி செல்கிறாள். 'தோழி தலைவியை இடத்துய்த்து நீங்குதல்' என்னும் துறையே இவ் அணியாயிற்று.

## 21. சமாகிதவணி

73. **முந்துதான் முயல்வுறூஉம் தொழிற்பயன், பிறிதொன்று**
**தந்ததா முடிப்பது சமாகித மாகும்**

முன்பு தான் முயன்ற ஒரு செயலினது பயன், அதனால் முடிவுறாது, அது பிறிதொன்றால் நிறைவேறியதாகக் கூறி முடிப்பது சமாகித அணியாகும்.

சமாகிதம் - துணைப்பேறு என்பார் கொ. இராமலிங்கத் தம்பிரான்.

சிவபெருமான் உமாதேவியாரின் ஊடலைத் தவிர்க்க முயன்றார். ஆனால் ஊடல் தவிர்க்க இயலவில்லை. அந் நேரம் இராவணன், கயிலைமலையைத் தூக்க முயலவே, அது அசைந்தது. அதனால் அஞ்சிய மலையரசன் மகளாகிய உமை, இறைவரிடத்து ஊடலைத் தவிர்த்து, அவரை ஆரத் தழுவிக்கொண்டாள்.

**அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப**
**வெருவிய வெற்பரையன் பாவை - பெருமான்**
**அணியாகம் ஆரத் தழுவினாள் தான்முன்**
**தணியாத ஊடல் தவிர்ந்து.**

அரக்கன் - இராவணன். வெற்பரையன் - இமயமலையின் அரசன்; உமையின் தந்தை. இப்பாடல் போன்ற சிலவே, இவ்வணிக்குப் பொருந்தும். இது போல் வருவன மிகமிகக் குறைவு. அதனால்தான் தமிழ்நூல் உடையார், ஒவ்வொரு பாடலின் அழகும் தனித்தன்மையுடைய தென்றனர். உவமை போலும் சில தவிர, அணிகள் எல்லையற்றன என்றனர்.

## 22. உதாத்தவணி

**74. வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்**
**உயர்ச்சிபுனைந்து உரைப்பது உதாத்த மாகும்**

உதாத்தம் - பிறிதொன்றற்கு இல்லாத பெருஞ்சிறப்பு. தமிழில் இதை 'வீறு' என்பர். வியக்கத் தக்க செல்வத்தின் உயர்ச்சியையும் பிறரினும் மேம்பட்ட உள்ளத்தினது உயர்ச்சியையும் கற்பித்துப் பாடுவது உதாத்தம் என்னும் அணியாகும். இதை வீறுகோளணி என்றும் கூறுவர்.

**செல்வமிகுதி கோசல நாட்டுச் செல்வச்சிறப்பு**

**முட்டுஇல் அட்டில் முழங்குற வாக்கிய**
**நெட்டுலைக் கழுநீர்நெடு நீத்தம்தான்**
**பட்டமென் கமுகு ஓங்கு படப்பைபோய்**
**நட்டசெந் நெலின் நாறு வளர்க்குமே.**

முட்டு இல் அட்டில் - முட்டுப்பாடே இல்லாத சமையற் கட்டு. அங்கு நெட்டுஉலைக் கழுநீர் - இடையறாது நீளும் சோறு வடித்த கழுநீர்த் தண்ணீர், கமுக மரங்கள் வளர்ந்திருக்கும் தோட்ட வழியே பாய்ந்து, நடப்பட்ட செந்நெற்பயிரின் நாற்றுக்களை வளர்க்கும்.

இவ்வாறு சோற்றுலை வைத்து, அத் தண்ணீரே பாய்ந்து பயிர் வளருமென்றால், அந்த நாட்டின் செல்வ வளம் மிகச்சிறந்தது என்பது பெறப்படுகிறதல்லவா?

**உள்ளமிகுதி வீரச்சிறப்பு, ஊக்கமுடைமை**

**கையது வேலே, காலன புனைகழல்**
**மெய்யது வியரே, மிடற்றது பசும்புண் ...**
**வரிவயம் பொருத வயக்களிறு போல**
**இன்னும் மாறாது சினனே, அன்னோ**
**உய்ந்தன ரல்லர்இவன் உடற்றி யோரே**
**செறுவர் நோக்கிய கண்தன்**
**சிறுவனை நோக்கியும் சிவப்பா னாவே (புறம். 100)**

அதியமான் நெடுமானஞ்சிக்கு மகன் பிறந்த செய்தி கேட்டதும் அவன் போர்க்களத்திலிருந்தபடியே வந்து, தன் தவ மகனைக் கண்ட காட்சியை, ஔவையார் இவ்வாறு பாடுகிறார். கையில் வேல், காலன வீரக் கழல், உடம்பில் வியர்வை, கழுத்தில் புண் (மிடறு - கழுத்து.) வரிவயம் - புலி. களிறு - ஆண்யானை. செறுவர்- பகைவர். பகைவரைப் பார்த்துப் பார்த்துச் சிவந்தகண், தன் மகனைப் பார்த்தபோதும் மாறவில்லையாம். இஃது அதியனது ஊக்கமிகுதியைப் புனைகிறது.

## 23. அவநுதியணி

**75. சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை**
**மறுத்துப் பிறிதுரைப்பது அவநுதி யாகும்**

சிறப்பு, பொருள், குணம் ஆகிய மூன்றினால் உண்டாகும் சிறப்பாகிய உண்மையை மறுத்து, பிறிதொன்றாக உரைப்பது அவ நுதியணியாகும். ஒன்றன் சிறப்பையே மறுத்துக் கூறி, ஆனால் அதன் வழி அதனுடைய சிறப்பை உணரவைப்பதே அவநுதியணியாகும். அவநுதி - மறுத்துரைத்தல் இங்கு மறுப்பது போன்ற மொழிநடை.

**அறைபறை யானை அலங்குதார்க் கிள்ளி**
**முறைசெயும் என்பரால் தோழி - இறையிறந்த**

**அங்கோல் அணிவளையே சொல்லாதோ மற்று அவன்**
**செங்கோன்மை செந்நின்ற வாறு**
**(முத்தொள்ளாயிரம்)**

கிள்ளி - சோழமன்னன். இறை இறந்த - கை மணிக்கட்டு மெலிவால், அதிலிருந்த வளைகள் உதிர்தல். செங்கோன்மை செல் நின்ற வாறு - கோல் நடக்கும் விதம். வளையை நெகிழ்விப்பவன் எங்ஙனம் செங்கோலனாவான் என மறுப்பதன் மூலம், அவனது சிறப்பே உணர்த்தப்பட்டது. இது **சிறப்பு அவநுதி**.

சிவபெருமான் ஒருவனே என்னும் தன்மையை மறுத்து, நிலமாய், ஆகாயமாய், நீராய், தீயாய், காற்றாய் சூரியனாய், மதியாய் இவ்வாறு பலவாய் இருப்பதாகப் பாடுவதைப் **பொருளவநுதி** என்பர்.

**தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி இளவளவன்**
**மண்ணகம் காவலனே என்பரால் - மண்ணகம்**
**காவலனே ஆனக்கால் காவானோ? மாலைவாய்க்**
**கோவலர்வாய் வைத்த குழல்**

சோழ இளவரசன் உலகத்தைக் காக்கும் நற்பண்புடையவன் என்பர். ஆனால் இடையர்கள் ஊதும் இனிய குழலோசை என்னை வாட்டு வதை, அவன் தடுத்துக் காக்கவில்லையே? பிறகு எவ்வாறு காவலனா வான்? - இதில் பண்பை மறுப்பதுபோல் சிறப்பிப்பதால் இது **குணவவநுதி**.

மேலும் சிலேடை பற்றிய அவநுதி எனவும் ஒன்று காட்டுவர். சோழனை 'வஞ்சியானல்லன்' எனப் பாட்டில் வைத்துப் புனைவர். வஞ்சிக்குரிய சேரனல்லன்; வஞ்சிக்க மாட்டான் என்பன சிலேடை. வஞ்சியான் காதலியைப் பிரிந்து வஞ்சிக்கின்றான் என்பதால், சிலேடை சார்ந்து அவநுதியணியாயிற்று.

## 24. சிலேடையணி

**76. ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி**
**தெரிவுதர வருவது சிலேடை யாகும்**

ஒரு வகையிலான சொற்றொடர் ஒன்று, பல பொருள் தரும் தன்மையுடையதாய், அறியும்படி வருவது சிலேடையணியாகும். இதைத் தமிழில் 'இரட்டுற மொழிதல்' என்பர்.

**77. அதுவே**
**செம்மொழி பிரிமொழி எனஇரு திறப்படும்**

அச்சிலேடையணி செம்மொழிச் சிலேடையும் பிரிமொழிச் சிலேடையும் என இருவகைப்படும்.

சுருக்கமாகச் சொன்னால் 'வஞ்சியான்' என்பது செம்மொழிச் சிலேடை. வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்ட சேரன்; வஞ்சிக்க மாட்டான். சொல்லைப் பிரிக்காமலே இரு பொருள் தருவதால் இது செம்மொழிச் சிலேடை.

'இரு கரும்புருவமாக' - இரு கரும் புருவமாக எனப் பிரித்தால் ஒரு பொருள்; இரு கரும்பு உருவமாக எனப் பிரித்தால் ஒரு பொருள். சொற்களைப் பிரித்து, இரு பொருள் கொள்வதால், இது பிரிமொழிச் சிலேடை.

காளமேகப் புலவர் பாடிய சிலேடைப் பாடல்களில் ஒன்றைக் காண்போம். இது 'தனிப்பாடல் திரட்டில்' காணப்படுவது. செம்மொழிச் சிலேடைக்குச் சிறந்த எடுத்துக் காட்டு இது. வைக் கோலுக்கும் யானைக்கும் சிலேடை:

**வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்**
**போரிற் சிறந்து பொலிவாகும் - சீருற்ற**
**செக்கோல மேனித் திருமலைராயன் மலையில்**
**வைக்கோலும் மால்யானை யாம்.**

சிறப்புள்ள, சிவந்த மேனியையுடைய திருமலைராயன் மலையில் வைக்கோலும் யானையாகும். சிலேடை வருமாறு. வாரிக் களத்து அடிக்கும் - வைக்கோல் வயலிலிருந்து வாரிக் கொண்டு வரப் பட்டுக் களத்தில் அடிக்கப்படும்; யானை பகைவர்களை நிலத்தில் வீழ்த்திக் கொல்லும். வந்து பின்பு கோட்டை புகும் - பின்பு வைக்கோல் புரியாகத் திரிக்கப் பட்டு, நெற்கோட்டையைச் சூழ்ந்திருக்கும்; யானை போர் முடிந்ததும் அரசனின் கோட்டைக்குள் புகும். போரில் சிறந்து பொலிவாகும் - வைக்கோல் போராகக் குவிக்கப்பட்டு அழகாக இருக்கும்; யானைப் படை போர்செய்வதில் பொலிவுடைய பெரிய படையாக விளங்கும்.

நமசிவாயப் புலவர் பாடிய தனிப்பாடல் ஒன்று, பிரிமொழிச் சிலேடைக்குத் தகுந்த உதாரணமாகும். முருகனைப் பாடிய பாடல் அது.

**பங்கயமும் ஏரிகளும் பாவையர்கையும் மணியும்**
**தங்கவளை சூழும் தணிகையே - திங்கள் நுதல்**

செந்திலகத் தாள்புனிதன் செல்வன் கடற்கரைசேர்
செந்திலகத் தாள்புனிதன் சேர்பு

பங்கயம் - தாமரை. ஏரி, மகளிர் கைகள், மணிகள் எல்லாம் தங்கவளை சூழ்வது தணிகை மலை. பொன்னும் பொன்னிறமும் பெறு மாறு வளமுடையது அம்மலை. அது முருகன் உறையுமிடம். திங்கள் போலும் நுதலை (நெற்றியை) யுடைய செந் + திலகத்தாள் - சிவந்த பொட்டினை அணிந்த உமை. அவள் பெற்ற புனிதன், செல்வன். அவன் கடற்கரை சேர்ந்த செந்தில் + அகத்து + ஆள் = திருச்செந்திலில் (திருச்செந்தூரில்) சேர்ந்திருக்கும் முருகன். இதில் 'செந்திலகத்தாள்' என்பது செம் + திலகத்தாள் எனவும் செந்தில் + அகத்து + ஆள் எனவும் பிரித்துப் பொருள் கொள்ளப்படுவது பிரி மொழிச் சிலேடை.

## சிலேடையணி

## வகைகள்

78. ஒருவினை பலவினை முரண்வினை நியமம்
நியம விலக்கு விரோதம் அவிரோதம்
எனஎழு வகையினும் இயலும் என்ப

அச் சிலேடையணி ஒரு வினைச் சிலேடை, பலவினைச் சிலேடை, முரண்வினைச் சிலேடை, நியமச் சிலேடை, நியம விலக்குச் சிலேடை, விரோதச் சிலேடை, அவிரோதச் சிலேடை என்னும் ஏழு வகையாக அமையும் என்று புலவோர் கூறுவர்.

1. **ஒருவினைச் சிலேடை** - வினாயகருக்கும் மலைக்கும் சிலேடை அமைத்துப் பாடி, இரண்டும் 'தவம் புரிவார்க்கு இன்பம் தரும்' என ஒரு வினையால் முடிவது இது.

2. **பலவினைச் சிலேடை** - இரு பொருளுக்கிடையே சிலேடை அமைத்து, இடையிடையே பல வினைச்சொற்கள் வரப் பாடுவது.

3. **முரண்வினைச் சிலேடை** - காதலர்கள் பிரிந்தார் வருந்தவும் புணர்ந்தார் மகிழவும், மாலைப் பொழுதில் கடல் அலைகள் ஒலி அடங்காது ஆர்க்கும்; சோலைகளில் பறவைகள் ஒலி அடங்கும். இவ் வாறு சிலேடையமைத்துப் பாடுவது இது.

4. **நியமச் சிலேடை** - பல பொருளுக்குப் பொருந்துமாறு சிலேடை கூறி, பின்பு தேற்றேகாரம் சேர்த்து, ஒன்றற்கு நியம மாக்குவது இது. 'வெண்ணீர்மை தாங்குவன முத்தே' - முத்துக்களே

வெண்ணிறமுடையன. வெண்ணீர்மை - அறிவின்மையுமாகும். அந்நாட்டில் அறியாமை இல்லை என உணர்த்துகிறது. 'கண்ணீர்மை சோர்வ கடி பொழிலே' - பொழில்களே கள் நீர்மை - மது மகரந்தத் துளிகள். பிறர் கண்ணீர் சொரியார் என்பது கருத்து.

5. **நியம விலக்குச் சிலேடை** - சிலேடை கூறி, நியமித்ததைப் பின்பு விலக்குவது இது. 'சிறை படுவ புட்குலமே' - பறவைகளே சிறை (சிறகு) உடையன; பிறர் சிறை படார் என்பதாம். 'கொடியன குன்றத்தின் மாளிகையே அன்றிக் கடிஅவிழ்பூங் காவும் உள' - மாளிகைகள் கொடியையுடையன; அல்லாமல் கொடியையுடைய பூங்காவும் உள'- இது நியமித்ததற்கு மாற்றாகச் சொல்லும் நியம விலக்கு.

6. **விரோதச் சிலேடை** - சிலேடையை முரண்படுமாறு சொல்வது. 'சோழன் திருமாலே என்றாலும் திருமால் மாயன் எனப் படுவான் (மாயன் - கருநிறத்தவன்); சோழனோ மாயம் எதுவும் இல்லா தவன் (மாயம் - குற்றங்குறை).

7. **அவிரோதச் சிலேடை** - முன்பு சிலேடை கூறியதை, பின்பு முரண்படாமல் சொல்வது. விரோதத்திற்கு எதிரானது அவிரோதம்.

**சோதி இரவின் கரத்தால் இரவு ஒழிக்கும்;**
**மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும் - மீதாம்**
**அனகமதி தோற்றிக் குமுதம் அளிக்கும்**
**தனதன் இருநிதிக்கோன் தான்**

இது முரண்படாது சூரியனுக்கும் சோழனுக்கும் சிலேடை புனைவது. சோதி இரவி கரத்தால் இரவு ஒழிக்கும் - சூரியன் கதிர்க்கையால் இருட்டை ஒழிக்கும்; இரவிகுலச் சோழன் (சூரியகுலம்) தன் கையால் பிறர் வறுமையை ஒழிப்பான். மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும் - மாதை இடப் பாகத்தேயுடைய சிவன் காமனை எரித்தழிப்பான்; சோழன் மா + திடத்தான் = மிக்க வலிமையையுடையவன். எனவே பகைமன்னர்களை அழிப்பான். மீதாம் அனக மதி தோற்றி குமுதம் அளிக்கும் - வானின் மேல், குற்றமற்ற மதி தோன்றி குமுதமலர்களை விரியச் செய்யும்; சோழன் மேலான குற்ற மற்ற அறிவு தோன்றப் பெற்று உலக மக்களுக்கு மகிழ்ச்சி தருவான். தனதன் இருநிதிக் கோன் தான் - குபேரன் தன தன் என்னும் பெயருடையனாய், பெருஞ்செல்வத்திற்குத்

தலைவனாவான்; சோழன் பிறருக்குச் செல்வத்தைக் கொடுத்து முதல்வனெனப் பாராட்டப் படுவான். (இரவு - இருள், யாசித்தல்) அனகம் - குற்றம் அற்ற. கு - பூமி. முதம்- மகிழ்ச்சி. தனதன் - குபேரன், செல்வச் சோழன்.)

## 25. விசேடவணி

79. **குணம்தொழில் முதலிய குறைபடு தன்மயின்**
**மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம்**

குணம் தொழில் சாதி பொருள் உறுப்பு முதலாயின குறை படும் தன்மையினாலேயே, அவற்றின் மேம்பாடு தோற்ற உரைப்பது விசேடவணியாகும்

1. **குணக்குறை விசேடம்** - குணத்தில் குறை கூறிக் காரியத்தில் உயர்வுதோன்றக் கூறுவது இது.

**கோட்டம் திருப்புருவம் கொள்ளா அவர்செங்கோல்**
**கோட்டம் புரிந்த, கொடைச்சென்னி - நாட்டம்**
**சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்**
**சிவந்தன செந்தீத் தெற**

கொடைக்குணமுள்ள சோழனது அழகிய புருவங்கள் வளையவில்லை; அதற்குள்ளாகவே பகைவர்களது செங் கோலாட்சிகள் வளைந்துபோயின. அவனது கண்கள் சிவக்கவில்லை; அதற்குள்ளாகவே திருந்தாத பகைவர்களது கலிங்கதேசம் செந்தீயால் அழிவுற்றுச் சிவந்து போயின.

2. **தொழிற்குறை விசேடம்** - காவிரி நாடனது யானைகள் கால்கள் எல்லாம் வீரக் கழல்களைப் பூண்டன; உடனே பகையரசா் கால்கள் எல்லாம் விலங்குகள் பூண்டன.

3. **சாதிக்குறை விசேடம்** - இடையர் குலக் கண்ணன் போர் மேற் கொண்டதும் இந்திரனும் வானோரும் தோற்றனர். இடையராயினும் வானோரை வென்றனரென்பது இது.

4. **பொருட்குறை விசேடம்** - காஞ்சிப்பதியில், உமையம்மை தன் கணவனிடத்தே இரு நாழி நெல் பெற்று, அதனாலேயே முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து, உலக உயிர்களுக் கெல்லாம் உணவூட்டிக் காத்தாள். இருநாழி நெல் பொருள். அக் குறைந்த பொருளால் நிறைந்த அறம் செய்தது விசேடம்.

5. **உறுப்புக் குறை விசேடம்** - இது உறுப்பு முதலிய கருவிகளிற் குறை கூறி, காரியத்தில் உயர்வு தோன்றச் சொல்வது.

**யானை இரதம் பரிஆள் இவையில்லை,**
**தானும் அனங்கன், தனுக் கரும்பு - தேனார்**
**மலரைந் தினால்வென்று அடிப்படுத்தான் மாரன்**
**உலகங்கள் மூன்றும் ஒருங்கு**

காமனிடம் நால்வகைப் படைகள் இல்லை; அவனும் அனங்கன் (உடம்பில்லாதவன், அங்கமற்றவன் அனங்கன்); தனு - வில். அதுவும் கரும்பு. ஐந்து வகை மலர்களே அம்புகள். இதை வைத்து மூன்றுலகங்களையும் அவன் அடிப்படுத்தினன்.

## 26. ஒப்புமைக் கூட்டவணி

**80. கருதிய குணத்தின் மிகுபொருள் உடன்வைத்து**
**ஒருபொருள் உரைப்பது ஒப்புமைக் கூட்டம்**

ஒப்புமைக் கூட்டம் - சமமான தன்மையுடையவற்றை ஒரு சேர வைத்துக் கூறுதல்.

தான் கருதிய குணத்தினால் மிக்க பொருள்களை ஒருங்குடன் வைத்து, ஒரு பொருளைச் சிறப்பித்துரைப்பது ஒப்புமைக் கூட்டவணி.

**81. புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே**

அவ் ஒப்புமைக் கூட்டவணி ஒரு பொருளைப் புகழ்தற் கண்ணும் பழித்தற்கண்ணும் தோன்றி விளக்கும்.

1. **புகழொப்புமைக் கூட்டம்** - உமையின் தனங்கள் அழுந்து தலால், குழையக் கொடுத்த பெருமானாம் ஏகாம்பர நாதரும் நந்தா விளக்கும் கொடைக்குணம் மிக்க சான்றோர்களும் காஞ்சி நகரில் இருக்கின்ற காரணத்தால், இவ்வுலகம் நிலை பெற்றிருக்கிறது. சான்றோரைப் புகழ்வதுஇது.

2. **பழிப் பொப்புமைக் கூட்டம்**

**கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்**
**உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்**
**இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்**
**வல்லே மழைஅருக்கும் கோள்**

மக்களிடம் வாங்கும் வரிக்கு ஆசைப்பட்டுக் குடிகளை வருத்தும் அரசனும் நீதிமன்றத்தில் உண்மையைச் சொல்லாது

ஏமாற்றுவதற்காக வஞ்சகம் பேசுபவர்களும் திருமணமாகி வீட்டிலிருந்தும் எல்லை கடந்து ஒழுக்கம் தவறி நடப்பவளும் விரைந்து மழைபெய்யாது சுருக்கும் கோள்களாவர். இது 'எல்லை கடக்கும்' கற்புத் தவறியவளைப் பழித்தற்கு வந்தது.

## 27. விரோதவணி

82. **மாறுபடு சொல், பொருள் மாறுபாட்டு இயற்கை**
**விளைவுதர உரைப்பது விரோத மாகும்**

ஒன்றற்கொன்று மாறுபட்ட சொல்லும், பொருளும், தம் மாறுபடும் தன்மையை வெளிப்படுத்துமாறு உரைப்பது விரோதவணி.

இதனை 'முரண்தொடையில்' சேர்ப்பர் தமிழ் நூலார்.

**சொல் விரோதம்** - சொற்கள் மாறுபடத் தொடுப்பது இது. காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால் மேலை வினை எல்லாம் கீழவாம .....' - காலை மாலை, கைகால், மேலை கீழ் என வந்தன சொல்விரோதம்.

**பொருள்விரோதம்** - 'கார் காலத்தில் சோலை பயிலும் குயில்கள் குரலடங்கின; ஆடும் மயில்கள் ஆர்த்தெழுந்தன. முகில் கருத்தது; பட்டுப் பூச்சி சிவந்த்து; பிரிந்த மகளிர் மேனி வெளுத்தது. முன்னதில் பொருள் மாறுபட்டன; பின்னதில் கருப்பு சிவப்பு வெளுப்பு எனச் சொற்கள் வேறுபட்டன.

இவ் விரோதவணி சிலேடையணி முதலிய பிற அணிகளுடன் சேர்ந்தும் வரும்.

## 28. மாறுபடு புகழ்நிலையணி

83. **கருதிய பொருள்தொகுத்து ஆங்கது பழித்தற்கு**
**வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை**

கவிஞன் தான் சொல்லவந்த பொருளை மறைத்து, அதனைப் பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலையணி. புள்ளி மான் கூட்டம் பிறரிடம் இரந்து கேட்டு அறியா; யார் பின்னும் செல்லா; செல்லா; நிழல் நீர் புல் இவற்றைத் தாமே தேடிக் கொள்ளுமேயன்றிப்

பிறரிடம் கேட்டு அவர்கள் தரப் பெற்றுக் கொள்ளா; எனவே இவை இவ்வுலகில் துன்பமிலவாயின.

மான்களைப் புகழ்வதுபோல், முயற்சியில்லா இரவலரைப் பழிப்பது இது.

**இரவறியா, யாவரையும் பின்செல்லா, நல்ல**
**தருநிழலும் தண்ணீரும் புல்லும் - ஒருவர்**
**படைத்தனவும் கொள்ளாஇப் புள்ளிமான் பார்மேல்**
**துடைத்தனவே அன்றோ துயர்**

## 29. புகழாப் புகழ்ச்சியணி

**84. பழிப்பதுபோலும் பான்மையின் மேன்மை**
**புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி**

ஒன்றைப் பழிப்பதுபோலும் தன்மையினால், அதன் மேன்மை புலப்படப் புனைவது புகழாப் புகழ்ச்சியணி.

திருமால் தன் ஓரடிக்கீழ் அடக்கிய உலகைத்தான், சோழன் மிகச் சிரமப் பட்டுக் காக்கின்றான் எனப் புனைவது, அச் சோழன் உலகையே காப்பதாகப் புகழ்தலாகும்.

**போர்வேலின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்**
**தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம் - நீர்நாடன்**
**தேரடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம் செங்கண்மால்**
**ஓரடிக்கீழ் வைத்த உலகு**

சோழன் போர் வேலால் வென்றதும் பல புகழால் காத்ததும் மாலையணிந்த திண்தோளால் காத்ததும் சக்கர ஆயுதத்தால் காப் பாற்றியதும், செங்கண் திருமால் தன் ஓரடிக்கீழ் மிக எளிதாக வைத்த இவ் வுலகையே ஆகும். (தார் - மாலை. நீர்நாடன் - சோழன். தேர் அடி - சக்கரம். கூர் வெம்படை - கூரிய ஆயுதம்) இது சோழனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தது.

**பாரி பாரி என்றுபல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே (புறம். 107)**

கபிலர் பாரியைப் பழிப்பதுபோல் புகழ்வது இது. 'உலகு புரப்பது பாரி மட்டுமா? மாரியும் (மழையும்) என ஒன்று இல்லையா?

செவ்விய நாவையுடைய புலவர்கள் இந்தப் பாரியை மட்டும் புகழ்கின்றனரே, ஏன்?'

**இலேசவணியின் வகையாக வருவன:** (நூற்பா எண் 66)

1. புகழ்வது போலப் பழித்தல் - ஒன்றனையே புகழ்வதுபோலப் பழிப்பது. எதைப் புகழ்கிறோமோ அதற்கே பழிப்புத் தோன்றப் புனைவது.

2. பழிப்பது போலப் புகழ்வது - எதனைப் பழிக்கின்றோமோ, அதற்கே புகழாகத் தோன்றுவது. இவை இலேசவணியின் உள் வகையாக வருவன.

மாறுபடு புகழ்நிலை - ஒன்றைப் புகழ, வேறு ஒன்றனுக்குப் பழிப்பாய்த் தோன்றுவது.

புகழாப் புகழ்ச்சி - ஒன்றைப் பழிப்பதுபோலத் தோன்றும். ஆனால் அது புகழ்வதற்கேயாம்.

இவற்றில் பழிப்பது போலப் புகழ்தலும், புகழாப் புகழ்ச்சியும் ஒன்று போல் தோன்றுகின்றன. புகழாப் புகழ்ச்சியில் பழிப்பது ஆகாமல், ஓரளவு சமத்துவத் தன்மை புலப்படவே புனையப்படும். இவை நுட்பமான வேறுபாடுடையன.

## 30. நிதரிசனவணி

**85. ஒருவகை நிகழ்வதற்கு ஒத்தபயன் பிறிதிற்கு**
**புகழ்மை தீமை என்றிவை புலப்பட**
**நிகழ்வ தாயின் நிதரிசனம் அதுவே**

நிதரிசனம் - நேரில் காணும் காட்சி. ஒரு காட்சி ஒரு வகையில் நேரில் நிகழ்கிறது. அதற்கு ஒத்ததொரு பயன் பிறிதொன்றன்பாலும் நிகழ்வதாகப் பாடுவது இது. இது புகழ்தோன்றப் பாடுவதும் தீமை தோன்றப் பாடுவதும் என இரண்டு வகைப்படும்.

1. **புகழ்மை தோன்றப் பாடும் நிதரிசனவணி**

**பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்**
**சிறியோர் பொறாத திறமும் - அறிவுறீஇச்**
**செங்கமலம் மெய்ம்மலர்ந்த தேங்குமுதம் மெய்யயர்ந்த**
**பொங்கொளியோன் வீறுஎய்தும் போது**

பிறர்தம் செல்வங்கண்டால் பெரியோர் மகிழ்வர்; சிறியோர் பொறாமை கொள்வர். பொங்கும் ஒளியுடைய சூரியன் விளங்கித் தோன்றும் போது செந்தாமரைப் பூக்கள் உடல் நெகிழ்ந்து மலர்ந்தன; இனிய குமுதமலர்கள் உடல் வாடிக் குவிந்தன. அறிவுறீஇ - அறிவுறுத்தி, நிதரிசனமாகக் கண்ணெதிரே காட்டி. கமலம் - தாமரை. குமுதம் - அல்லி மலர். வீறு எய்தல் - ஒளி விளங்கித் தோன்றுதல். இதை நற் பொருட்காட்சி என்பர்.

2. **தீமை தோன்றப் பாடும் நிதரிசனவணி**

**பெரியோ ருழையும் பிழைசிறி துண்டாயின்**
**இருநிலத்துள் யாரும் அறிதல் - தெரிவிக்கும்**
**தேக்குங் கடலுலகில் யாவர்க்கும் தெள்ளமுதம்**
**வாக்கும் மதிமேல் மறு.**

தெள்ளமுதம் - அமிழ்தமனைய நிலவு. வாக்கும் - சொரியும். உலகில் நிலவைச் சொரியும் மதியிலுள்ள மறு உலகெலாம் தெரிதல் போல், பெரியோரிடத்துச் சிறுபிழையும் உலகோர் அனைவராலும் அறியப்படும். இது தீப்பொருட்காட்சி. கண்ணாற் காண்பதைக் காட்டி, ஓர் உண்மையைச் சொல்லும் இது உவமையணியுடனும் ஒத்துளது. இதனைக் காட்சியணி எனவும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

## 31. புணர்நிலையணி

86. **வினைபண்பு எனஇவை இருபொருட்கு ஒன்றே**
**புணர மொழிவது புணர்நிலை யாகும்**

தொழில் எனப்படும் வினை, பண்பு எனும் இவை இரண்டு பொருளுக்கும் ஏதேனும் முடிவு ஒன்றுமட்டும் பொருந்தச் சொல்வது புணர் நிலையணி. புணர்நிலை - ஒன்று கலத்தல்.

கணவரைத் தேடிக் காத்திருக்கும் காதலியர் கண்கள், கருத்துப் பரந்த முகிலுடனே நீரைப் பொழிந்தன. இதில் இரண்டும் சேர்த்து முடிக்கப் பெற்றமை காண்க.

**வேண்டுருவம் கொண்டு கருகி வெளிபரந்து**
**நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த - ஆண்தகையோர்**
**மேவல் விரும்பும் பெருநசையால் மெல்லாவி**
**காவல் புரிந்திருந்தோர் கண்**

ஆண்தகையோர் - ஆண்மை மிக்க தலைவர். நசை - விருப்பம். ஆவி - உயிர். இது **வினைப்புணர்நிலை.**

இனிப் பண்புப் புணர்நிலை வருமாறு:

காதலியர் காத்திருந்து தேய்ந்த உயிரானது, பறவைகள் கூடுகளில் ஒடுங்கும் புன்மாலைப் பொழுதுடனே சேர்ந்து, பிரிவுத் துன்பம் நீள்வதாயிற்று. இது துன்பம் பற்றியதாதலின் 'பண்புப் புணர் நிலை' எனப்பட்டது.

**பூங்காவில் புள்ஒடுங்கும் புன்மாலைப் போழ்துடனே**
**நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் -தாம் காதல்**
**வைக்கும் துணைவர் வருமவதி பார்த்து ஆவி**
**உய்க்கும் தமியார் உயிர்**

இது உடனிகழ்ச்சிப் பொருளுடைய, மூன்றாம் வேற்றுமைப் பொருள்பட வருதல் வேண்டுமென்பர், பழைய உரையாசிரியர். புள்- பறவை. வரும் அவதி - வரும் சமயம்.

## 32. பரிவருத்தனை அணி

87. **பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே**

பொருள்கள் ஒன்றனை ஒன்றனுக்குக் கொடுத்து, அதற்கு மாற்றாக ஒன்றைக் கொண்டனவென்று பாடுதல் பரிவருத்தனை அணியாகும்.

சிவனது தலைமீதுள்ள மதி, கங்கை இரண்டும் அவற்றின் அருகேயிருக்கும் பாம்பின் படங்களிலுள்ள மணிகளில் தத்தம் உருவத்தைக் கொடுத்து, ஆயிரமாயிரமான உருவங்களைப் பெற்றன.

**காமனை வென்றோன் சடைமதியும் கங்கையும்**
**தாம நிழலொன்று தாம் கொடுத்து - நாமப்**
**பருவாள் அரவின் பணமணிகள் தோறும்**
**உருவா யிரம்பெற் றுள.**

காமனை வென்றவன்- சிவன். தாம - தம்முடைய. நிழல் - உருவம். நாமம் - அச்சம் தரும். பருவாள் - மிக்கஒளி. அரவு - பாம்பு. பணம் - பாம்பின் படம்.

## 33. வாழ்த்தணி

**88. இன்னார்க்கு இன்னது இயைக என்றுதாம்**
**முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப**

இன்னார்க்கு இன்ன தன்மையது அமைக என்று, கவிஞர்கள் தாம் கருதியதைச் சொல்லி வாழ்த்துவது வாழ்த்தணி என்பர்.

அதியமான் நெடுமான் அஞ்சி, சாவா மருந்தெனக் கூறப் பட்ட நெல்லிக்கனி ஒன்று, மலைப் பாங்கரில் கிடைத்தபோது அதைத் தான் உண்ணாது, அரண்மனைக்குக் கொண்டு வந்தான். ஔவைப் பாட்டியை அழைத்தான். அதைத் தான் உண்ணாது, அதன் அருமை யையும் கூறாது, ஔவைக்குக் கொடுத்தான். தான் நீண்ட நாள் வாழ் வதனிலும் ஔவை வாழ்வதே தமிழுக்குப் பெருமைதரும் என நினைத்து அவ்வாறு தந்தான். உண்மையறிந்த ஔவை உடனே வாழ்த்தி, ஒரு பாடல் பாடினார். அப்பாடலால்தான் இன்று ஔவையுடன் அதியனும் ‘சாவா வரம்’ பெற்றுளான்.

**வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை**
**ஆர்கலி நறவின் அதியர் கோமான்**
**போரடு திருவின் பொலந்தார் அஞ்சி!**

**பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீலமணி மிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெரும நீயே! தொல்நிலைப்**

**பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்**
**சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே (புறம். 91)**

இதன் சாரம்: பெரிய மலைப்பிளவில் கிடைத்த நெல்லிக் கனியை, தனக்கென்று எண்ணாது, அதனாலாம் பயனை மனத்தில் மறைத்துக்கொண்டு, யாம் சாகக் கூடாதென்று எமக்குக் கொடுத்த, பெரு வீரனாகிய அஞ்சியே!

நீ பால்போலும் பிறைமதி நெற்றியில் விளங்கும் நீல நிறமான கழுத்திணையுடைய ஒப்பற்ற சிவனைப்போல, என்றும் வாழ்வாயாக!

வலம் - வெற்றி, நறவு - மது. ஒருவன் - ஒப்பற்றவன் சிவன். விடர் - மலைப் பிளவு. மிசை - மலையுச்சி. குறியாது - தனக்கென எண்ணாது. ஆதல் - அதனாலாம் பயன்.

## 34. சங்கீரணவணி

89. **மொழியப் பட்ட அணிபல தம்முள்**
**தழுவ உரைப்பது சங்கீரணமே**

இதுகாறும் கூறப்பட்ட அணிகள் பலவும் தம்முள் பொருந்தி வர உரைப்பது சங்கீரணவணியாகும்

இரண்டுக்கு மேற்பட்ட அணிகள் கலந்துவர வேண்டும், எல்லா அணிகளும் ஓரளவு சமநிலையில் அமைந்திருக்க வேண்டும்.

**தண்துறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு**
**புண்டரிகம் நின்வதனம் போன்றதால் - உண்டோ**
**பயின்றார் உளம்பருகும் பால்மொழியாய்! பார்மேல்**
**முயன்றால் முடியாப் பொருள்**

புண்டரிகம் - தாமரை. அளி - வண்டு. தண்ணீரில் நின்று தவம் செய்வதால், தாமரை உன் முகம் போன்று ஆனது - பழகியவர் உள்ளத்தைப் பருகவல்ல பால்போலும் இனிய மொழியாய்! உலகில் முயன்றால் முடியாத பொருளும் உண்டோ? (இல்லை என்பதாம்)

'தண்துறை நீரில் நின்ற தவத்தால்' - என்பது தற்குறிப் பேற்றம். அளிமருவு புண்டரிகம்: அளி - வண்டு, கருணை. தாமரைக்கு வண்டு; பெண் முகத்திற்குக் கருணை. இது சிலேடை 'புண்டரிகம் நின்வதனம் போலும்' - என்பது உவமை. 'உண்டோ முயன்றால் முடியாப் பொருள்' - இது பொதுப் பொருள்; இதனால், முன்னைய சிறப்புப் பொருள் உறுதிப்படுத்தப்பட்டது. இது 'வேற்றுப்பொருள் வைப்பணி'. 'உளம் பருகும் பால், மொழியாய்' - என்பது உவகைச் சுவையணி. 'பால்மொழி' என்பது உருவகம்.

## உவமை உருவகங்கட்குப் புறனடை

90. **ஒப்புமை இல்லதும் ஐயமும் உவமையில்**
**செப்பிய திறமும் உவமை உருவகமும்**
**உருவகத் தடக்கலும் உணர்ந்தனர் கொளலே**

ஒப்புமை இல்லது என்பது 'பொதுநீங்கு உவமை'. 'தானே உவமை தனக்கு' என்பது. பிற ஒப்புமையுடைய பொருள்களைச்

சொல்லி, அவை உவமையாகா, 'தனக்கு உவமைதானே' என்பது இது. இங்கும் ஒப்புமையுடையவற்றையே கூறி, அவை உவமையாகா என்றாலும் இது உவமையணி என்றே கூறப்படும்.

ஐயமும் என்பது ஐயவுவமை. இது 'தாமரையோ, முகமோ' என ஐயப்படும்போதும், ஓரளவு ஒப்புமையுடையவற்றிலேயே ஐயப்படுவதால், இதுவும் 'உவமையணி'யேயாம்.

'உவமையில் செப்பிய திறமும்' என்பது, மேலே கூறிய பொது நீங்கு உவமையும் ஐயவுவமையும் உவமைக்குச் சொன்ன இலக்கணத் திற்கு ஒத்ததேயாம்.

'உவமை உருவகமும்' என்பது 'வதன மதியம் உதய மதியமே ஒக்கும்' என்பது. வதன மதியம் - உருவகம். அது உதய மதியமே ஒக்கும் என்பது உவமை. இவ்வாறு பாடுவது, கூறியது கூறலாகாதா என்றால், 'மது நுகர்ந்தார் மதி முகம் உதய மதியத்தை ஒக்கும்' என இரு வேறு கருத்திற்கூறலால், இதுவும் உருவகம் ஆகும்; உவமை என்றும் கூறலாம்.

இவை அனைத்தும் முன்பு கூறியவற்றுக்கு அவை குற்ற மாகா எனக் கூறப்பட்ட புறனடைகளே. இந்நூலின் 32 ஆம் நூர்பாவில் ஐயவுவமை, பொதுநீங்குவமை எனக் கூறப்பட்ட உவமை வகைகள் குற்றமுடையன அல்ல என்பதுஇதன் கருத்து. உருவக அணியின் வகை கூறுகின்ற 'உவமை உருவகம்' நூற்பா 38-க்குப் புறனடை இது. அவ்வாறு பாடுவது கூறியது கூறலாகாது என விளக்க வந்தது.

இனிப் பழைய உரையாசிரியர் இடத்துக் கேற்றது, காலத்துக் கேற்றது, பொருளுக் கேற்றது, பண்பிற்கேற்றது, சாதிக்கேற்றது, மரபிற் கேற்றது என ஆறு வகைகளையும் 'சுட்டிக் கூறா உவமம்' எனத் தொல்காப்பியர் கூறியதையும் விளக்குவதற்கு முற்படுகிறார். இது அவ் வுரையாசிரியரின் தமிழ்நூற் பயிற்சியையும் தமிழிலக்கியத்தில் வந்துள்ள உவமை வகைகளைக் காட்ட வேண்டுமென்ற ஆர்வத் தையும் விளக்குகிறது.

1. பாலைவனத்தில் பரற்கற்கள் குத்தியதால், ஏற்பட்ட பாதத்தின் கொப்புளங்களை, அந் நிலத்திற்கேயுரிய மரல் எனப்படும் கற்றாழைப் பழங்களுக்கு உவமை சொல்வது **இடத்துக் கேற்ற உவமை**. இது பொருநராற்றுப் படையில் வருகிறது.

**2. காலத்துக் கேற்ற உவமை:** அகிற்புகையூட்டும் கூந்தலையுடைய மகளிரை, கார்காலத்துப் பட்டுப்பூச்சி, காயாம் பூ, தோகைமயில் இவற்றோடு உவமிப்பது.

**3. பொருளுக்கேற்ற உவமை:** திருமாலைக் ‘கடலும் மலையும் போலக் கரியநிறமுடையவனே’ என்பது நீல வண்ணமும் பெருமிதத் தோற்றமும் பற்றியது.

**4. பண்பிற்கேற்ற உவமை:** ‘புலி நா வன்ன புல்லிதழ்த் தாமரை’ - புலியின் நாவைப் போன்ற சிவந்த இதழ்களை யுடைய தாமரை. நிறமும் மென்மையும் பற்றியது இது.

**5. சாதிக்கேற்ற உவமை:** ‘விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல், கற்றாரோடு ஏனையவர்.’ கல்லாத மனித குலம் அறிவற்ற விலங்கினத்துடன் ஒப்பிடப் பட்டுள்ளது.

**6. மரபிற்கேற்ற உவமை:** ‘பவளம் போலும் செவ்வாய்’ என்பது வழி வழியாகக் கூறப்பட்டு வருவது. செம்பரத்தம்பூ சிவப்பாயிருந்தாலும் செவ்வாய்க்கு அதை உவமை சொல்வது மரபன்று. தொல்காப்பியர் ‘சுட்டிக் கூறா உவமம்’ என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார். ‘சுட்டிக் கூறா உவம மாயின், பொருள்எதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே’ (1228). துடியிடை - துடி எனும் சிறு இசைக் கருவியின் இடைப் பாகம் மிகமிகச் சுருங்கியிருக்கும். அதைப் போன்ற இடையை உடைய பெண் என்பது கருத்து. துடி போலும் சிறுத்த மெல்லிய இடை எனச் சுட்டிச் சொல்லாத உவமை இது. அதாவது பொதுமைப் பண்பும் உவம உருபும் இடம் பெறாத உவமைத் தொகை இது.

## 35. பாவிகவணி

**91. பாவிகம் என்பது காப்பியப் பண்பே**

பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்பது காப்பியம். காப்பியம் முழுவதும் அதன் பண்பாக - அதாவது அது கூற வந்த, ஒட்டு மொத்த மான, உள்ளார்ந்த பண்பாக அமைவது பாவிகவணி எனப்படும். நூல் முழுவதும் இழையோடும் கருத்து இது.

**அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம் (பதிகம்)**

சிலப்பதிகாரத்தின் ‘பாவிகம்’ இம் மூன்றுமாகும். இம் மூன்றனுள்ளும் ‘உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்’ - என்பதே, தலைமை வாய்ந்த பாவிகமாகும். பாவிகம் - பாவினது தன்மை.

**பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப**
**பொறையிற் சிறந்த கவசம் இல்லை**
**வாய்மையில் கடியதோர் வாளிஇல்லை**

பிறனில் விழைந்த இராவணன் கெட்டதைக் கூறுவது இராமாயணம். அதன் பாவிகம் அது. பொறை - பொறுமை. அதைக் கவசமாகக் கூறுவது பாரதம். வாய்மை- உண்மை, சத்தியம். வாளி- அம்பு. சத்தியத்தை விடக் கூர்மையான அம்பு இல்லையென்பது அரிச்சந்திரபுராணம்.

புறனடைகளுக்குப் பிறகு, இறுதியாக இதைக் கூறியது, இது தனி உறுப்பு அணியன்று; நூல் முழுவதும் இழையோடும் அணி என்பதாலோயாம்.

# 3. சொல்லணியியல்

பெரிதும் சொல்பற்றிய அணிகளாதலின் இவ்வியல் சொல்லணியியல் என்னும் பெயர்த்தாயிற்று. பொருளும் சிறுபான்மை இடம் பெறும்.

இவ்வியல் மூன்று பிரிவாகவுளது. 1. மடக்கணி பற்றியது. ம..க்கு - சொல்லும் தொடரும் மடக்கி வருவது; திரும்பவும் வருவது. இதனை வடமொழியில் 'யமகம்' என்பர். 2. சித்திரகவி எனப்படும் மிறைக் கவி பற்றியது. படம்போட்டு, அதனுள் பாடலை அடக்குவது. 3. இலக்கியத்துள் வரும் வழுக்கள் (பிழைகள்) பற்றிக் கூறி, வழுவமைதியும் கூறுவது; மலைவுகளைக் (குற்றம்) கூறி, அவற்றிற்கும் அமைதி கூறுவது.

## நாட்டுப் பாடல் அடிப்படை

மடக்கு என்பது நாட்டுப் பாடல்களில் இடம்பெறும் போது மிக இனிமையாக இருக்கும். இலக்கியம் என்பதே அதுதான்.

உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மையெழுதி
தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மையெழுதி

இஃது ஈரடி மடக்கு.

அடித்தாரைச் சொல்லியழு ஆக்கினைகள் செய்திடுவோம்
தொட்டாரைச் சொல்லியழு தோள்விலங்கு
போட்டிடுவோம்
கடிந்தாரைச் சொல்லியழு கால்விலங்கு மாட்டிடுவோம்

இது மூவடி மடக்கு

கலிப்பாவின் தாழிசைகள் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும். நாட்டுப்புறப் பாடல்களில், இவ்வகை அணிகள் அருவிபோல் ஓடிவரும்.

இலக்கியங்களில் கலம்பகம், அந்தாதி, சிலேடை போன்றவற்றில், சிற்சில இடங்களில் மடக்கணி இடம் பெறும்.

சிலப்பதிகாரம் கானல்வரி முழுவதும் இம்மடக்கணி கொட்டிக் கிடக்கின்றது.

பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய கொடிய

சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்
சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்
ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள்பின்
சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்

அடையல் குருகே அடையல் எம் கானல்
அடையல் குருகே அடையல் எம் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற்கு ஊறுநோய் உரையாய்
அடையல் குருகே அடையல் எம் கானல்

நுளையர் விளரி நொடி தருதீம்பாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாய்மன் நீயேல்
கொளை வல்லாய் என்ஆவி கொள்வாழி மாலை

இதனைப் புலவர்கள் தங்கள் புலமை விளையாட்டிற்கும் சொற் சாதிரியத்திற்கும் பயன்படுத்திக் கொண்டனவே மடக்கணியும் சித்திரகவியுமாம். இவற்றில் இலக்கிய அழகியல் இன்பத்தை விட, அவற்றைப் படைத்த புலவர்களின் சாதுரியமே மிகுதி..

## மடக்கணி என்பது யாது

92. எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும் வேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே

எழுத்தின் கூட்டம் - எழுத்துக்களின் தொகுதி, சொல், தொடர், அடி யாவும் அடங்கும். இடையில் பிறிதின்றித் தொடர்ந்தும் இடைவெளி விட்டும் திரும்ப வந்து, வேறு பொருளைத் தருமாயின் மடக்கெனும் பெயருடையதாகும்.
(இதனை யமகம் எனவும் மொழிவர்.)

## மடக்கணியின் பொது வகைமை (4)

93. அதுதான்,
ஓரடி முதலா நான்கடி காறும்
சேரும் என்ப தெளிந்திசி னோரே

பொதுவாகச் செய்யுள் நான்கடியில் வருவது பெருவழக்கு. அம் மடக்கு ஓரடிக்கண்ணும் ஈரடிக்கண்ணும் மூன்றடிக் கண்ணும் நான்கடிக்கண்ணும் நடக்கும் என்று, தெளிந்த அறிவுடையோர் கூறுவர்.

## அதன் உள்வகைகள் (7)

94. ஆதி இடைகடை ஆதியோடு இடைகடை
இடையொடு கடைமுழுது எனஎழு வகைத்தே

ஆதிமடக்கு, இடைமடக்கு, கடைமடக்கு என மூன்று. ஆதியுடன் இடைமடக்கு ஆதியுடன் கடைமடக்கு இரண்டு. இடையோடு கடைமடக்கு, முழுதும் மடக்கு இரண்டு. ஆக இஃது ஏழு வகைப்படும்.

## தொடை அடிப்படை மடக்குகள்

95. ஓரடி ஒழிந்தன தேருங் காலை
இணைமுதல் விகற்பம் ஏழும் நான்கும்
அடைவுறும் பெற்றியின் அறியத் தோன்றும்

ஓரடிமடக்கு அல்லாதவற்றை ஆராயுங்காலத்து, தொடை வகைகளாக யாப்பிலக்கணத்தில் இணை, பொழிப்பு, ஒரூஉ, முற்று என்பன ஓரடியுள் மாறிமாறிவரும் ஏழும் நான்கு மாகிய வேறுபாடுகளின் அடிப்படையில் பதினொரு வகைகளாக விளங்கித் தோன்றும். முதலிருசீர்இணை; இடையிருசீர் இணை, கடையிருசீர் இணை; முதலும் மூன்றும் பொழிப்பு, ண்டும் நான்கும் பொழிப்பு; முதற்சீரும் இறுதிச் சீரும் ஒரூஉ, முற்றும் வருவன என ஓரடியுள் வருவன ஏழு தொடைவகைகள்.

1. முதலீரடிக்கண் மடக்கு 2. முதலடி, மூன்றாமடி மடக்கு 3. முதலடி நான்காமடி மடக்கு 4. கடை ஈரடிமடக்கு 5. இடை ஈரடி மடக்கு 6. இரண்டாமடி நான்காமடி மடக்கு, ஆக இரண்டடி மடக்கு 6.

1. ஈற்றடி தவிர்த்து ஏனை மூன்றடி மடக்கு 2. முதலடி தவிர்த்து ஏனை மூன்றடி மடக்கு 3. முதலயலடி தவிர்த்து மூன்றடி மடக்கு 4. ஈற்றயலடி தவிர்த்து ஏனை மூன்றடி

மடக்கு, ஆக மூன்றடி மடக்கு நான்கு.

நான்கடியும் மடக்கிவரும் முற்றுமடக்கு ஒன்று. ஆக மடக்கு வகை 11. இவற்றுடன் ஓரடி மடக்கு நான்குசேர்க்க 15. முன்பு கூறிய ஏழுவகைத் தொடையுடன் பெருக்க 105.

இவை இடையிட்டு வருவன, இடையிடாது வருவன, இடையிட்டும் இடையிடாதும் வருவன என மூவகையுடன் பெருக்க 315 ஆகும்.

இவற்றுட் சிலவே எடுத்துக் காட்டப்படுகின்றன. நாம் சிலவற்றைப் பார்த்தால் போதும்.

**துறைவா துறைவார்** பொழில் துணைவர் - எனும் வெண்பாவில் முதலடி முதன் மடக்கு வந்துளது. நெய்தல் நிலத் தலைவனே! துறையின்கண் பொருத்தியிருக்கப்பட்ட பொழிலில் தலைவர் பிரிந்தால் தலைவி வருந்துவள்' என்பது கருத்துச் சுருக்கம்.

**மழையார் கொடைத்தடக்கை வாளபயன் எங்கோன்**
**விழையார் விழையார் மெல்லாடை - குழையார்**
**தழையாம் உணவும் கனியாம் இனமும்**
**உழையா முழையாம் உறை**

மழைபோலக்கொடுக்கும் அபயனாம் சோழனின் விழையார்- பகைவர். 'விழையார் மெல்லாடை - அவர்கள் தோற்றதால், விரும்பக் கூடிய மெல்லிய ஆடை அவர்களுக்கு இனித் தழைகுழைகளே; உணவும் காய்கனிகளே; சுற்றமும் உழையாம் - மான் கூட்டமே. உறையுமிடமும் குகைகளே . (முழை - குகை).

**இஃது இரண்டாமடியும் ஈற்றடியும் மடக்கு.**

**மாலை அருளாது வஞ்சியான் வஞ்சியான்**
**மேலை அமரர் கடைவேலை வேலை**
**வளைஆர் திரைமேல் வரும் அன்ன மன்ன**
**இளையா ளிவளை வளை**

வஞ்சிமன்னன் முன்பு அமரர் கடைந்த, கரைகளையுடைய கடலில், சங்குகள் பொருந்திய அலைகளின் மேல்வரும் அன்னம் அன்ன இவ்இளையாளுக்கு வளையல்கள் கழலுமாறு வஞ்சிக்கமாட்டான். மாலையைத் தாராது கைவிடான்.

இது நான்கடியிலும் வந்த இறுதி முற்று மடக்கு.

## அடிமுழுதும் மடக்கி வருதல்

96. **அடிமுழுதும் அடக்கலும் ஆங்கதன் சிறப்பே**

அடிமுழுவதும் மடக்கி வருதலும் மடக்கணிக்குச் சிறப்புடையதாகும். ஈரடிமடக்கு, மூவடிமடக்கு, நான்கடி மடக்கு என இது மூன்று வகைப்படும்.

## ஓரெழுத்து மடக்கு

97. **ஓரெழுத்து மடக்கலும் உரித்தென மொழிப**

ஓரெழுத்தே மடக்கித் திரும்ப வருதலும் மடக்கணிக்கு உரியதெனக் கூறுவர்.

குற்றுயிர் எழுத்துக்களால் வரும் மடக்கு, நெட்டுயிர் எழுத்துக்களால் வரும் மடக்கு, ககர எழுத்து விகற்பத்தால் வரும் மடக்கு, ஒற்றெழுத்தின்றியே வருவன, வல்லினத்தான் வருவன, மெல்லினத்தான் வருவன, இடையினத்தான் வருவன எனப் பலவுள. இவை சில 'வண்ணங்கள்' போல்வன.

## சித்திரகவி

இதைத் தமிழில் மிறைக் கவி என்பர்.

98. **கோமூத் திரியே, கூட சதுக்கம்.**
**மாலை மாற்றே, எழுத்து வருத்தனம்**
**நாக பந்தம், வினாவுத் தரமே**
**காதை கரப்பே, கரந்துறைச் செய்யுள்,**
**சக்கரம், சுழிகுளம், சருப்பதோ பத்திரம்,**
**அக்கரச் சுதகமும் அவற்றின் பால**

இவை பன்னிரண்டும் சித்திர கவிகளாகும்.

இவை தவிர உரையாசிரியர் காட்டுவன: நிரோட்டம், ஒற்றுப் பெயர்த்தல், மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, முரசபந்தம், திரிபாதி, திரிபங்கி, பிறிதுபடு பாட்டு முதலியன எட்டுமாகும். ஆக இவை இருபது வகைப் படுகின்றன. அழற்றுள் ஒன்றிரண்டு காணுதல் தகும்.

## கோமூத்திரி

இரண்டு இரண்டு வரிகளாக ஒரு செய்யுளை எழுதி, மேலும் கீழும் ஒவ்வோரெழுத்து இடையிட்டு வாசித்தாலும் அதே செய்யுளாவது. பசு நடந்து கொண்டே நீர் விடும்போது அந் நீர் ஒழுகிய சுாரை நெளிந்த வடிவமாயிருக்கும். அது போல்வதாகலின் இச்சித்திரகவி கோமூத்திரி எனப்பட்டது.

**பருவ மாகவி தோகன மாலையே**
**பொருவி லாவுழை மேவன கானமே**
**மருவு மாசைவி டாகன மாலையே**
**வெருவ லாயிழை பூவணி காலமே**

பருவமாக இதோ - காதலர் குறித்த காலம் இதுவே. கான மாலையே - மேகக் கூட்டம் பரவியது. பொருவிலா உழை- ஒப்பற்ற மான்கள். கானம் மேவன - காட்டில் உலாவின. மருவும் ஆசை விடா கன மாலையே - திசைகள் எல்லாம் கன மழை பொழியும் (ஆசை - திசை). ஆயிழையே அஞ்சாதே! தலைவன் வந்து பூ அணியும் காலம் இது.




இது, முன்னிரண்டடி, மேல்வரியாகவும், பின்னிரண்டடி கீழ்வரியாகவு மெழுதி, அவ்வரி இரண்டையும் கீழும் ஒன்றிடையிட்டுக் கோமூத்திர ரேகைவழி படிக்க, ஒன்று விட்டடொன்று மாறாடி அச்செய்யுளே முடியுமாறு காண்க.

2. **கூட சதுக்கம்** - ஈற்றடி எழுத்துக்கள் ஏனைய மூன்றடியுள்ளும் மறைந்து நிற்கப் பாடுவது. சதுக்கம் - நான்கடி. கூடம் - மறைந்து நிற்பது.

3. **மாலை மாற்று** - ஒரு செய்யுளை முதலிலிருந்து வாசிப்பது போலவே, இறுதியிலிருந்து படித்தாலும் அதே செய்யுள் வருவது.

**நீவாத மாதவா தாமோக ராகமோ**
**தாவாத மாதவா நீ**

திருப்பிக் கடைசியிலிருந்து படித்துப் பாருங்கள். நீவாத மாதவா-நீங்காத மாதவத்தையுடையவனே! தா மோக ராகமோ தாவாது-மிக்க மோக ஆசை கெடாது. அ மாது அவா நீ- அம் மாதின் மேல் ஆசையை நீக்கு . உலகவழக்கில் 'விகடகவி' 'மோருபோருமோ' எனப் பிள்ளைகள் சொல்லி விளையாடுவர்.

4. **எழுத்து வருத்தனம்** - ஒரு பாடலில் எழுத்தை அடுக்குவது இது. கம்பு-கம். நகம்-ந. (நகம்-மலை). இதனுடன் க-சேர்க்க கநகம்-பொன். இதனுடன் கோ சேர்க்க - கோக நகம்-தாமரை. (பாடலில் இவ்வாறு அடுக்கி வரவேண்டும்.) குழந்தைகளுக்குக் கற்பிக்க நல்ல உத்தி இது. தவத்தில் 'த' எடுத்துக்கொள்; உமியில் மி எடுத்துக்கொள்; அமிழ்தில் ழ் எடுத்துக் கொள். இப்போது கிடைப்பது 'தமிழ்'.

5. **நாகபந்தம்**- இரண்டு பாம்புகள் இணைவது போல் சித்திரமெழுதி, இரண்டு வெண்பாக்களை அதிலடக்குவது.

6. **வினாவுத்தரம்** - பல வினாக்களையடுக்கி, அதன் விடைகளை இறுதியில் ஒருவழித் தொகுக்க, அது ஒரு சொற்றொடராவது.

**பூமகள் யார்? போவானை ஏவுவான் ஏதுரைக்கும்?**
**நாமம் பொருசரத்திற்கு ஏதென்பர்?- தாமழகின்**
**பேர்என்? பிறைசூடும் பெம்மான் உவந்துறையும்**
**சேர்வுஎன்? திருவேகம் பம்!**

பூமகள் யார்-திரு. ஏவுதல் எவ்வாறு-ஏகு . சரத்திற்குப் பேர் என்-அம்பு. அழகின் பேர் என்-அம். பிறைசூடும் சிவன் உறையும் இடம் எது? திருவேகம்பம். (திரு+ஏகு+அம்பு+ அம்)

இதுபோல் குழந்தைகளுக்குச் சொல் விளையாட்டுக் கற்பிக்கலாமே?

7. **காதை தரப்பு** - ஒரு பாடலிலிருந்து எட ்துக்களைப் பொறுக்கிப் பிறிதொரு சிறு செய்யுள் கொள்ளவைப்பது.

8. **கரந்துறைப் பாட்டு** - இதுவும் ஒரு செய்யுளை முழுவதும் எழுதி, அதன் ஈற்று மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி, ஒவ்வோர் எழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுள் உருவாவது. இது மிகக் கடினம்.

## நான்காரைச் சக்கரம்

9. **சக்கரபந்தம்** - என்பது சக்கரம் போல் படம் போட்டுச் செய்யுள் வரைவது. நான்கு ஆரக்கால் படம் உள்ளது நான் காரைச்சக்கரம். ஆறு, எட்டு, முதலான சக்கரங்களும் உள.

**மேரு சாபமு மேவுமே**
**மேவு மேயுண வாலமே**
**மேல வாமவ னாயமே**
**மேய னானடி சாருமே**

சாபம்-வில். ஆலம் - நஞ்சு. ஆயம்-கூட்டம். மேருமலையை வில்லாகவுடையவன். ஆலமே உணவாக மேவுமே. அவன் ஆயம் (சிவ கணம்) மேலவாம். மேயனான் - இங்ஙனம் பொருந்திய சிவன், அடி சாருமே.



மே- எழுத்து நடுவில் நின்றது. ஆரக் கால்களில் ஒவ்வோர் எழுத்துளது. சூடு எனும் வட்டத்தில் பன்னிரண்டு எழுத்துள. இவை கூட்டிப் பாடச் செய்யுள் தோன்றும்.

10. **சுழிகுளம்** - ஒரு செய்யுளை எட்டு எட்டாக நான்கு வரிகளாக்கி, மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் ஏறியும் இவ்வாறு அமைத்துப் பாடி அவ்வரி நான்குமேயாகி அப்பாடலாகவே முடிவது. இது சித்திரத்துள் அமைக்கப்படும்.

11. **சருப்பதோ பத்திரம்** - நான்கு வழிகளையுடைய அரசர் மாளிகை. எவ்வழியாகவும் மேலே ஏறிச் செல்லலாம்; கீழே இறங்கியும் செல்லலாம்.

**மாவா நீதா தாநீ வாமா**
**வாயா வாமே மேவா யாவா**
**நீவா ராமா மாரா வாநீ**
**தாமே மாரா ராமா மேதா.**

மா வா - பெருமை யனவோ. நீதா - நீதியனே! தாநீ - செல்வனே. வாமா வாயாவாமே மேவா யாவா - நீ வருதலை வாய்க்கப் பெற்றால், பின்பு வாய்க்கப் பெறாதது யாதுளது? இராமனைப் போன்றவனே! மன்மதனே! ஆத்திமாலை சூடியவனே! எனக்கு அதனைத் தருவாயாக!

## சருப்பதோ பத்திரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |

எங்கிருந்து எப்படிப் படித்தாலும் பாடலடிகள் வரும்.

12. **அக்கரச் சுதகம்** - ஒவ்வோர் எழுத்தாக நீக்க, வெவ்வேறு பொருள்தரப் பாடுவது. அட்சர நீக்கம் இது; எழுத்தைக் குறைத்தல். மதலையின் மொழி - தலையின் மொழி - இன்மொழி - மொழி என வர வைத்துப் பாடலாம்.

13. **நிரோட்டம்** - இதழ் குவிக்கும் உயிரும் மெய்யும் தீண்டாமற் பாடுவது. இதழொட்டும் எழுத்து வரக்கூடாது.

**இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாங்**
**கச்சிக்கச் சாலைக் கனி**

கச்சிப் பதியில் உள்ள திருக்கச் சாலையில் தோன்றிய கனியை ஒப்பான். மிகவும் சிறந்து விரும்ப இனிதாக நிற்பான்.

14. **ஒற்றுப்பெயர்த்தல்** - ஒரு மொழியும் தொடர் மொழியுமாய்ப் பொருள்படுவனவற்றை, அப் பொருளை விட்டு, வேறு பொருள்தரப் பாடுவது. 'கங்காபுர மாளிகை' - அனபாயச் சோழனது கங்காபுர மாளிகை. அனபாயனாகிய கங்காபுரம் ஆளியினது கை'. இதுவே ஒற்றுப் பெயர்த்தலாம்.

15. **மாத்திரைச்சுருக்கம்** - ஒரு பொருள் தரும் சொல் ஒரு மாத்திரையைக் குறைக்கப் பிறிதொரு பொருள் தருவது. ஓதி - கூந்தல், ஒதி - ஒரு மரம். ஏரி - நீர்நிலை, எரி - நெருப்பு.

16. **மாத்திரை வருத்தனம்** - இதற்கு மறுதலையாவது. அதாவது மாத்திரையைக் கூட்டப் பிறிதொரு பொருள் தருவது. அளி- ஆளி, தரை - தாரை, கவி - காவி, பொருள் வேறுபட இவற்றை அமைத்துப் பாடுவது.

17. **முரசபந்தம்** - முரசுபோல் சித்திரம் வரைந்து, அதனுள் செய்யுளை அமைப்பது.

18. **திரிபாதி** - மூன்றெழுத்துக் கூட்ட ஒரு மொழி; அதில் முதலெழுத்தும் கடையெழுத்தும் கூட்ட வேறொரு மொழி.; இடையெழுத்தும் கடையெழுத்தும் கூட்ட மற்றொரு மொழி இவ்வாறு அமைத்துப் பாடுவது. காமாரி - காமனுக்குப் பகைவனாகிய சிவன். காரி - ஒரு வள்ளல். மாரி - மழை. மதுரை - மதுரை நகரம். மது - கள். மரை - மான். துரை - ஒரு தலைவன்.

19. **திரிபங்கி** - ஒரு செய்யுளாய் அமைந்ததைப் பிரித்து எழுத, மூன்று செய்யுளாவது.

20. **பிறிதுபடுபாட்டு** - ஒரு செய்யுளையே மாற்றி எழுத அது வேறு ஒரு செய்யுளாவது. ஒரு கட்டளைக் கலித்துறைப் பாட்டை, நேரிசை ஆசிரியமாக மாற்றுவது போல்வது.

கொச்சகக் கலி எனும் கலித்தொகைப் பாடலில் இடையே, இன்னிசை வெண்பாவாக மாற்றுமாறு சிலவுள.

**அவரும்**
**தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண் சேந்து**
**ஒருபகல் எல்லாம் உருத்தெழுந்து ஆறி**
**இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று**
**தெருமந்து சாய்த்தார் தலை. (கலி.39)**

இவ்வாறு வருவன சங்க ஆசிரியப்பாக்களுள்ளும் உள்ளன.

## வழுக்களும் வழுவமைதிகளும்

99. பிரிபொருட் சொற்றொடர், மாறுபடு பொருள்மொழி,
மொழிந்தது மொழிவே, கவர்படு பொருள்மொழி,
நிரனிறை வழுவே, சொல்வழு, யதிவழு,
செய்யுள் வழுவொடு, சந்தி வழுவென
எய்திய ஒன்பதும்; இடனே, காலம்,
கலையே, உலகம், நியாயம், ஆகம
மலைவும்உள் ளுறுத்தவும் வரைந்தனர் புலவர்

**ஒன்பதுவழுக்கள்:** 1. பிரிபொருட் சொற்றொடர் 2. மாறுபடு பொருள் மொழி 3. மொழிந்தது மொழிதல் 4. கவர்படு பொருள்மொழி 5. நிரனிறை வழு 6. சொல்வழு 7. யதிவழு-(சீரோசை அமைவு) 8. செய்யுள் வழு 9. சந்தி வழு.

**ஆறு மலைவுகள்:** 1. இடமலைவு 2. காலமலைவு 3. கலை மலைவு 4. உலக மலைவு 5. நியாய மலைவு 6. ஆகம மலைவு.

வரைந்தனர் புலவர் - இவ் வழுவும் குற்றமும் நீக்கப்பட வேண்டும் என்று புலவர்கள் கூறியுள்ளனர். அணியிலக்கணம் செய்யுளுக்கு அழகு சேர்ப்பது. எனவே இவ் வழுக்களும் மலைவுகளும் அவ் அழகைக் கெடுக்கு மாதலின், அவற்றை நீக்கவேண்டும் என்று இறுதியில் கூறப் படுகிறது.

## பிறன் கோள்கூறி மறுத்தல்

100. மேறகோள் ஏது எடுத்துக் காட்டென
ஆற்றுளி கிளக்கும் அவற்றது வழுநிலை
நிரம்ப உணர்த்த வரம்பில என்ப

மேற்கோளும் ஏதும் எடுத்துக்காட்டும் எனும் மூன்றும், முறைப்படி சொல்லவேண்டிய அவற்றின் வழுநிலைகளை முற்ற உணர்த்த வேண்டின், அது எல்லையற்றதாகும். அதனால் இங்குக் கூறவில்லை என்பது கருத்து.

இவை நியாய நூல்களில் - அளவை எனப்படும் தருக்க நூல்களில் கூறப்படுவன. அவை சமயங்கள் தோறும் வேறுபடுவன. எனவே இலக்கிய அணி பற்றிய இந்நூலில் அவை தேவையற்றவை.

## வழுக்கள்

### 1. பிரிபொருள் சொற்றொடர்

**101. அவற்றுள்,**
**பிரிபொருட் சொற்றொடர் செய்யுள் முழுவதும்**
**ஒரு பொருள் பயவாது ஒரீஇத் தோன்றும்.**

பிரிபொருள் - ஒன்றினொன்று ஒவ்வாத பொருள். வெவ் வேறு தொடர்களாக அமைந்து, கூட்டி நோக்க ஒரு பொருள் தருமாறு அமையாதவை.

'அவன் மன்னன்; இது மலைவீழ் அருவி; எல்லோரும் உண்டனர்' என இவ்வாறு தொடர்பின்றிப் பாடின், அவை ஒரு பொருளாகத் தொடர்ந்து உணரப்படா.

### வழுவமைதி

**102. களியினும் பித்தினும் கடிவரை இன்றே**

கள்ளுண்டு களித்த நிலையிலும் பித்துப் பிடித்த நிலையிலும் அவ்வாறு தொடர்பின்றிக் கூறுவன கடிந்து நீக்கப் படா.

### 2. மாறுபடு பொருள்மொழி

**103. மாறுபடு பொருள்மொழி முன்மொழிந் ததற்கு**
**மாறுபடத் தோன்றி வருமொழித் தாகும்**

மாறுபடு பொருள்மொழி என்பது ஒரு பாடலில் முன்னர் மொழிந்த சொற் பொருளோடு, பின்னர் வருவன மாறுபடத் தோன்றி வருவதாகும். 'உலகில் உனக்குப் பகைவரே இல்லை' என்று முன்னிரண்டு அடிகளில் கூறிவிட்டு, பின்னிரண்டு அடிகளில் 'நீ பகைவரை அழித்து இத்தலம் முழுவதும் தாங்குகின்றனை' என முடிப்பது.

### வழுவமைதி

**104. காமமும் அச்சமும் கைம்மிகின் உரித்தே**

காமம் அச்சம் இரண்டும் எல்லை கடக்கும் போது, அவ்வாறு உரைக்கப்படும்.

## 3. மொழிந்தது மொழிவு

105. **மொழிந்தது மொழிவே கூறியது கூறி**
**வேறுபட ஒரு பொருள் விளங்கா தாகும்**

முன்னே கூறியதையே திரும்பவும் கூறி, அதனால் வேறு ஒரு பொருள் விளங்காதது, மொழிந்தது மொழிவு ஆகும். இதைக் கூறியது கூறல் எனும் குற்றம் என்பர்.

பின்வருநிலையணிகள் (சொற்பின் வருநிலை, பொருள் பின்வருநிலை , சொற்பொருள் பின்வருநிலை) மொழிந்தது மொழிதல் ஆகா. அவை செய்யுளுக்கு அழகு தருமாறு, பொருளுணர்ச்சியோடு புனையப்படுவன. மேலும் 'வேறு ஒரு பொருளை விளைவிக்குமாயின், கூறியது கூறலில் குற்றமில்லை' என்பது இலக்கணம்.

### வழுவமைதி

106. **விரைவினும் சிறப்பினும் வரைவின்று அதுவே**

விரைவு சிறப்பு ஆகிய இரு காரணங்களால் வந்த மொழியே திரும்ப வருவது குற்றமன்று.

**ஒருவர் ஒருவர்மேல் வீழ்ந்து வடநாடர்**
**அருவர் அருவர் என அஞ்சி - வெருவந்து**
**தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்**
**போர்க்கலிங்கம் மீதெழுந்த போது**

சோழன் கலிங்கத்தின் மீது படையெடுத்தபோது, அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து இவர்கள் வெல்லுதற்கு அரியவர்கள், அரியவர்கள் என அஞ்சி பயந்து, தீ தீ தீ பற்றியது எனத் தளர்வர். ஒருவர் ஒருவர் ; அருவர் அருவர் - அச்சத்தால் வந்தசொல்லே வந்தது. தீ தீ தீ - இது விரைவு பற்றியது. சிறப்பினும் என்பது எதன் மிகுதியையும் குறிக்கும்.

## 4. கவர்படு பொருள்மொழி

107. **ஒருபொருள் துணிய உரைக்க லுற்ற சொல்**
**இருபொருட்கு இயைவது கவர்படு பொருள் மொழி**

ஒரு பொருளைத் தெளிவாக உணர்த்த வந்த சொல் அதனையே ஐயுறும்படி, பல பொருளுக்குப் பொருந்தி

வருவது கவர்படு பொருள் மொழி. கவர்படுதல் - இதுவோ அதுவோ என இருபாற்படுதல். 'அரி மருவு சோலையகத்து'- என்றால், சோலையில் வண்டுகளா, சிங்கமா, நெருப்பா என ஐயமுண்டாகிறது. ஏனெனில் அதனுட் புக மக்கள் அஞ்சுவதாகப் பாடல் வருகிறது. 'சொல்லுவது அற மொழி' என்பது போல் ஒன்றைத் துணிவாகச் சொல்ல வேண்டும் என்பது கருத்து.

**வழுவமைதி**

**108. வழூஉப்படல் இல்வழி வரைவின்று அதுவே**

வழுவில்லாத இடத்தில், கவர்படுமாறு - இருபொருள்படக் கூறுதலும் தவறன்று. 'உலகைக் காப்பது அரியே' - எனில் இந்திரனே எனினும் திருமாலே எனினும் பொருந்துவதேயாம் காத்தல் தொழில் எவர்மேல் சேரினும் குற்றமின்று என்பர்.

## 5. நிரனிறை வழு

**109. ஒருநிரல் முன்வைத்து அதன்பின் வைக்கும்**
**நிரனிறை பிறழ்வது நிரனிறை வழூவே**

ஒருவரிசைப்படச்சிலவற்றை முன்னே வைத்து, அதன் பின்னே வைக்கும் வரிசைமுறையை முறைமாற்றிப் பிறழவைப்பது நிரனிறை வழுவாம்.

தெற்குத்திசையில் காப்பவர் சந்திரன், மேற்குத் திசைக்கு இயமன், வடக்கிற்கு வருணன், கிழக்கிற்கு சூரியன் என்பதே முறை. ஒரு வெண்பாவில் தெற்கிற்குச் சந்திரன், மேற்கிற்கு வருணன், வடக்கிற்குச் சூரியன், கிழக்கிற்கு இயமன் என முறை மாற்றி வருவது நிரனிறை வழு.

**வழுவமைதி**

**110. உய்த்துணர வரும் வழி அவ்வாறும் உரித்தே**

அந் நிரனிறை உய்த்துக்கொண்டு உணருமாறு வருமாயின் அவ்வாறு வருதற்கும் உரியதே. முரண்நிரனிறை போல வருவன ஏற்புடையனவே. 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல், கற்றாரோடு ஏனையவர்'. இதில் முறைமாற்றி விலங்கு ஏனையவர் (கல்லாதவர்); மக்கள் கற்றவர் எனக் கொள்வதே உய்த்துக்கொண்டுணர்தல்.

## 6.சொல்வழு

**111. சொல்வழு என்பது சொல்லிலக்கணத்தொடு
புல்லா தாகிய புகர்படு மொழியே**

சொல்வழு, சொல்லதிகாரச் சொல்லிலக்கணக்கத் துடன் மாறுபட வரும் குற்றம் பொருந்திய சொற்களைப் புணர்ப்பது. ஒருதாயே யாவகைய தாயர்க்கும் என்றும் பிறகு எங்களுக்கும் என்று கூறுவது தவறாம். நேக்கு, நுனக்கு என்பன சொல்வழு என்பர்.

### வழுவமைதி

**112. வழக்கா றாயின் வழுவின்று அதுவே**

அச் சொற்கள் அடிப்பட்ட சான்றோரால் வழங்கப் படுவனவாயின் அவை குற்றமல்ல. அருமருந்தன்னார் என்பதை அருமந்தன்னார் என்று வழங்குவதைக் காட்டுவர் உரையாசிரியர். வாணாள், வீணாள், கோவை, புதுகை, புதுவை - இவைபோல்வன பலவும் இலக்கணமல்லா மரூஉ மொழிகளே. சான்றோரும் வழங்குவதால் ஏற்கப்பட்டன.

## 7. யதிவழு

சீர்க் கட்டமைப்புச் சிதைதல் இது.

**113. யதிவழு என்பது ஓசை யறுவழி
நெறிப்பட வாரா நிலைமைய தென்ப**

யதிவழு என்பது, ஒரு செய்யுளில் ஓசைக்கு ஏற்பச் சீரைப் பிரிக்குமிடத்து, அதை நெறிப்படியல்லாது பிரிக்கும் தன்மையதாம். காடு+அரிதாம் = காடரிதாம் என வரும். வெண்பாவில் காடு, அரிதாம் என்றே பிரிக்கப் பட்டிருப்பது யதிவழு. சீர் ஓசை கெடுகிறது.

### வழுவமைதி

**114. வகையுளி உரைப்புழி வரைவின்று அதுவே**

வகையுளி என்பது ஒரு செய்யுளில் ஓசைக்கும் இலக்கணத்திற்கும் ஏற்பச் சொல்லைப் பிரித்து, சீர் கொள்வது. அவ்வாறு வகையுளியாக உரைக்குமிடத்து அது குற்றமின்று என்பதாம். ‘வருக குட்நாடன் வஞ்சிக்கோ மானென்று’ எனப் பிரிப்பதால், வெண்பா ஓசையும் தளையும் கெடவில்லை.

## 8. செய்யுள் வழு

**115. செய்யுள் வழுவே யாப்பிலக்கணத்தொடு
எய்தலில்லா இயல்பிற் றாகும்.**

யாப்பிலக்கணத்தோடு பொருந்தாத தன்மையினை உடையது செய்யுள் வழு. சீர், தளை, அடி இவற்றை யாப்பின் படி பாடாமல் தவறுபடப் பாடுவது.

### வழுவமைதி

**116. ஆரிடத் துள்ளும் அவைபோல் பவற்றுளும்
நேரும் என்ப நெறியுணர்ந் தோரே**

இருடிகள் சொல்வன, மந்திரங்கள், இவை போலும் பிறவற்றில் அதாவது சாவவும் கெடவும் வாழவும் என மனத்திலுள்ளதை அவ்வாறே பாட வல்லவர்களால் சொல்லப்படுவனவாம்.

## 9. சந்திவழு

**117. சந்தி வழுவே எழுத்திலக்கணத்துச்
சந்தியொடு முடியாத் தன்மைத் தாகும்**

சந்திவழு என்பது எழுத்ததிகாரத்துப்புணர்ச்சி இலக்கணத்துடன் பொருந்தாது பாடுவது. ஒற்று மிகுமிடத்தில் மிகாமலும் மிகாத இடத்தில் மிகுந்தும் வருவன. ஒளிச்சேர்க்கை என்று சேர்த்துச் சொல்ல வேண்டியதை , ஒளிசேர்க்கை எனப் பிரித்துச் சொல்வது. இவை போன்ற சந்திப் பிழைகள் தவிர்க்கப்படவேண்டும்.

### வழுவமைதி

**118. இரண்டாம் வேற்றுமைக்கு எதிர்மறுத்தும் வருமே**

இரண்டாம் வேற்றுமைக்குப் புணர்ச்சியில், வல்லெழுத்து மொழிக்கு முதலில் வந்தால், ஏனைய வேற்றுமை களோடு மாறுபட்டு முடியும்.

சிலையைத் திறந்தனர்; சிலை திறப்பு என இயல்பாக வரும். கலைக் கோயில் - ஒற்று மிகுந்தது. கலையினது கோயில். சிலைதிறப்பில் அது இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலின் மிகாது.

# மலைவுகள்

## 10. இடமலைவு

**119. இடமெனப் படுபவை மலைநாடு யாறே**

மலை - பொதிகை, இமயம் போல்வன. நாடு - பதினெட்டு மொழி வழங்கும் தேயங்கள். யாறு - காவிரி, கங்கை, பொருநை முதலியன.

மலைவு - விரோதம், பகை, மாறுபாடு ஆகவே குற்றம்.

ஒரு மலைக் குரியதைப் பிறிதொன்றிற்கு உரியதாகப் பாடுவது. 'பொதிகை மலைத் தென்றல்' என்றே பாடுவர்; அதை இமயத் தென்றல் என்பது மலைவு. தென்திசையிலிருந்து வருவதே தென்றல்

## 11. கால மலைவு

**120. காலம் பொழுதொடு பருவமென்று இரண்டே**

பொழுது - வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்பன. வைகறை - விடியுமுன்னுள்ள பின்னிரவு. எற்பாடு - சாயுங்காலம். மாலை - முன்னிரவு. யாமம் - நள்ளிரவு. இவற்றுள் ஒன்றற்குரிய, பூ, பறவை, செயலைப் பிறிதெரு பொழுதுடன் புனைவது கால மலைவு.

பருவம் : கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். கார் - மழைக் காலம். கூதிர்- வாடைக்காலம், கூத காலம் என்பர் இன்று. இளவேனிலில் - வசந்தகாலம். முதுவேனில் - கோடைக் காலம். இவை சிறுபொழுது ஆறும் பெரும்பொழுதாகிய பருவம் ஆறுமாம்.

இவற்றில் ஒரு பருவத்திற்குரியதை மறுபருவத்திற் குரியதாக மாற்றிப் பாடுவது. இளவேனிலில் பூக்கும் மாம் பூவையும் குயில் கூவுதலையும் கார்கால வருணனையில் பாடக் கூடாது. கார்காலத்தே மயிலாடும், கொன்றை பூக்கும், காயா மலரும். இவற்றை மாற்றிப் பாடுதல் கால மலைவு.

**கலை மலைவு**

**121 கலைஎனப் படுபவை காண்தக விரிப்பின்**
**காமமும் பொருளும் ஏமுறத் தழுவி**
**மறுவறக் கிளந்த அறுபத்து நான்கே**

ஆய கலைகள் அறுபத்து நான்கு. இன்பம் செல்வம் இரண்டையும் பொருத்தமுறத் தழுவி, குற்றமின்றிக் கூறுவன அறுபத்து நான்கு கலைகளாகும்.

இவற்றின் மலைவாவது நாட்டியநூலிற்கு மாறாக நாட்டியத்தைப் பாடுவது; இசை நூலுக்கு மாறுபட அதுபற்றிப் புனைவது போல்வன.

## 13. உலகமலைவு

**122. உலகெனப் படுவது ஒழுக்கின் மேற்றே**

உலகம் என்பது ஈண்டு நடைமுறை பற்றியதே. ஒழுக்கு - உலக நடைமுறை, ஒழுகலாறு முதலியன.

உலக இயற்கைக்கு மாறாகப் புனைவன உலக மலைவு, வானத்தில் யானை நடந்தது; நெருப்பு தண்ணென்று குளிர்ச்சியாயிருந்தது என இவ்வாறு மாறுபடப் புனைவன.

## 14. நியாய மலைவு

**123. நியாயம் என்பது நெறியுறக் கிளக்கின்**
**அளவையில் தெளிக்கும் விளைபொருள் திறமே**

நியாயம் என்பதனை இலக்கண வகையினால் கூறும் போது காட்சி, அனுமானம், உவமை, நூல்கள் முதலான அளவை களால் பொருள்களின் விளைதிறத்தை - செயற்பாட்டைத் தெரிவிப்பது.

அறுவகைப் பட்ட சமயத்தோடும் உலகின் தோற்றம், நிலை, அழிவு, உயிர்களின் இயல்புகள் முதலானவை பற்றி, தருக்க முறையில், அளவைகளால் விளக்கிக் கூறியுள்ள வற்றை, அவ்வவர் கூறியவாறு கூறாமல் மாற்றியும் திரித்தும் கூறுவன. இவை நியாய மலைவு எனப்படும்.

புத்தர் கருத்தை சமணசமய மகாவீரர் கருத்தாக மாற்றிக் கூறுவது, வேதாந்தக் கருத்தை அதற்கு முற்றிலும்

முரண்பட்ட சித்தாந்தமாகக் கூறுவது. இவை தவறுபடுவன வாம்.

## 15. ஆகம மலைவு

**124. ஆகமம் என்பன மனுமுதலாகிய**
**அறனொடு புணர்ந்த திறனறி நூலே**

ஆகமம் எனச் சொல்லப்படுவன, மனுமுதலாகிய அறத்துடன் கூடிய திறத்தை அறிவிக்கும் நூல்களாகும்.

திருக்குறள் போலும் நூல்கள் விதித்தவற்றிற்கு - இன்னது செய்தல் அறமெனப் பட்டதற்கு மாறுபடப் புனைவது. ஆகமம் - முன்னோர்களாம் பெரியோர்கள் கூறிய அறநூல்கள்.

இல்வாழ்வார்க்கு விதித்தவற்றைத் துறவிகளுக் குரியனவாக ஏற்றிப் பாடுவது, ஆகம மலைவு.

## மலைவுகளுக்கு வழுவமைதி

**125. கூறிய நெறியின் ஆறுவகை மலைவும்**
**நாடக வழக்கின் நாட்டுதற் குரிய**

முற்கூறிய வழுக்களுக்கு எல்லாம் அமைதியும் கூறப்பட்டது போல, இவ் அறுவகை மலைவுகளும் நாடக வழக்காகப் புனையும் போது, க்ற்பனை காரணமாகப் பாடுதற்குரியனவேயாம்.

இவ் வழுவமைதிகளைச் சிறப்பு விதிகள் என்றும் கூறுவர்.

நாடக வழக்கு - புனைந்துரை வழக்கு. இலக்கியத்தில் புனையும் போது, அழகுபடக் கூறுவதற்காக வரின், இம் மலைவுகள் குற்றமெனக் கருதப்படா.

இடமலைவு, காலமலைவு, கலை மலைவு, உலக மலைவு, நியாய மலைவு, ஆகம மலைவு - ஆகியவை புகழ்வது காரணமாகவோ, புனைந்துரைக்கும் கற்பனை காரணமாகவோ, இயற்கை இகந்து பாடுவது காரணமாகவோ,

பிறவாறான காரணங்களால் மாற்றியும் பாடப்படலாம்.

எனினும் இம் 'மலைவு' களைத் தவிர்ப்பதே, நடப்பிய லாய் இலக்கியத்தைச் சிறப்பிக்கும். அற்புத நவிற்சியாய் இவை வரினும், அறிவுக்குப் புறம்போதல் கூடாது.

## புறனடை

**126.** **மெய்பெற விரித்த செய்யுள் திறனும்**
**எய்திய நெறியும் ஈரைங் குணனும்**
**ஐயெழு வகையின் அறிவுறும் அணியும்**
**அடியினும் சொல்லினும் எழுத்தினும் இயன்று**
**முடிய வந்த மூவகை மடக்கும்**
**கோமூத்திரி முதல் குன்றா மரபின்**
**ஏமுற மொழி மிறைக் கவிஈராறும்**
**இவ்வகை இயற்றுதல் குற்றம் இவ்வகை**
**எய்த இயம்புதல் இயல்பென மொழிந்த**
**ஐவகை முத்திறத்து ஆங்கவை உளப்பட**
**மொழிந்த நெறியின் ஒழிந்தவும் கோடல்**
**ஆன்ற காட்சிச் சான்றோர் கடனே**

இதுகாறும் கூறப்பட்டவையேயன்றி இவைபோல்வன பிறவரினும், இம் முறைப்படியே ஏற்றுக்கொள்க என்பது இது. புறனடை நூற்பா சொல்லியன கொண்டு, சொல்லா தனவும் ஏற்க என எதிர்காலம் நோக்கிக் கூறப்படுவது.

1. முத்தகம் குளகம் தொடர்நிலை முதலிய செய்யுள் மரபு

2. வைதருப்பம் கௌடம் எனும் செய்யுள் நெறிகள்

3. செறிவு, தெளிவு, சமனிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி- பத்துக் குணங்கள்.

4. தன்மை முதலாகப் பாவிகம் ஈறாகக் கூறப்பட்ட முப்பத்தைந்து அணிகள்.

5. அடியினாலும் சொல்லினாலும் எழுத்தினாலும் அமையுமென்ற மூவகை மடக்கணிகள்.

6. கோமூத்திரி முதலாகக் கூறப்பட்ட பன்னிரண்டு மிறைக் கவிகள் - சித்திரகவிகள்.

7. இவையிவை வழுவும் மலைவுமாகுமென்றும் அவற்றையே இவ்வாறும் கூறின் ஏற்கத்தக்க வழக்காகும் என்றும் கூறிய பதினைந்து கூறுபாடுகள்.

இவ்வாறு கூறப்பட்ட இலக்கணம் தவிர, வேறு பல இவை போல வருமெனினும் அவற்றையும் தழுவிக்கொள்ளுதல் அறிவுடைய ஆன்றோர்தம் கடமையாகும்.

வடமொழி நூலில் மாலைமாற்று, சுழிகுளம், கோமூத்திரி, சருப்பதோ பத்திரம் எனும் நான்குமே கூறப் பட்டுள்ளன என்பர் பழைய உரையாசிரியர். இங்கு அது பன்னிரண்டாகவும் கூடுதலாகவும் கூறப்பட்டது, வழி நூலில் விரித்துரைத்தலின் பாற்படும் என்பார் அவர்.

+ + +

## தண்டியலங்காரம்

### நூற்பா முதற் குறிப்பு அகர நிரல்


| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| அடிமுழுது மடக்கனும் | 96 |
| அதுதான் ஓரடி | 93 |
| அதுதான் பொருள் குணம் | 55 |
| அதுவே அடையும் | 53 |
| அதுவே குணம் | 50 |
| அதுவே செம்மொழி | 77 |
| அதுவே பொருள் குணம் சாதி | 30 |
| அதுவே பொருள் குணம் காரணம் | 44 |
| அதுவே மாலை விருத்தம் | 41 |
| அதுவே விரியே | 32 |
| அபாவந்தானும் | 61 |
| அவற்றுள் பிரிபொருள் | 101 |
| அவற்றுள் பெருங்காப் | 8 |
| அவற்றுள் முத்தகச் | 3 |
| அவைதாம் ஒருதிறப் | 11 |
| அவைதாம் வீரமச்சம் | 70 |
| அவையல பிறவின் | 60 |
| அறமுதல் நான்கினும் | 10 |
| அற்புதம் | 33 |
| அன்ன போல | 57 |
| ஆகமம் என்பன | 124 |
| ஆதியிடைகடை | 94 |
| ஆரிடத்துள்ளும் | 116 |
| ஆர்வமொழி | 68 |
| இடமெனப்படுபவை | 119 |
| இரண்டாம் வேற்றுமை | 118 |
| இன்னார்க்கின்னது | 88 |
| உண்ணிகழ்தன்மை | 69 |
| உதாரம் | 21 |
| உய்த்துணர | 110 |
| உரிய பொருள் | 25 |
| உருவகமுவமை | 39 |
| உலகறி காரணம் | 51 |
| உலகெனப்படுவது | 122 |
| உலகொழுக்கு | 23 |
| உவமையும் பெருளும் | 36 |
| உவமைஏது | 38 |
| எவ்வகைப் பொளும் | 28 |
| எழுத்தின் கூட்டம் | 92 |
| என்றும் அபாவமும் | 62 |
| என்னனையுடையாள் | 27 |
| ஏற்ற செய்யுட்கு | 26 |
| ஒப்புமையில்லதும் | 90 |
| ஒரு நிரல் முன் | 109 |
| ஒரு பொருள் துணிய | 107 |
| ஒரு வகைச் சொற் | 76 |
| ஒரு வகை நிகழ்வ | 85 |
| ஒரு வினை பலவினை | 78 |
| ஒழுகிசை | 20 |
| ஓரடி ஒழிந்தன | 95 |
| ஓரெழுத்து | 97 |
| கருதிய குணத்தின் | 80 |
| கருதிய கிளவாது | 72 |
| கருதிய பொருளை | 22 |
| கருதிய பொருள் தொகுத்து | 52 |
| கருதிய பொருள் தொகுத்தாங்கு | 83 |
| கலையெனப்படுபவை | 121 |
| களியினும் | 102 |
| காமமும் அச்சமும் | 104 |
| காலமும் பொழுதொடு | 120 |
| குணம் தொழில் சாதி | 40 |

| நூற்பா | நூற்பா எண் |
|---|---|
| குணம் தொழில் முதலிய | 79 |
| குளகம் பலபாட்டு | 4 |
| குறிப்பு வெளிப்படு | 65 |
| கூறிய நெறியில் | 125 |
| கூறிய உறுப்பில் | 9 |
| கூற்றினும் | 49 |
| கோமூத்திரியே | 98 |
| கௌடமென்பது | 15 |
| சந்திவழுவே | 117 |
| சிறப்பினும் | 75 |
| செய்யுளந்தாதி | 12 |
| செய்யுள் என்பவை | 2 |
| செய்யுள் வழுவே | 115 |
| செறிவெனப்படுவது | 16 |
| செறிவே தெளிவே | 14 |
| சொல்லினும் | 19 |
| சொல்லின் கிழத்தி | 1 |
| சொல்வழு | 111 |
| தன்மையுவமை | 28 |
| தான்தற்புகழ்வது | 71 |
| தூரகாரியமும் | 63 |
| தெரிவேறு | 84 |
| தெளிவெனப்படுவது | 17 |
| தொகை நிலை | 5 |
| தொகையே விரியே | 37 |
| நியாயமென்பது | 123 |
| நிரல்நிறுத்து | 67 |
| பண்பும் தொழிலும் | 31 |
| பழிப்பது போலும் | 94 |
| பாவிகம் என்பது | 91 |
| பிரிபொருள் | 99 |
| புகழினும் | 21 |
| புகழ்வது போல | 66 |
| பெயர் பொருள் | 56 |
| பெருங்காப்பியமே | 7 |
| பொருளினும் சொல்லி | 6 |
| பொருள் பரிமாறுதல் | 87 |
| போல மான | 35 |
| மனப்படும் ஒருபொருள் | 54 |
| மாறுபடு சொற்பொருள் | 82 |
| மாறுபடு பொருள்மொழி | 103 |
| மிகுதலும் குறைதலும் | 34 |
| முதல்வனும் | 59 |
| முந்துதான் | 73 |
| முழுவதும் சேறல் | 48 |
| முன்வருஞ் சொல்லும் | 42 |
| முன்னத்தின் | 43 |
| முன்னொன்று தொடங்கி | 49 |
| மெய்பெறவிரித்த | 126 |
| மெய்பெறு மரபின் | 13 |
| மேற்கொள் ஏது | 100 |
| மொழிந்தது மொழிவே | 105 |
| மொழியப்பட்ட | 89 |
| யதி வழு | 113 |
| யாதன் திறத்தினும் | 58 |
| வகையுளி | 114 |
| வலியெனப்படுவது | 24 |
| வழக்காறாயின் | 112 |
| வழுஉப்படல் | 108 |
| வன்சொல்வாழ்த்து | 45 |
| வியத்தகு | 74 |
| விரவத்தொடுப்பது | 18 |
| விரைவினும் | 106 |
| வினைபண்பென | 86 |
| வேற்றுப்பொருள் | 46 |

## தமிழண்ணல் டாக்டர். இராம. பெரியகருப்பன்

| | |
|---|---|
| ஆய்வியல் அறிமுகம் | 125.00 |
| புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | 75.00 |
| தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் | 90.00 |
| திருக்குறள் - நுண்பொருள் உரை | 120.00 |
| திருவள்ளுவர் அருளிய திருக்குறள் - தெளிவுரை | 50.00 |
| திருக்குறள் தெளிவுரை | 30.00 |
| குறிஞ்சிப் பாட்டு - இலக்கியத் திறனாய்வு | 35.00 |
| ஒப்பிலக்கிய அறிமுகம் | 55.00 |
| சொல் புதிது சுவை புதிது | 20.00 |
| தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? | 25.00 |
| கம்ப நாடகம் | 30.00 |
| இனிய தமிழ் மொழியின் இயல்புகள் 3 & 4 | 9.00 |
| திருவள்ளுவரின் மனிதநேயம் | 12.00 |
| வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம் | 15.00 |
| இளைஞர் வாழ்வில் திருக்குறள் | 25.00 |
| பரிசில் வாழ்க்கை | 25.00 |
| சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள் | 130.00 |
| சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கிய வகைகள் | 75.00 |
| நன்னூல் - எழுத்ததிகாரம் - புதிய முறை எளிய உரை | 60.00 |
| நன்னூல் - சொல்லதிகாரம் - புதிய முறை எளிய உரை | 75.00 |
| தண்டியலங்காரம் - புதிய முறை எளிய உரை | 60.00 |
| யாப்பருங்கலக் காரிகை - புதிய முறை எளிய உரை | 70.00 |
| தொல்காப்பியம் | 65.00 |
| உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் | 80.00 |
| தொல்காப்பியத் தமிழ் நெறிகள் | 10.00 |
| தொல்காப்பியச் சுடர்மணிகள் | 10.00 |
| தொல்காப்பியச் சொற்சுவைகள் | 10.00 |
| குறுந்தொகை அரும்புகள் | 50.00 |
| நற்றிணை மலர்கள் | 50.00 |
| சங்க மரபு | 175.00 |
| வாழ்க்கை விழுமியம் வாழ்விக்கும் தமிழியம் | 10.00 |
| உள்ளங்கள் ஒன்றிடும் அன்றில் பறவைகள் | 10.00 |
| உச்சத்தைத் தொடும் உணர்ச்சி ஓவியங்கள் | 10.00 |
| மனத்தைக் கவரும் மாணிக்கப் பரல்கள் | 10.00 |



## தமிழை அறிவோம்; தமிழராவோம்

## தமிழறிவோரே தமிழர்களாவார்

### தமிழ் மொழிப் பயிலக வெளியீடுகள்

| | |
|---|---|
| தொல்காப்பியம் | 65.00 |
| உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள் | 80.00 |
| குறுந்தொகை அரும்புகள் | 50.00 |
| நற்றிணை மலர்கள் | 50.00 |
| சங்க மரபு | 175.00 |
| ஆய்வியல் அறிமுகம் | 125.00 |
| புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | 75.00 |
| தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் | 90.00 |
| திருக்குறள் - நுண்பொருள் உரை | 120.00 |
| திருவள்ளுவர் அருளிய திருக்குறள் - தெளிவுரை | 50.00 |
| திருக்குறள் தெளிவுரை | 30.00 |
| குறிஞ்சிப் பாட்டு - இலக்கியத் திறனாய்வு | 35.00 |
| ஒப்பிலக்கிய அறிமுகம் | 55.00 |
| சொல் புதிது சுவை புதிது | 20.00 |
| தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா? | 25.00 |
| கம்ப நாடகம் | 30.00 |
| இனிய தமிழ் மொழியின் இயல்புகள் 3 & 4 | 9.00 |
| திருவள்ளுவரின் மனிதநேயம் | 12.00 |
| வாழ்க்கைக்கு ஒளிதரும் வள்ளுவம் | 15.00 |
| இளைஞர் வாழ்வில் திருக்குறள் | 25.00 |
| பரிசில் வாழ்க்கை | 25.00 |
| சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள் | 130.00 |
| சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கிய வகைகள் | 75.00 |
| நன்னூல் - எழுத்ததிகாரம் - புதிய முறை எளிய உரை | 60.00 |
| நன்னூல் - சொல்லதிகாரம் - புதிய முறை எளிய உரை | 75.00 |
| தண்டியலங்காரம் - புதிய முறை எளிய உரை | 60.00 |
| யாப்பருங்கலக் காரிகை - புதிய முறை எளிய உரை | 70.00 |